ஆண்டறிக்கையும் கணக்குகளும்

2021



இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

குறிக்கோள்

சர்வதேசத் தரமுடைய பல்கலைக்கழகமாகத் திகழும் வகையில் தேசத்தைக் கட்டியெழுப்பக் கூடிய ஆற்றல் மிக்க தலைவர்களை உருவாக்கும் கேந்திர நிலையமாக விளங்குதல்.

இலக்கு

அறிவைத் தேடுவதற்கும் பரப்புவதற்கும், நடைமுறைத் திறன்கள் மற்றும் நேர்மறையான மனப்பாங்குகளை செயல்படுத்துவதில் திறமை மிக்க ஆண்களையும் பெண்களையும் உருவாக்க கற்றல், ஆராய்ச்சி மற்றும் பயிற்சியினை ஊக்குவித்தல். இப்பல்கலைக்கழகமானது இலங்கை மற்றும் இலங்கையின் சபரகமுவ மாகாணத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான சிறப்பு மையமாக விளங்கும்.

குறிக்கோள்கள்

உயர் கல்வி கற்றலில் சிறப்பான ஒரு மையமாக இருத்தல்.

நாட்டின் வளர்ச்சித் தேவைகளுக்கு ஏற்ப பட்டதாரிகளை உருவாக்குதல்.

பணியாளர்களினதும் மாணவர்களினதும் ஆளுமை வளர்ச்சியை மேம்படுத்துதல்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையில் சர்வதேச அளவில் பாராட்டுகளைப் பெற்ற பிராந்திய நிறுவனம் என்ற அந்தஸ்தை அடைதல்.

தேசிய மட்டத்திலான தேவைகளுக்கு ஏற்ற துறைகளில் தொழிற்சார் நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்தும் மேம்படுத்தல்.

பிராந்தியத்தில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஒரு வள மையமாக இருத்தல்.

பல்கலைக்கழக இலச்சினையானது வலயத்தையும் பல்கலைக்கழத்தினால் சேவை வழங்கப்படும் மக்களையும் நிலவும் முன்மாதிரிகளையும் குறித்துக் காட்டும். மரபார்ந்த விளக்குச் சிட்டிகையும் அதன் சுடரும் அறிவையும் ஞானத்தையும் குறிக்கும்

நூல்	கல்வி
சமனல கந்த	சபரகமுவ பிரதேசம்
இரத்தினம்	இரத்தினபுரி மாவட்டம்

பல்கலைக்கழகக் கொடி



பல்கலைக்கழகக் கொடி மெரூன், பொன் ஆகிய இரு வண்ணங்களால் ஆனது. மெரூன் நிறம் பண்பட்ட தன்மையையும் பொன்னிறம் ஒழுக்கத்தையும் குறித்து நிற்கின்றன. கொடியின் மையப் பகுதியில் பல்கலைக்கழக இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது

பல்கலைக்கழக கீதம்

මේ ඔබේ සවියයි
(Me Obe Sawiyai)
මේ මගේ සවියයි
(Me Mage Sawiyai)
සබරගමුව සරසවියයි ..... //
(Sabaragamuwa Sarasawiyai.....) //


සමනල වැව පිපි නෙළුම් නෙලා ගෙන
(Samanala Wewa Pipi Nelum Nelagena)
ගිරිකුළු වන රද මතින් ගලා යන
(Girikula Wanarada Mathin Galayana)
ජීවිතයේ කඳු මුදුන් සොයා ගෙන
(Jeewithaye Kandu Mudun Soyagena)
හාගල කන්ද නගින්නේ ..... //
(Hagala Kanda Naginne.....) //

සිරිපා පහනින් එළිය ලබා ගෙන
(Siripa Pahanin Eliya Labagena)
මනරම් විදුණැන අකුරු දරාගෙන
(Manaram Widunana Akuru Daragena)
කළුගං පතුලේ රුවන් සොයාගෙන
(Kalugan Pathule Ruwan Soyagena)
උඩුගම් බලා ඇදෙන්නේ ..... //
(Udugam Bala Adenne.....) //

දෙරණේ උරුමය ලොවට බෙදාගෙන
(Derane Urumaya Lowata Bedagena)
සිප් කගගින් රුදු අඳුර නසාගෙන
(Sip Kagagin Rudu Andura Nasagena)
ඔබෙත් මගෙත් හීනය කලඑළි වන
(Obeth Mageth Heenaya Kalaeli Wana)
දිනය උදා වන්නේ ..... //
(Dinaya Uda Wanne.....) //

මේ ඔබේ සවියයි
(Me Obe Saawiyai)
මේ මගේ සවියයි
(Me Mage Sawiyai)
සබරගමුව සරසවියයි ..... //
(Sabaragamuwa Sarasawiyai.....) //

பல்கலைக்கழக வரைபடம்



துணைவேந்தரின் மதிப்பாய்வு – 2021



இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகமானது ஒரு தேசியப் பல்கலைக்கழகமாகத் தனது 25 வருடகால வெள்ளிவிழாவினைக் கொண்டாடும் ஒரு தருணத்தில் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைக்காக இச்செய்தியை அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகமானது கொழும்பிலிருந்து 162 கிலோமீட்டர் தொலைவிலே கொழும்பு - பதுளை ஏ4 அதிவேக நெடுஞ்சாலை ஊடறுத்துச் செல்லும் பெலிஹ{லோயா நகருக்கு அண்மையில் அமைந்துள்ளது. இந்தப் பல்கலைக்கழகம் சுமார் 267 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

இப்பல்கலைக்கழகம் தற்போது எட்டு (8) பீடங்களைக் கொண்டமைந்துள்ளது. பட்டதாரிக் கற்கைகள் பீடம், விவசாய விஞ்ஞான பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், வரைபட (கேத்திர) கணித பீடம், முகாமைத்துவக் கற்கைகள் பீடம், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம், தொழினுட்பவியல் பீடம், மருத்துவ பீடம் என்பனவே அவையாகும். மருத்துவ பீடமானது இரத்தினபுரியிலே குருவிட்ட பிரதேசத்தில் அமைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் உள்ளக மாணவர்களின் எண்ணிக்கை 6880 ஆகும். இவ் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு உள்ளீர்க்கப்பட்ட உள்ளக ,ளங்கலைமாணவர்களின் எண்ணிக்கை 2219 ஆகவும், பட்டப்பின் படிப்பிற்காக உள்ளீர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 649 ஆகவும் அமைந்துள்ளன. மேலும், திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்றல் மையத்தினால் நடாத்தப்படும் கற்கை நெறிகளுக்காக 3454 மாணவர்கள் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பல்கலைக்கழகமானது தனது மொத்த ஊழியர் படையில், 317 கல்வியாளர்களையும், 34 நிர்வாகம் மற்றும் செயற்குழு ஊழியர்களையும், 23 கல்வித்துறைசார் உதவி ஊழியர்களையும் 395 கல்விசாரா பணியாளர்களையும் உள்ளடக்கியுள்ளது.

கொவிட் – 19 பெருந்தொற்றுக் காரணமாக நாட்டின் கல்வித்துறையின் அனைத்து நிறுவனங்களும் தமது கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளில் பாரிய சவாலை எதிர்நோக்கியிருந்தன. ,ருப்பினும் புத்தாக்கம் மற்றம் திறமை வாய்ந்த கல்வியாளர்கள், நிர்வாகம் மற்றும் கல்விசாரா பணியாளர்களின் பாரட்டத்தக்க அர்ப்பணிப்பான சேவை மற்றும் மாணவர்களின் சிறப்பான ஒத்துழைப்புடன் பல்கலைக்கழக விரிவுரை, செய்முறை மற்றும் பரீட்சைகள் உள்ளடங்கலாக அனைத்து கற்றல் செயற்பாடுகளும் மாற்று வழிகள் மூலம் நிறைவேற்றப்பட்டன.

பல்கலைக்கழகத்தின் பௌதீக செயற்பாடுகள் ஆண்டு முழுவதும் எவ்வித ,டைநிறுத்தல்களுமின்றி நடாத்திச் செல்லப்பட்டன. அவையாவன பிரயோக விஞ்ஞான பீடம் (ரூ.453மி), விவசாய விஞ்ஞான பீடம் (ரூ.798மி), வைத்திய பீடம் (ரூ.1014மி), தொழில்நுட்ப பீடம் (ரூ.2050மி), பல்கலைக்கழக நூலகம் (ரூ.315மி), ஆகியவற்றின் கட்டட நிர்மாணம் மற்றும் யுர்நுயுனு செயற்றிட்டத்தின் கீழ் பிரயோக விஞ்ஞான பீடம் (ரூ.43மி), சமூக விஞ்ஞான மற்றும் மொழிகள்; பீடம் (ரூ.31மி), முகாமைத்துவ கற்கைகள் பீடம் (ரூ.43மி) மற்றும் ஹெலபோஜன் கட்டுமானம், பல்கலைக்கழகத்தின் உள்ளக வீதி வலையமைப்பை புதுப்பித்து அபிவிருத்தி செய்தல், விவசாய பண்ணையில் மேற்க்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள், கும்பல்கமவில் அமைந்துள்ள பசுமைப்பூங்கா, உத்தியோகத்தர்களின் தங்குமிட புனரமைப்பு, மற்றும் எல்லைச்சுவர் நிர்மாணங்கள் போன்றன மேற்கொள்ளப்பட்டன. மேலும், வளமுகாமைத்துவ கட்டடத்திற்கான வடிவமைப்பு, கழிவு நீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்;, மூன்று புதிய பீடங்களான தகவல் தொடர்பாடல், விளையாட்டு மற்றும் கால்நடை வைத்தியம் போன்றவற்றிற்கான கருத்திட்டங்களை சமர்ப்பிப்பதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கும் மாணவர்கள் மற்றும் கல்வி ஊழியர்களுக்கு வசதிகளை வழங்கவும் பல்கலைக்கழகம் நடவடிக்கை மேற்கொண்டது. 2021 ஆம் ஆண்டில், நான்கு சர்வதேச மாநாடுகள் மற்றும் மூன்று ஆராய்ச்சி மாநாடுகள் நடத்தப்பட்டன. மேலும், பல்கலைக்கழக ஊழியர்களால் 16 வெளிப்புற நிதியுதவி ஆராய்ச்சி திட்டங்களுக்காக கிட்டத்தட்ட ரூ.500 மில்லியன் ஆராய்ச்சி நிதியைப் பெற முடிந்தது. இந்த ஆண்டில் 15 காப்புரிமை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதோடு ஆராய்ச்சிகளின் முடிவுகளை வணிகமயமாக்குவதற்காக தொழில்துறை பங்குதாரர்களுடன் 9 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. மேலும், 2021 ஆம் ஆண்டில் இரண்டு புதிய ஆராய்ச்சி இதழ்களும் தொடங்கப்பட்டன..

ளுஆயுசுவு பல்கலைக்கழக கருத்திட்டத்தி;ன் கீழ், மாணவர்களின் தகவல் முகாமைத்துவம், பல்கலைக்கழக ஊழியர்களின் தகவல் முகாமைத்துவம் மற்றும் பௌதீக வளங்களின் முகாமைத்துவம் போன்றவற்றை நிர்வகிப்பதற்கான முறைமைகள் உருவாக்கப்பட்டன. சிரேஷ்ட நிர்வாகக் குழு, மாணவர் ஆதரவு சேவைகள் மற்றும் நலன்புரி அமைப்பு போன்ற பல்வேறு நிர்வாக அமைப்புகளை நிறுவுவதன் மூலம் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தை மிகவும் பயனுள்ளதாகவும் திறமையாகவும் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சமூகத்திற்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக, ஊழியர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில் வருடத்தில் 66 பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

கொவிட் 19 தொற்று நிலைமை இருந்தபோதிலும், பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் குறிப்பிடத்தக்க சேவை மற்றும் அர்ப்பணிப்பின் விளைவாக 2021 ஆம் ஆண்டில் சபரகமுவ பல்கலைக்கழகம் வெற்றிகரமான சேவையை ஆற்றமுடிந்தது. மேலும், ஆண்டு முழுவதும் தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய தலைமைத்துவத்தையும் ஆதரவையும் வழங்கிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றை நன்றியுடன் பாராட்டுவதோடு அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரா. R.M.U.S.K. ரத்னாயக்க

துணைவேந்தர்

உள்ளடக்கம்

1. பல்கலைக்கழகம்
   - 1.1 பல்கலைக்கழக வரலாறு 13
   - 1.2 அறிமுகம் 14
   - 1.3 வேந்தர் 16
   - 1.4 பல்கலைக்கழக அதிகாரிகள் 16
   - 1.5 பேரவை 19
   - 1.6 மூதவை 21
   - 1.7 நிறுவன அமைப்பு 27

2. பீடங்கள்
   - 2.1 பட்டதாரிக் கற்கைகளுக்கான பீடம் 28
   - 2.2 விவசாயவிஞ்ஞான பீடம் 36
   - 2.3 பிரயோக விஞ்ஞான பீடம் 41
   - 2.4 வரைபட (கேத்திர) கணித பீடம் 49
   - 2.5 முகாமைத்துவக் கற்கைகள் பீடம் 52
   - 2.6 மருத்துவ பீடம் 54
   - 2.7 சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் 58
   - 2.8 தொழினுட்பவியல் பீடம் 62

3. கற்பித்தல் வளங்கள்
   - 3.1 நூலகம் 64
   - 3.2 கணினி விஞ்ஞானக் கற்கைகளுக்கான நிலையம் 69
   - 3.3 உடற்கல்வித் துறை 83

4. கற்கை நிலையங்கள்
   - 4.1 தொழில் வழிகாட்டல் அலகு 92
   - 4.2 திறந்த மற்றும் தொலைக் கல்வி கற்றல் மையம் 96
   - 4.3 பழங்குடிச் சமூகக் கற்கைகளுக்கான மையம் 101
   - 4.4 பணியாளர்கள் மேம்பாட்டு நிலையம் 103
   - 4.5 ஆய்வு மற்றும் அறிவுப் பரவலாக்கத்துக்கான நிலையம் 109
   - 4.6 உள்ளக தர உத்தரவாத மையம் (CQA) 114
   - 4.7 பல்கலைக்கழக வணிக இடைத்தொடர்புக் கூடம் (UBLC) 143
   - 4.8 பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலைக்கான மையம் 155

5. உள்வாரியான புதிய (உள்நாட்டு/வெளிநாட்டு) மாணவர் நுழைவும் மாணவர் பதிவும் (மொத்த மாணவர்களில்)
   - 5.1 உள்நாட்டு மாணவர்களுக்கான உள்வாரிப் பட்டக் கற்கை நெறிகளுக்கான புதிய நுழைவு 159
   - 5.2 பட்டக் கற்கைநெறிகளுக்காக உள்வாரியான புதிய (உள்நாட்டு) மாணவர் நுழைவு 163

5.3 பட்டதாரிக் கற்கைநெறிகளுக்காக வெளிநாட்டு மாணவர் நுழைவு – (மொத்த மாணவர் எண்ணிக்கை) 173

6. பட்டப்பின் கற்கைநெறிகளுக்கான உள்வாரியான புதிய மாணவர் நுழைவு மற்றும் மாணவர் பதிவு (மொத்த மாணவர்களில்)
6.1 பட்டப்பின் கற்கைநெறிகளுக்கான உள்ளூர் மாணவர்களின் புதிய நுழைவு மற்றும் மாணவர் பதிவு (மொத்த மாணவர்களில்) 174

7. தேர்வுத் தரவு
7.1 உள்வாரிப் பட்டதாரி மாணவர் பெறுபேறுகள் 176
7.2 வெளிவாரி பட்டதாரி மாணவர் பெறுபேறுகள் 177
7.3 பட்டப்பின் கற்கை மாணவர் பெறுபேறுகள் 178
7.4 ஏனைய வெளிவாரி கற்கை நெறிகளின் பெறுபேறுகள் 179

8. மனித வளத் தரவுகள்
8.1 ஒப்புதல் அளிக்கப்பட்ட பதவிநிலையும் தற்போதைய ஊழியர்களும் 180
8.2ஒப்புதல் அளிக்கப்பட்ட பதவிநிலையும் தற்போதைய கல்வியாளர்களும் 183
8.3. பட்டதாரி/பட்டப்பின் கற்கை மாணவர்களுக்குக் கற்பிக்குமுகமாக/ ஆய்வரங்கு/பயிலரங்குகளுக்காக வருகைதரும் வெளிநாட்டுக் கல்வியாளர்கள் பற்றிய விபரம்-2020 195
8.4 பல்கலைக்கழகக் கல்வியாளர்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு புலமைப்பரிசில்கள், கூட்டுறவுகள், பயிற்சிச் செயற்திட்டங்கள்-2021 196
8.5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்கள்/ஆய்வு நிறுவனங்கள் / நிதி முகவர்கள் பற்றிய விபரம் - 2021 197
8.6 கல்விசார், நிர்வாக, கல்விசார் உதவி ஊழியர்களில் பட்டப்பின் கற்கைகளுக்காகப் (உள்நாடு/ வெளிநாடு) பதிவுசெய்தவர்கள்- 2021 199
8.7 கல்விசார், நிர்வாக, கல்விசார் உதவி ஊழியர்களால் பூர்த்திசெய்யப்பட்ட பட்டப்பின் கற்கைத் தகைமைகள் –2021 201

9. கட்டுமானப் பணிகள்
9.1 பூர்த்தி செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் 202
9.2 தொடர்கின்ற/ தற்போதைய செயற்றிட்டங்களின் புனநிர்மாணப் பணிகள் 2021 203
9.3 அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நடைபெற்று வரும் செயற்றிட்டங்கள் 204
9.4 புனர்நிர்மாணங்கள்-புதிய செயற்றிட்டங்கள் 205

9.5 அமைச்சரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட/ செயற்றிட்டங்கள்/ கருத்திட்டங்களை தயாரிக்கும் புதிய செயற்றிட்டங்கள் 206

10. ஆய்வு வெளியீட்டுத் தரவுகள்
10.1 கல்வியாளர்களின் வெளியீடுகளின் எண்ணிக்கை - 2021 207
10.2 (தரப்படுத்தப்பட்டதும் தரப்படுத்தப்படாததுமான) ஆய்விதழ்களில் வெளியான பரிந்துரைக்கப்பட்ட ஆக்கங்களின் பட்டியல் – 2021 212
10.3 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி வெளியீட்டின் விவரங்கள் - 2021 265
10.4 காப்புரிமை விவரங்கள் – 2021 266
10.5 பொது மக்களிடையே இடம்பெற்ற அறிவுப் பரவலாக்கம் பற்றிய தரவுகள் - 2021 267
10.6 தேசிய/சர்வதேச ரீதியாகப் பெறப்பட்ட விருதுகள்- 2021 285

11. விடுதித் தரவுகள் – 2020
11.1 பீடவாரியாக விடுதி வசதிகள் பெற்ற மாணவர் தொகை - 2021 291
11.2 நிரந்தர விடுதிகள் 291
11.3 வாடகை விடுதி வசதிகள் 292

12. மகாபொல புலமைப்பரிசில், பேர்ஸரி உதவித்தொகை பற்றிய தரவுகள்
12.1 மகாபொல புலமைப்பரிசில் 295
12.2 பேர்ஸரி உதவித்தொகை 295
12.3 மகாபொல புலமைப்பரிசில், பேர்ஸரி உதவித்தொகை பெற்றுக்கொள்ளும் மாணவர் தொகை 2021 295
13. வருடாந்தக் கணக்கீடுகள் - 2021 298
14. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு – 2021 336
15. கணக்காய்வு அறிக்கை – 2021 337
16. கணக்காய்வு மறுமொழி – 2021 349

1. பல்கலைக்கழகம்

1.1 பல்கலைக்கழகத்தின் வரலாறு



இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் (இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்) வரலாற்றை நோக்கும் போது ஆரம்பத்தில் 1991 ஆம் ஆண்டில் பெலிஹுலோயாவில் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியாகவே நிறுவப்பட்டுள்ளமையை அறியலாம். 1995 ஆம் ஆண்டில் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சரால் நாட்டில் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளை மீண்டும் கட்டமைக்கும் சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டது. குறித்த குழுவினரின் பரிந்துரைகளுக்கு இணங்க ரஹங்கல மற்றும் புத்தலையில் அமைந்துள்ள மற்ற இரண்டு இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளுடன் ஒன்றிணைப்பதன் மூலம் சபரகமுவ இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியை ஒரு தேசிய பல்கலைக்கழகத்தின் நிலைக்கு உயர்த்த அரசாங்கம் முடிவு செய்தது. அது சபரகமுவ பல்கலைக்கழகத்தின் ஊவா வளாகம் என மறுபெயரிடப்பட்டது. ஒருங்கிணைப்பதற்கு முன்பு பெலிஹுலோயா மற்றும் புத்தலையில் உள்ள இணைந்த கல்லூரிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. அத்துடன், ரஹங்கல இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி பேராதெனிய பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. ஒருங்கிணைந்த மூன்று பல்கலைக்கழகக் கல்லூரிகளையும் ஒன்றிணைத்து 1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி சபரகமுவ பல்கலைக்கழகம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

அதையடுத்து, ரஹங்கல மற்றும் புத்தலையில் உள்ள இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகள் விவசாய விஞ்ஞான பீடம் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடங்களாக மாற்றப்பட்டு முறையே 2001 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் பெலிஹுலோயா பிரதான வளாகத்திற்கு மாற்றப்பட்டன.

1.2 அறிமுகம்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் சமனலவெவ நீர்த்தேக்கத்திற்கு இடது புறத்தில், கொழும்பு - பதுளை நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 160 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.



இப்பல்கலைக்கழகம் எட்டு (08) கற்கைப் பீடங்களைக் கொண்டுள்ளது. அவையாவன வருமாறு:

- பட்டதாரிக் கற்கைகள் பீடம்
- விவசாய விஞ்ஞான பீடம்
- பிரயோக விஞ்ஞான பீடம்
- வரைபட (கேத்திர) கணித பீடம்
- முகாமைத்துவக் கற்கைகள் பீடம்
- மருத்துவ பீடம்
- சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
- தொழினுட்பவியல் பீடம்

இந்த எட்டு பீடங்களுடன், ஒன்பது கற்கை மையங்களும் உள்ளன. அவை பின்வருமாறு:

- கணினி ஆய்வுகளுக்கான மையம்
- தொழில் வழிகாட்டல் பிரிவு
- திறந்த மற்றும் தொலைக் கல்வி மையம் ((CODL)
- ஊழியர் மேம்பாட்டு மையம் (SDC)
- பழங்குடிச் சமூகக் கற்கைகளுக்கான மையம்
- ஆராய்ச்சி மற்றும் அறிவுப் பரவலுக்கான மையம்
- உள்ளக தர உத்தரவாத மையம்
- பல்கலைக்கழக வணிக இணைப்பாக்கப் பிரிவு
- பல்கலைக்கழக நூதனசாலை

பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் மாணவர் நலன்கருதி வழங்கப்பட்டுள்ள வசதிகள் வருமாறு:

- அனைத்து மாணவர்களுக்குமான விடுதி வசதிகள்
- ஊழியர்களுக்கான வதிவிட வசதிகள்
- ஆயுர்வேத வைத்திய நிலையம்
- முன்பள்ளி



- விவசாய பீட பண்ணை வதிவிடம்
- விருந்தினர் விடுதிகள்
- மருத்துவ நிலையம்

- விளையாட்டு மைதானம் மற்றும் உடற்பயிற்சி மையம்
- "சித் அரன" உளவள ஆலோசனை மையம்

பல்கலைக்கழகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட வருடாந்தக் கருத்தரங்குகள்:

- இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் சர்வதேசக் கருத்தரங்கு (ICSUSL)
- விவசாய விஞ்ஞானத் துறைகளுக்கான சர்வதேசக் கருத்தரங்கு (AgInsight)
- வருடாந்த ஆய்வு அமர்வுகள் (ARS)
- முகாமைத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேசக் கருத்தரங்கு (ICMR)
- சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடத்தின் மாணவர் ஆய்வு அமர்வு (SRS)
- முகாமைத்துவ இளமாணி மாணவர்களுக்கான ஆய்வு அமர்வு (MURS)

1.3 வேந்தர்

வண. பேராசிரியர் கும்புறுகமுவே வஜிர தேரர்

1.4 பல்கலைக்கழக அதிகாரிகள்

பல்கலைக்கழகக் கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் 1978 ஆம் ஆண்டின் திருத்தச் சட்ட இலக்கம் 16 இன்படி அமைந்த பல்கலைக்கழக அதிகாரிகள் பற்றிய விபரம் வருமாறு:

துணை வேந்தர்

பேராசிரியர் R.M.U.S.K. ரத்னாயக்க
BSc. Hons (Sp.) in Agriculture (RUH), MSc (Biotechnology) (PDN), PhD (AIT) Thailand

பீடங்களின் தலைவர்கள்

பீடாதிபதி, பட்டதாரிக் கற்கைகள் பீடம்

பேராசிரியர் H.M.S. ப்ரியநாத்
BA (SJP), MA (SJP), PhD (CMB)

பீடாதிபதி, விவசாய விஞ்ஞான பீடம்

பேராசிரியர் P.M.A.S. கருணாரத்ன

BScHons (Agriculture) (PDN), MPhil (Crop Physiology) (PDN), PhD (Crop Modelling) (University of Nottingham, United Kindom)

(05.10.2021 முதல்)

பேராசிரியர். D.A.M. டி சில்வா (பதில் பீடாதிபதி)

BSc (RUH), MBA (Agribusiness Management) (PDN), PhD (Food & Resource Economics) (Hiroshima University – Japan)

(14.09.2021 முதல் 04.10.2021 வரை)

பேராசிரியர் . M.M.P. சுமித்

BVSc (Sri Lanka), MSc (Kobe - Japan), PhD (Kobe – Japan)

(13.09.2021 வரை)

பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம்

கலாநிதி. R.S. சபரகமுவ

BScHons (Sp.) (PDN), MPhil (PDN), PhD (UOA, New Zeeland)

பீடாதிபதி, வரைபட (கேத்திர) கணித பீடம்

திரு. P.G விபுல அபேரத்ன

BSc (Surveying Geodesy, Photogrammetry), MSc (Photogrammetry and Geoinformatics, Stuttgart University of Applied Sciences, Germany)

(26.03.2021 முதல்)

கலாநிதி H.M. இந்திக பிரசன்னா

BScHons (Surveying Sciences) (SUSL), MPhil

(Geodesy) (SJP), PhD (Geodesy) The Polytechnic University, Hong Kong

(25.03.2021 வரை)

பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் பீடம்

பேராசிரியர் W.K. அதுல C. ஞானபால

BSc (Tourism Management) (SUSL), MSc (SJP), PhD (Xiamen-P R, China)

பீடாதிபதி மருத்துவ பீடம்

பேராசிரியர் M. N. விக்ரமரத்ன

PhD in Biochemistry Loyola University, Chicago Chicago, Illinois USA

பீடாதிபதி, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
கலாநிதி M.A.C.S.S. *ஃபெர்னாண்டோ*
BSc Hons (Statistics) (SJP), MPhil (PDN), PhD (University of Auckland)

பீடாதிபதி தொழினுட்பவியல் பீடம்
கலாநிதி A.D. அம்பிட்டியாவத்த
BSc (Agriculture) (RUH), MSc (Agriculture) (PDN), D.Eng (Water Resource Engineering) (Wuhan, PR China)

பதிவாளர்

திரு. சமன் உயன்கொட
BA (Sp. Geography) (SJP), MSSc (Geography) by research (KLN), MPM (SLIDA), PGM in Public Management) (SLIDA), PGD in e-Government (PIM)
(29.07.2021 முதல்)

திரு. J.G.P.U. ரத்னாயக்க (பதில் பதிவாளர்)
BSc, MSc in Agriculture Organisational Management (PDN)
(01.04.2021 – 28.07.2021

திரு. கமல் குணவர்தன
BSc, MBA (Human Resource Management) (OUSL)
(31.03.2021 வரை)

நூலகர்

திருமதி. T.N. ஞெய்சூரி
BA (KLN), MSSc (LIS) (KLN), Chartered நூலகர்

பொருளாளர்

திரு. சேனாதீர (பதில் பொருளாளர்)
BBM (KLN)

1.5 பேரவை

பல்கலைக்கழகக் கட்டளைச் சட்டப் பிரிவு 44 இன், 1978 ஆம் ஆண்டுக்கான 16 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமைந்த, பல்கலைக்கழகத்தின் ஆளும் அதிகார அலகான பேரவையானது, பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கி செவ்வையாக்கம் செய்யப்பட்டது:

முன்னாள் அலுவலக உறுப்பினர்கள்

பேராசிரியர் R.M.U.S.K. ரத்னாயக்க	துணைவேந்தர் – தலைவர்
பேராசிரியர் H.M.S. ப்ரியநாத்	பீடாதிபதி-பட்டதாரிக் கற்கைகள்
பேராசிரியர் P.M.A.S. கருணாரத்ன	பீடாதிபதி, விவசாய விஞ்ஞான பீடம் (05.10.2021 முதல்)
பேராசிரியர். D.A.M. டி சில்வா	பதில் பீடாதிபதி, விவசாய விஞ்ஞான பீடம் (14.09.2021-04.10.2021)
பேராசிரியர் . M.M.P. சுமித்	பீடாதிபதி, விவசாய விஞ்ஞான பீடம் (13.09.2021 வரை)
கலாநிதி. R.S. சபரகமுவ	பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம்
திரு. P.G விபுல அபேரத்ன	பீடாதிபதி,வரைபட (கேத்திர) கணித பீடம் (26.03.2021 முதல்)
கலாநிதி H.M. இந்திக பிரசன்னா	பீடாதிபதி,வரைபட (கேத்திர) கணித பீடம் (25.03.2021 வரை)
பேராசிரியர்.W.K.அதுல C.ஞானபால	பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் பீடம்
பேராசிரியர் M. N. விக்ரமரத்ன	பீடாதிபதி, மருத்துவ பீடம்
கலாநிதிM.A.C.S.S. ஃபெர்னாண்டோ	பீடாதிபதி, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
கலாநிதி A.D. அம்பிட்டியாவத்த	பீடாதிபதி, தொழினுட்பவியல் பீடம்

மூதவைப் பிரதிநிதிகள்

பேராசிரியர். T.S.P. ஜயவீர	விவசாய விஞ்ஞான பீடம் (11.05.2021 முதல்)
கலாநிதி சமன் கொஸ்வத்த	வரைபட (கேத்திர) கணித பீடம்

	(27.04.2021 வரை)
பேராசிரியர் K.V.D.E. மெனிகே	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள்பீடம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கு குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

வண. கரகொட உயங்கோட மைத்ரி மூர்த்தி மகா நாயக்க தேரர்
பேரா. வண. கொன்கஸ்தென்ன ஆனந்த தேரர்
வண. அனுநாயக்க தம்பஹல சீலானந்த தேரர்
பேரா. A. பமுனு ஆராச்சி
திரு. பியதிஸ்ஸ ரணசிங்க
திரு. M.M. ரஃபீக்
திரு. H.W. குணதாச
திரு. திலக் தர்மரத்ன
கலாநிதி அனோஜா ரொட்ரிகோ
திரு. W.M.S.S. வீரசேகர
Ms. ரஞ்சனி ஜயகொடி (27.09.2021முதல்)
திரு. தேசபந்து சூரியபட்டபந்தி

பேரவைச் செயலாளர்

திரு. சமன் உயன்கொட
(29.07.2021 முதல்)

திரு. J.G.P.U. ரத்னாயக்க (பதில் பதிவாளர்)
(01.04.2021 – 28.07.2021)

திரு. கமல் குணவர்தன
(31.03.2021 வரை)

2021 ஆம் ஆண்டில் பேரவை 14 கூட்டங்கள் மற்றும் 1 சிறப்பு கூட்டம் ஆகியவற்றை நடாத்தியது.

1.6 மூதவை

பல்கலைக்கழகத்தின் கல்விசார் அதிகார அலகாக இருக்கும் மூதவையானது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகக் கட்டளைச் சட்டத்தின் 46 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கி செவ்வையாக்கம் செய்யப்பட்டது.

தலைவர்

பேராசிரியர் R.M.U.S.K. ரத்னாயக்க	துணைவேந்தர்

பேரவை உறுப்பினர்கள்

பேராசிரியர் H.M.S. ப்ரியநாத்	பீடாதிபதி-பட்டதாரிக் கற்கைகள்
பேராசிரியர் P.M.A.S. கருணாரத்ன	பீடாதிபதி, விவசாய விஞ்ஞான பீடம் (05.10.2021 முதல்)
பேராசிரியர். D.A.M. டி சில்வா	பதில் பீடாதிபதி, விவசாய விஞ்ஞான பீடம் (14.09.2021-04.10.2021)
பேராசிரியர் .M.M.P சுமித்	பீடாதிபதி, விவசாய விஞ்ஞான பீடம் (13.09.2021 வரை)
கலாநிதி. R.S. சபரகமுவ	பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம்
திரு.P.G விபுல அபேரத்ன	பீடாதிபதி,வரைபட (கேத்திர) கணித பீடம் (26.03.2021 முதல்)
கலாநிதி H.M. இந்திக பிரசன்னா	பீடாதிபதி,வரைபட (கேத்திர) கணித பீடம் (25.03.2021 வரை)
பேராசிரியர்.W.K.அதுல C.ஞானபால	பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் பீடம்
பேராசிரியர் M. N. விக்ரமரத்ன	பீடாதிபதி, மருத்துவ பீடம்
கலாநிதிM.A.C.S.S. ஃபெர்னாண்டோ	பீடாதிபதி, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
கலாநிதி A.D. அம்பிட்டியாவத்த	பீடாதிபதி, தொழினுட்பவியல் பீடம்

பேராசிரியர்கள்

சிரே. பேரா. A.A.Y. அமரசிங்ஹ	ஏற்றுமதி விவசாயத்துறை
சிரே பேரா. லால் P. விதான	ஏற்றுமதி விவசாயத் துறை
ஆராச்சி	
பேரா. P.I. யாபா	ஏற்றுமதி விவசாயத் துறை
பேரா.A.W. விஜேரத்ன	விவசாய வணிக முகாமைத்துவத் துறை
பேரா. M. இஷாம்	விவசாய வணிக முகாமைத்துவத் துறை
பேரா. G.M.L.P. அபோன்சு	பௌதீக விஞ்ஞானங்கள் மற்றும் தொழினுட்பவியல் துறை
பேரா. D.A.I. தயாரத்ன	கணக்கியல் மற்றும் நிதித்துறை
பேரா. J.M.C.K. ஜயவர்தன	இயற்கை வளங்கள் துறை
பேரா.K.V.D.E. மெனிகே	புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் துறை
பேரா. C.N. வல்பிட்ட	கால்நடை உற்பத்தித் துறை
பேரா. P.K. திசாநாயக்க	ஏற்றுமதி விவசாயத் துறை
பேரா. D.M.A. குணரத்ன	கால்நடை உற்பத்தித் துறை
பேரா. (திருமதி)S K குணதிலக	இயற்கை வளங்கள் துறை
பேரா. M.S.M. அஸ்லம்	சுற்றுலா முகாமைத்துவத்துறை
பேரா. S.D.A. சந்தநாயக்க	பௌதீக விஞ்ஞானங்கள் மற்றும் தொழினுட்பவியல் துறை
பேரா .R.M.K.T. ரத்னாயக்க	பௌதீக விஞ்ஞானங்கள் மற்றும் தொழினுட்பவியல் துறை
பேரா. M.L.M.C. திசாநாயக்க	ஏற்றுமதி விவசாயத் துறை
பேரா. H.S.R. ரொசைரோ	விவசாய வணிக முகாமைத்துவத் துறை
பேரா. R.K. முத்துக்குமரண	கால்நடை உற்பத்தித் துறை
பேரா. M. சுனில் சாந்த	பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை
பேரா. A. அருண சாந்த	பொருளியல் மற்றும்
ஆராச்சி	புள்ளிவிபரவியல் துறை
பேரா. A. சரத் ஆனந்த	சமூகவியல் துறை
பேரா. K.P.L. நிஷாந்த	புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் துறை
பேரா. H.A.D. ருவன்தீபிகா	கால்நடை உற்பத்தித் துறை
பேரா. W.M. ஆரியரத்ன	மொழிகள் துறை
பேரா. R.G.S. ரத்னாயக்க	மொழிகள் துறை
பேரா .M.M.P சுமித்	கால்நடை உற்பத்தித் துறை
பேரா .B.T.G.S. குமார	கணினி மற்றும் தகவலமைப்புத் துறை
பேரா .D.N. ஜயந்த	கணக்கியல் மற்றும் நிதித்துறை

பேரா. இராஜ் ரத்னாயக்க	சுற்றுலா முகாமைத்துவத்துறை
பேரா. S.H.P. மல்காந்தி	விவசாய வணிக முகாமைத்துவத் துறை
பேரா.L.M.C.S. மெனிகே	கணக்கியல் மற்றும் நிதித்துறை

நூலகர்

திருமதி T.N. ஞெய்சூரி	நூலகர்

துறைத்தலைவர்கள்

பேரா .T.S.P. ஜயவீர	தலைவர், கால்நடை உற்பத்தித் துறை
கலாநிதி. J.B.D.A.P.குமார	தலைவர், ஏற்றுமதி விவசாயத் துறை (12.10.2021 முதல்)
பேரா. P.M.A.S. கருணாரத்ன	தலைவர், ஏற்றுமதி விவசாயத் துறை (14.09.2021 வரை)
பேரா. D.A.M. டி சில்வா	தலைவர், விவசாய வணிக முகாமைத்துவத் துறை
பேரா. S. வசந்தபிரியன்	தலைவர், கணினி மற்றும் தகவலமைப்புத் துறை
கலாநிதி E.P. குடாவிதானகே	தலைவர், இயற்கை வளங்கள் துறை
கலாநிதி W.S.M.சேனவிரத்ன	தலைவர், உணவு மற்றும் தொழினுட்பவியல் துறை
கலாநிதி .A.W.S. சந்தன	தலைவர், விளையாட்டு விஞ்ஞான மற்றும் உடற்கல்வித் துறை (10.08.2021 முதல்)
திருமதி T.S.H. பெரேரா	தலைவர், விளையாட்டு விஞ்ஞான மற்றும் உடற்கல்வித் துறை (13.07.2021 வரை)
கலாநிதி C.H. பதுரலிய	தலைவர், பௌதிக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறை
கலாநிதி H. திவிதுர	தலைவர், அளவையியல் மற்றும் புவிப்பரப்பியல் (Geodesy) துறை (05.04.2021 முதல்)
திரு.P.G விபுல அபேரத்ன	தலைவர், அளவையியல் மற்றும் புவிப்பரப்பியல் (Geodesy) துறை (16.03.2021 வரை)
கலாநிதி S. கொஸ்வத்த	தலைவர், தொலையுணர்தல் மற்றும் புவியியல் தகவலமைப்புத் துறை
பேரா .D.G. தர்மரத்ன	தலைவர், கணக்கியல் மற்றும் நிதித்துறை

கலாநிதி P.K.S. முனசிங்ஹ	தலைவர், சுற்றுலா முகாமைத்துவத்துறை
திரு. D. ஜாசிங்ஹ	தலைவர், சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துறை மற்றும் நிர்வாகி/CODL
திரு. I.A. ஏக்கநாயக	தலைவர், வணிக முகாமைத்துவத்துறை (10.08.2021 முதல்)
கலாநிதி H.P.R. பிரியங்கர	தலைவர், வணிக முகாமைத்துவத்துறை (13.07.2021 வரை)
கலாநிதி R.A.H.M. ரூபசிங்ஹ	தலைவர், பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை
கலாநிதி K.S.N. பிரசங்கனி	தலைவர், ஆங்கில மொழி கற்பித்தல் துறை
கலாநிதி U.P. லேகம்கே	தலைவர், சமூகவியல் துறை (14.09.2021 முதல்)
திரு. S.K. ஹந்தராகம	தலைவர், சமூகவியல் துறை (10.08.2021 வரை)
கலாநிதி H.A.M.A. ஹபுகொட	தலைவர், மொழிகள் துறை (11.05.2021 முதல்)
கலாநிதி R.G.S. ரத்னாயக்க	தலைவர், மொழிகள் துறை (05.04.2021 வரை)
கலாநிதி .(திருமதி).R.J.M. உடுபொறுவ	தலைவர், புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் துறை (08.06.2021 முதல்)
பேரா.K.V.D.E. மெனிகே	தலைவர், புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவத் துறை (11.05.2021 வரை)
கலாநிதி.(திருமதி). K.M.G.M.K.K. குலதுங்க	தலைவர், உடலியல் துறை (25.02.2021 முதல்)
கலாநிதி M.M.J.A. ஜயவர்தன	பதில் தலைவர், உடலியல் துறை (09.02.2021 வரை)
கலாநிதி .(திருமதி). P.D.V.M.பெரேரா	பதில் தலைவர், நுண்ணுயிரியல் துறை
கலாநிதி R.M.M.K.N. ரத்னாயக்க	தலைவர், மருந்தியல்
கலாநிதி G.N. புஷ்பகுமார	தலைவர், உடற்கூற்றியல் துறை
கலாநிதி .(திருமதி). G.U. ரமடாச	தலைவர், மருத்துவ துறை
கலாநிதி.டிலீப பானகல	பதில் தலைவர், தடயவியல் மருத்துவ துறை
கலாநிதி. B.M.C. தசாநாயக்க	பதில் தலைவர், சமூக மருத்துவ துறை
கலாநிதி. ஒஷாதி	பதில் தலைவர், மகப்பேற்றியல் மற்றும்

நல்லபெரும	பெண்ணோயியல் துறை
கலாநிதி .(திருமதி). G.A.C. கமகரனகே	பதில் தலைவர், நோயியல் துறை
கலாநிதி. M.G.U. சம்பத்	தலைவர், குழந்தை மருத்துவ துறை
திரு.G.L.S. கல்கமுவ	பதில் தலைவர், ஒட்டுண்ணியியல் துறை
கலாநிதி.N.D. அமல் வகீஷ	தலைவர், உயிர் இரசாயனவியல் துறை
கலாநிதி.V.I. தர்மவர்த்தன	தலைவர், உளவியல் துறை
கலாநிதி. W.G.M.S. பெரேரா	தலைவர், உயிரியலமைப்புத் தொழினுட்பத் துறை
கலாநிதி K.R. கொஸ்வத்தகே	தலைவர், பொறியியல் தொழினுட்பவியல் துறை

பீடத்தின் இயக்குனர் குழுப் பிரதிநிதிகள்

கலாநிதி A.W. விஜேரத்ன	விவசாய விஞ்ஞான பீடம்
கலாநிதி.D.D.விக்ரமநாயக்க	விவசாய விஞ்ஞான பீடம்
கலாநிதி (செல்வி).U.A.P. இஷங்கா	பிரயோக விஞ்ஞான பீடம் (05.04.2021 முதல்)
கலாநிதி R.M.K.T. ரத்னாயக்க	பிரயோக விஞ்ஞான பீடம் (16.03.2021 வரை)
கலாநிதி M.S.J. பெரேரா	பிரயோக விஞ்ஞான பீடம் (11.05.2021 வரை)
கலாநிதி P. G. R. N. I. புஸ்ஸேல்ல	வரைபட (கேத்திர) கணித பீடம்
கலாநிதி H. திவிதுர	வரைபட (கேத்திர) கணித பீடம்
கலாநிதி N.P. லியனவதுக	தொழினுட்பவியல் பீடம்
கலாநிதி P.K.G.S.S. பண்டார	தொழினுட்பவியல் பீடம்
கலாநிதி C.S.S.S.K. கமகரனகே	மருத்துவ பீடம் (10.08.2021 முதல்)
கலாநிதி .இரோஷா நிகொலஸ்	மருத்துவ பீடம் (10.08.2021 முதல்)
கலாநிதி கவீஷ விஜேசிங்ஹ	மருத்துவ பீடம் (16.03.2021 வரை)
திருமதி R.P.S.H. ஹெட்டியாராச்சி	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்
கலாநிதி K.R.W.K.H. அபேவிக்ரம	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்

கலாநிதி L.M.C.S. மெனிகே முகாமைத்துவக் கற்கைகள் பீடம்
கலாநிதி W.M.P.S.B. வாஹல முகாமைத்துவக் கற்கைகள் பீடம்

மூதவைச் செயலாளர்


திரு. சமன் உயன்கொட
BA (Sp. Geography) (SJP), MSSc (Geography) by research (KLN), MPM (SLIDA), PGM in Public Management) (SLIDA), PGD in e-Government (PIM)
(29.07.2021 முதல்)

திரு. J.G.P.U. ரத்னாயக்க (பதில் பதிவாளர்)
BSc, MSc in Agriculture Organisational Management (PDN)
(01.04.2021 – 28.07.2021)

திரு. கமல் குணவர்தன
BSc, MBA (Human Resource Management) (OUSL)
(31.03.2021 வரை)

மூதவையானது 2021 ஆம் ஆண்டில் 13 கூட்டங்களையும் 1 சிறப்புக் கூட்டங்களையும் நடாத்தியது.

1.7 நிறுவன அமைப்பு


பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
பேரவை
துணைவேந்தர்
பல்கலைக்கழக மூதவை (செனட்)
பீடாதிபதி
பிரிவுப் பணிப்பாளர்கள்
பீடத்தின் அனைத்து மையங்களினதும் இணைப்பாளர்கள்
திரேஷ்ட மாணவ ஆலோசகர்
நூலகர்
உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
திரேஷ்ட உதவி நூலகர் /பீட நூலகம்
பிரதி திரேஷ்ட மாணவ ஆலோசகர்
மாணவ ஆலோசகர்
* பல்கலைக்கழகப் பீடங்கள்
1. பட்டதாரிக் கற்கைகள் பீடம்
2. சகல விஞ்ஞான மற்றும் மொழிகள் பீடம்
3. யகாமைத்துவக் கற்கைகள் பீடம்
4. வரைபட (தேத்தர்) கணித பீடம்
5. விவசாய விஞ்ஞான பீடம்
6. பிரயோக விஞ்ஞான பீடம்
7. தொழிநுட்பவியல் பீடம்
8. மருத்துவ பீடம்
துறைத் தலைவர்கள்
பாட இணைப்பாளர்கள்
கல்விசார் ஊழியர்கள்
கல்விசார் உதவிப் பணியாளர்கள்
பதிவாளர்
பிரதிப் பதிவாளர்
திரேஷ்ட உதவிப் பதிவாளர்
உதவிப் பதிவாளர்
தொழிநுட்பப் பணியாளர்கள்
எழுதுவினைஞர் குழாம்
பணி உதவியாளர்கள்/ சிற்றூழியர்கள்
பொருளாளர்
பிரதிப் பொருளாளர்
திரேஷ்ட உதவிப் பொருளாளர்
உதவிப் பொருளாளர்

2. பீடங்கள்

2.1 பட்டதாரிக் கற்கைகளுக்கான பீடம்

2.1.1 சுருக்க வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகமானது (இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்) பட்டதாரிக் கற்கைக்கான தகைமையினை பட்டதாரிக் கற்கைகள் பீடத்தின் (FGS) மூலம் வழங்குகின்றது. 2015 நவம்பர் 9 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் 928 வது கூட்டத்தில் பட்டதாரிக் கற்கைகள் பீடத்தை நிறுவ அங்கீகாரம் வழங்கியது.

பட்டதாரிக் கற்கைகளுக்கான பீடமானது விவசாய விஞ்ஞானம், கணினி மற்றும் தகவலமைப்புகள், வரைபட (கேத்திர) கணிதம், மானிடவியல், முகாமைத்துவம், பௌதீகவியல் மற்றும் இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் உடற்கல்வியியல் கற்கை, மருத்துவம், தொழினுட்பம், பழங்குடி அறிவு மற்றும் சமூக கற்கைகள் எனப் பல்வேறுபட்ட துறைகளில் முதுகலைமாணிப் பட்டங்களை வழங்குகின்றது. இத்துறை சார்ந்த பட்டதாரிக் கற்கை நெறிகளைப் பயிலும் மாணவர்கள், ஆய்வுத்துறை சார்ந்து தமது அறிவை மேம்படுத்திக் கொள்வதற்கும் தொழிற்றுறை முன்னேற்றத்துக்கும் உறுதுணையாக இருக்கும். அதுமட்டுமின்றி, தற்போது நிலவிவரும் ஒழுங்கமைப்புகளை மறுவரையறை செய்வதில் தேசியப் பரப்பினைத் தாண்டி அவர்கள் பயனடையக்கூடியதாகவும் இருக்கும்.

பட்டதாரிக் கற்கைகள் பீடமானது தற்போது(2021) பன்னிரெண்டு (12) பட்டப்பின் கற்கை நெறிகளை வழங்கி வருகிறது. அவற்றுள் எட்டு (8) கற்கைநெறிகள் முதுநிலை மட்டத்தில் பட்டதாரி தகுதிகளுக்கு வழிவகுப்பதுடன், இரண்டு (2) பட்டப்பின் கற்கை நெறிகளான; வணிக நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா, வணிக நிர்வாகத்தில் முதுகலை (MBA), நிதியியலில் MBA, சந்தையியலில் MBA, சுற்றுலாவில் MBA , ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் MSc, அளவையியல் விஞ்ஞானத்தில் MSc, தகவல் தொழினுட்பத்தில் முதுகலை, ஆங்கிலம் மற்றும் கல்வியியலில் MA மற்றும் ஆராய்ச்சி உயர் பட்டப்படிப்புகள் உள்ளடங்கலாக MPhil மற்றும் Ph.D தகுதிகளுக்கு வழிவகுக்கும். மேலும், பட்டதாரிக் கற்கைகள் பீடமானது வணிகப் பொருளாதாரத்தில் முதுகலை மற்றும் வணிகப் பொருளாதாரத்தில் MSc ஆகியவற்றை எதிர்காலத்தில் வழங்க திட்டமிட்டுள்ளது. இந்த திட்டங்கள் அனைத்தும் இலங்கை தகுதி கட்டமைப்பு (SLQF) மற்றும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பாட அளவுகோல்களுடன் இணைக்கப்பட்டவையாகும்.

தற்போது 649 முதுகலை மாணவர்கள் தமது பட்டப்பின் கற்கையினை முன்னெடுத்துள்ள நிலையில், FGS இன் நோக்கம், தரமான கற்பித்தல் மற்றும் ஆய்வுப் பயிற்சி மூலம் கற்கை நெறிகளைத் திறம்பட வழங்குவதற்கும், உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சவால்களைக் காத்திரமாக எதிர்கொள்ளக்கூடிய வகையில், அந்தந்த துறைகளில் முதுகலைத் துறையில் தகுதிவாய்ந்த பட்டதாரிகள் உருவாகுவதற்கான சிறந்த வாய்ப்பினைப் பெற்றுக் கொடுப்பதாகும்.

2.1.2 பட்டதாரிக் கற்கைகளுக்கான பீட முகாமைத்துவம்

பீடாதிபதி பேரா. H.M.S. ப்ரியநாத்
BA (SJP), MA (SJP), PhD (CMB)

இணைப்பாளர்கள்

பேரா .D.G. தர்மரத்ன	MBA/PGD வணிக நிர்வாகம் (2017 உட்சேர்ப்பு)
கலாநிதி R.S.S.W. ஆராச்சி	MBA/PGD வணிக நிர்வாகம் (2018 உட்சேர்ப்பு)
பேரா .D.G. தர்மரத்ன	MBA/PGD வணிக நிர்வாகம் (2019 உட்சேர்ப்பு)
கலாநிதி T.U.I. பீரீஸ்	MBA/PGD வணிக நிர்வாகம் (2020 உட்சேர்ப்பு)
பேரா. D.N.ஜயந்த	MBA/PGDவணிக நிர்வாகம் (2021/2022 உட்சேர்ப்பு)
கலாநிதி T.C. கமகே	ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் MSc (2017 உட்சேர்ப்பு)
பேரா .L.M.C.S. மெனிகே	ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் MSc (2018 உட்சேர்ப்பு)
கலாநிதி H.P.R. பிரியங்கர	ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் MSc (2019 உட்சேர்ப்பு)
கலாநிதி P.K.S. முனசிங்ஹ	ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் MSc (2020 உட்சேர்ப்பு)
கலாநிதி L.A.C.சஜீவனீ	ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் MSc (2021 உட்சேர்ப்பு)
கலாநிதி H. திவிதுர	அளவையியல் விஞ்ஞானத்தில் MSc (2017 உட்சேர்ப்பு)
கலாநிதி H. திவிதுர	அளவையியல் விஞ்ஞானத்தில் MSc (2018 உட்சேர்ப்பு)
கலாநிதி H. திவிதுர	அளவையியல் விஞ்ஞானத்தில் MSc (2019 உட்சேர்ப்பு)
கலாநிதி. S. கொஸ்வத்த	அளவையியல் விஞ்ஞானத்தில் MSc (2020/2021 உட்சேர்ப்பு)
கலாநிதி .R. அபேவிக்ரம	ஆங்கிலம் மற்றும் கல்வியியலில் MA/PGD (2020/2021 உட்சேர்ப்பு)
கலாநிதி .U.A.P. இஷங்கா	தகவல் தொழினுட்பத்தில் முதுகலை (2021 உட்சேர்ப்பு)

உதவிப் பதிவாளர் திருமதி T.P.N.P. குருகே

BSc (Finance) (SJP)
(01.03.2021 முதல்)

செல்வி.G.W.N.R.விஜேரத்ன(பிரதிஉதவிப் பதிவாளர்)
BA (SUSL), Dip (English)
(28.02.2021 வரை)

உதவித் தனாதிகாரி திரு.V.K.S. சத்துமல்
BSc (Finance) (CMB)

2.1.3 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள்

- வணிக நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா
- ஆங்கிலம் மற்றும் கல்வியியலில் பட்டப்பின் டிப்ளோமா
- வணிக நிர்வாகத்தில் முதுமாணி
- வணிக நிர்வாகத்தில் முதுமாணி (நிதி)
- வணிக நிர்வாகத்தில் முதுமாணி (சந்தைப்படுத்தல்)
- வணிக நிர்வாகத்தில் முதுமாணி (சுற்றுலா)
- ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி
- நில அளவையியல் விஞ்ஞானத்தில் முதுவிஞ்ஞானமாணி
- ஆங்கிலம் மற்றும் கல்வியியலில் முதுகலை டிப்ளோமா
- தகவல் தொழினுட்பத்தில் முதுகலை
- தத்துவயியலில் முதுகலை
- தத்துவயியலில் கலாநிதி பட்டம்

ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி தொடக்க விழா -2021 உட்ச்சேர்ப்பு

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பீடத்துடன் இணைந்து பட்டதாரி கற்கைகள் பீடம் வழங்கும் ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி -2021 உட்ச்சேர்ப்புக்கான தொடக்க விழா 22 ஜனவரி 2022 அன்று வித்யால மாவத்தை, புதிய நகரம் இரத்தினபுரியில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பேராசிரியர் H.M.S. ப்ரியநாத் (பீடாதிபதி பட்டதாரிக் கற்கைகள்), பேரா. W.K.அதுல C.ஞானபால (பீடாதிபதி, முகாமைத்துவக் கற்கைகள் பீடம்), பேரா. D.A.I. தயாரத்ன (தலைவர், கல்வி மன்றம்-முகாமைத்துவம்) மற்றும் கலாநிதி S. முனசிங்ஹ தலைவர், சுற்றுலா முகாமைத்துவத்துறை, முகாமைத்துவக் கற்கைகள் பீடம்) ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி தொடக்க (2021 உட்சேர்ப்பு) விழாவை கௌரவிக்கும் வகையில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர், Dr. N.D. நாமல் ஜயவர்தன அவர்கள் சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டார். ஆயுர்வேத மருத்துவமனை முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி பட்டப்படிப்பு கற்கைநெறியானது, ஆயுர்வேத மருத்துவப் பட்டதாரிகளுக்கு முதுகலை தகுதிகளை முகாமைத்துவ திறன்களுடன் வழங்குவதற்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், மாணவர்கள்ஆயுர்வேத சுகாதாரத் துறையின் மேம்பாட்டிற்காக திறமையாக பணியாற்றக்கூடிய சூழலும் காணப்படும் .



2.1.4 கவன ஈர்ப்புக்குரிய விடயப் பரப்பு



வரைபட (கேத்திர) கணிதம்

- விவசாய வணிக முகாமைத்துவம்
- விவசாயச் சூழலியல் மற்றும் வள முகாமைத்துவம்
- உயிரியல் வள முகாமைத்துவம்
- நீர்வாழ் உயிரியல் வள முகாமைத்துவம்
- பயிர் விருத்தி மற்றும் தாவரப் பாதுகாப்பு
- பயிர் உற்பத்தித் தொழினுட்பம்
- உணவு வணிக முகாமைத்துவம்



கணினி மற்றும் தகவலமைப்பு

- கணினி விஞ்ஞானம்
- தகவல் தொழினுட்பம்
- மென்பொருட் பொறியியல்



வரைபட (கேத்திர) கணிதம்

- புவிப்பரப்பியல்
- புவியியல் தகவலமைப்புகள்
- நீரமைவு வரைவியல்
- நில முகாமைத்துவம்
- நில அளவையியல்
- தொலையுணர்தல்



- ஆங்கிலம்
- ஜேர்மன்
- ஊடகக் கற்கைகள்
- சிங்களம்
- தமிழ்



- சூழலியல் முகாமைத்துவம்
- நிதியியல்
- சந்தைப்படுத்தல்
- பூங்காக்கள் மற்றும் புத்தாக்கங்கள் சுற்றுலா



- பிரயோகப் பௌதீகவியல்
- இரசாயனத் தொழினுட்பவியல்
- உயிரியல் வளப் பாதுகாப்பு
- புவிசார் விஞ்ஞானங்கள்
- சூழலியல் விஞ்ஞானங்கள்
- உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல்
- பௌதீக விஞ்ஞானங்கள்



சமூக விஞ்ஞானங்கள்

- யிரியல் புள்ளிவிபரவியல்
- வணிகப் பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல்
- அபிவிருத்திப் பொருளியல்
- அபிவிருத்திக் கற்கைகள்
- பொருளாதார அளவியல்
- சூழலியற் பொருளியல்
- நிதியியற் பொருளியல்
- பேரிடர் முகாமைத்துவம்
- மனிதவளப் பொருளியல்
- நிலப் பயன்பாட்டுத்திட்டம்
- நூலகமும் தகவல் தொடர்பு விஞ்ஞானமும்
- மருத்துவச் சமூகவியல்
- பிராந்திய மற்றும் கலாசாரக் கற்கைகள்
- பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்



விளையாட்டு விஞ்ஞானமும் உடற்கல்வியும்

- உடற்கல்வி
- விளையாட்டு விஞ்ஞானம்



- சுதேச அறிவு
- சமூக கற்கைகள்



- பொறியியல் தொழினுட்பவியல்
- உயிரமைப்புக்கள் தொழினுட்பவியல்



2.2 விவசாய விஞ்ஞான பீடம்

2.2.1 சுருக்க வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடமானது ஆரம்பத்தில் 1995 ஆம் ஆண்டில் ரஹங்கலவில் நிறுவப்பட்டது, பின்னர் 2001 இல் பெலிஹுலோயாவில் உள்ள பிரதான பல்கலைக்கழக வளாகத்திற்கு மாற்றப்பட்டது. 2001 முதல் பெலிஹுலோயாவில் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் கல்விசார் பாடநெறிகள் நடத்தப்பட்டன. உட்கட்டமைப்பு மற்றும் பிற கல்விசார் வசதிகளை மேம்படுத்துவதற்காக 2005 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 82.5 மில்லியன் மற்றும் ரூ. 120 மில்லியன் தொகையை உலக வங்கி மானியங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடிந்தது. ஒரு முழுமையான பாடத்திட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, பட்டக் கற்கைநெறியானது விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் என மறுபெயரிடப்பட்டது.

2.2.2 பீட முகாமைத்துவம்

பீடாதிபதி

பேராசிரியர் P.M.A.S. கருணாரத்ன
BScHons (Agriculture) (PDN), MPhil (Crop Physiology) (PDN), PhD (Crop Modelling) (University of Nottingham, United Kindom)
(05.10.2021 முதல்)

பேராசிரியர். D.A.M. டி சில்வா (பதில் பீடாதிபதி)
BSc (RUH), MBA (Agribusiness Management) (PDN), PhD (Food & Resource Economics) (Hiroshima University – Japan)

(14.09.2021 முதல் 04.10.2021 வரை)

பேராசிரியர் . M.M.P. சுமித்
BVSc (Sri Lanka), MSc (Kobe - Japan), PhD (Kobe – Japan)
(13.09.2021 வரை)

துறைத்தலைவர்கள்

விவசாய வணிக முகாமைத்துவத் துறை — பேராசிரியர் D.A.M. டி சில்வா
BSc (Agri.) (RUH), MBA in Agribusiness Management (PDN), PhD (Hiroshima University, Japan)

ஏற்றுமதி விவசாயத் துறை	கலாநிதி J.B.D.A.B. குமார BSc (Sp.) (SUSL), MSc (Jawaharlal Neheru University, India), Phd (PDN) (05.10.2021 முதல்)
	பேரா. P.M.A.S. கருணாரத்ன BScHons (Agriculture) (PDN), MPhil (Crop Physiology) (PDN), PhD (Crop Modelling) (University of Nottingham, United Kindom) (04.10.2021 வரை)
கால்நடை உற்பத்தித் துறை	கலாநிதி T.S.P. ஜயவீர BVScHons (PDN), MSc (Food Science and Nutrition) (Ghent University, Belgium)
உதவிப் பதிவாளர்	திருமதி. N.D.R. தர்மபால BSc, MBA (Cardiff Metropolitan University, UK), AdvDip in Management

2.2.3 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

இப்பீடமானது விவசாய வணிக முகாமைத்துவம், ஏற்றுமதி விவசாயம் மற்றும் கால்நடை உற்பத்தி ஆகிய மூன்று கற்கைத் துறைகளைக் கொண்டமைந்துள்ளது. விவசாய விஞ்ஞான பீடமானது பின்வரும் நான்கு வருட சிறப்புக் கற்கைகளுக்கான பட்டங்களை வழங்கி வருகின்றது:

- விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணிப் பட்டம் (BSc), (மாணவர்கள் விவசாய வணிக முகாமைத்துவம், விவசாயச் சூழலியல் மற்றும் வள முகாமைத்துவம், பயிர் விருத்தி மற்றும் தாவரப் பாதுகாப்பு, பயிர் உற்பத்தித் தொழினுட்பம், உயிரியல் வள தொழினுட்பம் & முகாமைத்துவம், நீர்வாழ் உயிரியல் வள தொழினுட்பம் & முகாமைத்துவம் ஆகிய நான்கு துறைகளில் சிறப்புக் கற்கைக்கான பட்டங்களைப் பெற்றுக் கொள்ளலாம்).

- உணவு வணிக முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம் (BSc Hons).

ஏற்றுமதி விவசாயத் துறையானது விவசாய- சூழலியல் வள முகாமைத்துவம், பயிர் விருத்தி மற்றும் தாவரப் பாதுகாப்பு, பயிர் உற்பத்தித் தொழினுட்பம் தொடர்பான மூன்று கல்விசார் கையேடுகளை வழங்குகின்றது. முதல் நான்கு அரையாண்டுகளில் (முதல் 2 ஆண்டுகள்), மாணவர்கள் விவசாயம் தொடர்பான அடிப்படைப் பாடநெறிகளைக் கற்க வேண்டும். அதன் பிறகு விவசாய வணிக முகாமைத்துவம், விவசாயச் சூழலியல் மற்றும் வள முகாமைத்துவம் ,உயிரியல் வள முகாமைத்துவம் ,நீர்வாழ் உயிரியல்**,** வள முகாமைத்துவம்**,** பயிர் விருத்தி மற்றும் தாவரப் பாதுகாப்பு அல்லது பயிர் உற்பத்தித் தொழினுட்பம் என்பன தொடர்பாக இரண்டு மேலதிக அரையாண்டுகளில் (3 வது ஆண்டில்) சிறப்புக் கற்கையை மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள் தங்கள் விருப்பத் தேர்வுகளுக்கு ஏற்ப, இரண்டாம் ஆண்டு இறுதியில் தங்களுக்கான சிறப்புத் கற்கைத் துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒவ்வோர் அரையாண்டிலும் பண்ணைப் பயிற்சி, கணினி விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலக் கற்கை முதலான பாடநெறிகள் முதல் மூன்று ஆண்டுகளில் கற்பிக்கப்படுகின்றன. மேலும், மாணவர்கள் பட்டப் படிப்பைப் பூரணப்படுத்த ஒவ்வோர் அரை ஆண்டிலும் ஒவ்வொரு பாடத்திலும் திருப்திகரமான தரத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

மேலும், மாணவர்கள் தங்கள் மூன்றாம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் மற்றும் இறுதி ஆண்டின் முதல் அரையாண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கை நெறிகளைத் தெரிவுசெய்ய வேண்டும். மாணவர்கள் தங்கள் விருப்பங்களுக்கு ஏற்ப மூன்றாம் ஆண்டில் இரண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கை நெறிகளையும், இறுதி ஆண்டில் நான்கு கற்கை நெறிகளையும் தேர்ந்தெடுக்க வேண்டும். விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணிப் பட்டக்கற்கையின் இறுதி ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் மாணவர்களுக்கு தொழிற்துறைப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதேவேளை உணவு வணிக முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி பட்டக்கற்கையின் இறுதி ஆண்டின் இரு அரையாண்டுகளும் தொழிற்துறைப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இது பட்டப்படிப்புப் பாடத்திட்டத்தின் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சிறப்பு அங்கமாகும். இந்நான்காம் வருடத்தில் மாணவர்கள் தமது சிறப்புத் துறையில் ஓர் ஆய்வை மேற்கொள்ள வேண்டும். இக்கற்கைநெறி ஆங்கில மொழி மூலமாகவே பயிற்றுவிக்கப்படும்.

மாணவர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் அறிவு மற்றும் திறன்கள் பரிமாற்றிக் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், இப்பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுடன் இணைந்த களச்செயற்பாடுகளை மேற்கொள்வதை இப்பட்டப்படிப்பின் பயிற்சித் திட்டங்களை விவசாய விஞ்ஞான பீடம் ஒழுங்கமைத்துள்ளது. இதன் விளைவாக, விவசாய விஞ்ஞான பீடமானது

சுற்றியுள்ள சமூகங்களுடன் நெருக்கமான தொடர்புகளை உருவாக்கி மேம்படுத்தியுள்ளது.

மேலும், மாணவர்களுக்குப் பல்வேறு தொழிற்துறைகளைப் பார்வையிடக் கூடிய வாய்ப்புகளை வழங்குவதனூடாகத் தொழில் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் செயல்பாடுகள் தொடர்பில் காத்திரமான அனுபவ அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கும் வழியமைத்துக் கொடுக்கப் படுகின்றது.

2.2.4 பீடத்தின் பண்ணை

விவசாய பீடத்தின் பண்ணை முன்கஸ்தென்ன பிரதேசத்தில் 2003 ஆம் ஆண்டு ஒழுங்கமைக்கப்பட்டது. அது 33 ஏக்கர் பரப்பளவுள்ள பிரதேசத்தில் அமைந்துள்ளது. பீடத்தின் பண்ணையைப் பொறுத்தளவில் அது கால்நடை உற்பத்திப் பிரிவு, பயிர் உற்பத்திப் பிரிவு, பண்ணை இருப்புப் பிரிவு ஆகிய மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. மாணவர்களின் நடைமுறை அறிவையும் ஆய்வுப் பயிற்சியையும் மேம்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும்.
கால்நடை வளர்ப்புப் பிரிவானது பின்வரும் அலகுகளைக் கொண்டமைந்துள்ளது:

- பன்றி வளர்ப்பு அலகு
- கோழி வளர்ப்பு அலகு
  1. முட்டைக் கோழி வளர்ப்பு அலகு
  2. ப்ராய்லர் வளர்ப்பு அலகு
- பசு வளர்ப்பு அலகு
- முயல் வளர்ப்பு அலகு
- ஆடு வளர்ப்பு அலகு
- கலப்பின வளர்ப்பு அலகு

பீடத்தின் பண்ணையில் பின்வரும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன:

- மூலிகைத் தோட்டச்செய்கை
- பண்ணை விலங்குப் பராமரிப்பு
- பாற்சேகரிப்பு
- விலங்குப் பராமரிப்பு
- பண்ணைச் சுற்றுலா வழிகாட்டல்
- சுயசந்தைப்படுத்தல் செயற்பாடுகள்

- பாதுகாப்பான விவசாய நடைமுறைகள்
- பறவைக் கண்காணிப்பு
- வனத் தடங்காணல்
- நடைபயணம்

பயிர் உற்பத்தி அலகு

பண்ணையானது பிரதானமாக பின்வரும் நிலையான பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.




விவசாயப் பண்ணை இருப்பு

விவசாயப் பண்ணை இருப்பானது, இலங்கை சபரகமுவ மாகாணத்தின் பெலிஹுலோய பிரதேசத்தில் மேற்கொள்ளப் படுவதோடு, விவசாய வணிக முகாமைத்துவத் துறையினால் அது நிர்வகிக்கப்படுகின்றது.
இது கொழும்பு – பதுளை நெடுஞ்சாலையை அடுத்துள்ள மிக முக்கியமான பிராந்தியத்தில் அமைந்துள்ளது.

விவசாயப் பண்ணை இருப்பானது மூன்று முக்கியமான காட்சியிடங்களைக் கொண்ட பாசறைகளைக் கொண்டமைந்துள்ளது:

- வாவிக் காட்சி
- பண்ணைக் காட்சி
- மலைக்காட்சி.

2.3 பிரயோக விஞ்ஞான பீடம்

2.3.1 சுருக்க வரலாறு:

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம் ஆரம்பத்தில் புத்தல இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியாக (BAUC) ஜூன் 21, 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. புத்தலை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியானது, உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம், ஆங்கில மொழி ஆகிய இரண்டு டிப்ளோமா கற்கை நெறிகளை வழங்கியது. 1996 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிகள் முழுமையான தேசிய பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டதன் பின், மூன்று இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளான சபரகமுவ இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி, ஊவா இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி மற்றும் புத்தள இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டு சபரகமுவ பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்டது. இதன்போது, புத்தலை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடமாக மாறியது.

மார்ச் 2008 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், இப்பீடமானது பெலிஹுலோயாவில் உள்ள பிரதான பல்கலைக்கழக வளாகத்திற்கு மாற்றப்பட்டது.

2.3.2 பீட முகாமைத்துவம்

பீடாதிபதி	கலாநிதி R.S. சபரகமுவ BScHons (Sp.) (PDN), MPhil (PDN), PhD (UoA, New Zeeland)
துறைத்தலைவர்கள்	
இயற்கை வளங்கள் துறை	கலாநிதி E.P. குடாவிதானகே BScHons (Sp.) (UOC), MSc (UOC), PhD (NUS, Singapore)
உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறை	கலாநிதி W.S.M. செனவிரத்ன BSc (OUSL), MSc (South Korea), PhD (South Korea)
பௌதிக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறை	கலாநிதி C.H. பதுரலிய BScHons (Sp.) (SJP), MSc (PDN), PhD (UK) (04 ஒக்டோபர் 2021முதல்)
கணினித் துறை மற்றும் தகவலமைப்புத் துறை	பேரா. S. வசந்தபிரியன் BScHons (Sp.) (PDN), MSc (Einhoven University of Technology, Nettherland), PhD (Wuhan University of Technology, China)
விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் உடற்கல்வித் துறை	கலாநிதி A.W.S. சந்தன BSc (Sp), BA, MA, MA, MA, MPhil, PhD, PGDE (03.09.2021 முதல்) திருமதி T.S.H. பெரேரா BScHons (Sp.) (SUSL), MSc (China) (02.09.2021 வரை)
உதவிப் பதிவாளர்	திரு. M. சுதர்ஷன் BSc in Nursing (PDN), Dip in Sports Sciences & Excercises (PDN)

2.3.3 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

இப்பீடமானது ஐந்து துறைகளை உள்ளடக்கியுள்ளது. அவையாவன: இயற்கை வளங்கள் துறை, பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறை, உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறை, கணினி மற்றும் தகவலமைப்புத் துறை மற்றும் விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் உடற்கல்வித் துறை என்பனவாகும்.

இப்பீடமானது க.பொ.த. (உ.த) தேர்வில் சுயவிருப்பின் அடிப்படையில் நேரடியாக நுழைவு பெறும் மாணவர்களுக்கு உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம், சுற்றுச்சூழல் விஞ்ஞானம் மற்றும் இயற்கைவள முகாமைத்துவம், இரசாயனத் தொழினுட்பம், கணினி விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம், பிரயோக இயற்பியல், கணினி மற்றும் தகவல் அமைப்புகள், விளையாட்டு மற்றும் முகாமைத்துவம் மற்றும் உடற்கல்வி ஆகியவற்றில் BSc (சிறப்பு) பட்டதாரிக் கற்கை நெறிகளை வழங்குகின்றது.

பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் சுற்றுச் சூழல் விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் நான்கு ஆண்டுக் கற்கைநெறிகளை உள்ளடக்கி வடிவமைக்கப்பட்டுள்ள நிலையில், பொது விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்று மூன்று ஆண்டுகளில் மாணவர்கள் வெளியேறவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய மாணவர்கள் தமது சிறப்புப் பட்டதாரிக் கற்கையைக் கட்டாயமாக நான்கு ஆண்டுகள் பூர்த்தி செய்தாக வேண்டும்.

விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம், உடற்கல்வி ஆகியவற்றில் விஞ்ஞான இளமாணிப் பட்டதாரிக் கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும்போது க.பொ.த. (உ/த) பெறுபேறுகள் மற்றும் செயல்திறன் தேர்வு (எழுத்து மூலப் பரீட்சை) மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். விளையாட்டு மற்றும் முகாமைத்துவம், உடற்கல்வி ஆகியவற்றில் பட்டக் கற்கை நெறிகளைத் தெரிவுசெய்ய விரும்பும் மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும், எழுத்து மூலச் செயல்திறன் தேர்வு மூலமும் தெரிவுசெய்யப்படுவர். என்றாலும், மேற்படி துறைகளில் பட்டப்படிப்புக்கான நுழைவினைப் பெறுவதற்குத் தேர்வுப் பரீட்சைக்கு மேலதிகமாக உடல் தகுதிக்கான தேர்வையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இருப்பினும், இத்தேர்வு நடைமுறை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் ஒரு சுற்றறிக்கை மூலம் தற்போது திருத்தி அமைக்கப்பட்டுள்ளமையால், இளமாணிப் பட்டதாரிகளைப் பீடத்தில் சேர்ப்பதற்கு மேலதிக உளச்சார்புப் பரீட்சையினை எதிர்கொள்ள வேண்டிய தேவை இனி ஏற்படாது.

பீடத்தினால் வழங்கப்படும் பட்டதாரிக் கற்கை நெறிகள் அனைத்தும் தற்போதைய வேலைவாய்ப்பு நிலைவரங்களைக் கருத்திற்கொண்டு தேசிய மற்றும் சர்வதேச அளவில் காணப்படும் தேவைப்பாடுகளுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிகள் ஆங்கில மொழியிலேயே பிரத்தியேகமாக நடாத்தப்படுகின்றன. இந்தப் பட்டதாரிக் கற்கை நெறிகள் கணினி விஞ்ஞானம், பொருளியல், முகாமைத்துவம் போன்ற பாடங்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் பல்துறை அறிவினை வழங்கும் நோக்கோடு வடிவமைக்கப்பட்டுள்ளன. நமது பட்டதாரி மாணவர்கள் தாம் பட்டம் பெறும் சிறப்புத் துறைக்கு மேலதிகமாக ஒரு பரந்த அறிவுடன் சேவையாற்றவும் பல்துறை சார்ந்து சிறப்பாகச் செயற்படவும் இது வழியமைக்கின்றது.

இப்பீடமானது தனது கல்வி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக நாட்டு மக்களுக்கும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் பங்களிப்பு வழங்குமுகமாக, அறிவைப் பரவலடையச் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களில் பல்கலைக்கழக ஊழியர்களும் மாணவர்களும் ஆண்டுதோறும் பங்கேற்று வருகின்றனர்.

பிரயோக விஞ்ஞான பீடம் வழங்கும் பட்டக் கற்கைநெறிகள்

தகவலமைப்புகள் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
சூழலியல் விஞ்ஞானம் மற்றும் இயற்கைவள முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டம்
சூழலியல் விஞ்ஞானம் மற்றும் இயற்கைவள முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
பௌதீக விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டம்
பிரயோகப் பௌதீகவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
இரசாயனத் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
கணினி விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
உடற்கல்வித் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
மென் பொறியியல் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
விளையாட்டு விஞ்ஞானத்துறை மற்றும் முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்

கணினி மற்றும் தகவலமைப்புத் துறை

கணினி மற்றும் தகவலமைப்புகள் துறையானது, தகவலமைப்புகள் துறையில் விஞ்ஞான இளமாணிப் பட்ட (சிறப்பு)க் கற்கை நெறியினை 2008 ஆம் ஆண்டிலேயே தொடங்குவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டு இருந்தாலும், 2011 ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி தான் அது ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடத்திட்டம் குறிப்பாக, கணினி மற்றும் தகவல் தொழினுட்பத்தில் திறமையான பட்டதாரிகளை உருவாக்கும் நோக்கோடு வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது இத்துறையானது நன்கு நிறுவப்பட்ட மூன்று ஆய்வகங்களையும் 312 மாணவர்களையும் கொண்டுள்ளது.

மேற்கண்ட பட்டப்படிப்புக்கான கேள்வி பல ஆண்டுகளாகப் பெருமளவு அதிகரித்துள்ளது. இந்நிலையில், வருடாந்த மாணவர் சேர்க்கையானது 2021 இருந்து ஒரு தொகுதிக்கு அதிகபட்சம் 180 மாணவர்கள் என்ற அளவை எட்டியுள்ளது.
கணினி மற்றும் தகவலமைப்புத் துறையானது 2021 ஆண்டு முதல் 2019/2020 கல்வியாண்டிற்க்காக, 60 வருடாந்த மாணவர் சேர்க்கையுடன் மென் பொறியியல் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்ட த்தை வழங்குகிறது.

இத் துறையானது பட்டதாரிகளுக்கு விரிவுரைகள் மற்றும் செயல்முறைகளை நடாத்துவதில் தொழினுட்ப ஆதரவைப் பெறுவதற்கும், அவர்களின் சிறு அளவிலான செயற்திட்டங்கள் மற்றும் இறுதி ஆண்டுச் செயற்திட்டங்களைக் கொண்டு நடாத்த வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கவும் தனியார் கணினித் தொழிற்துறைகளுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வருகின்றது. இதனால் பட்டப்படிப்பினை நிறைவுசெய்த உடனேயே இப்பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கான வாய்ப்பும் அதிகரித்துள்ளது. இத்துறையானது இரு பேராசிரியர்களையும், நான்கு சிரேஷ்ட விரிவுரையாளர்களையும், எட்டு தகுதிகாண் விரிவுரையாளர்களையும் கொண்டமைந்துள்ளது.

உணவு மற்றும் தொழினுட்பவியல் துறை

உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறையானது 2005 இல் நிறுவப்பட்டது. என்றாலும், 1996 ஆம் ஆண்டில் இப்பீடம் தொடங்கப் பட்டதிலிருந்து உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத்திற்கான விஞ்ஞான இளமாணிப் பட்டக் கற்கையானது இயற்கைவளத் துறையின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. கற்கை நெறிகளில் உணவு விஞ்ஞான அடிப்படைத் தொழினுட்பம், பிரயோக உணவுத் தொழினுட்பம், பொது விஞ்ஞானம், புள்ளிவிபரவியல்,

கணினி விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம், உணவு சந்தைப்படுத்தல், தொழிற்றுறைப் பொருளியல், விஞ்ஞானத் தொடர்பாடல் மற்றும் தொழிற்துறை அபிவிருத்தி என்பன போன்ற துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறையில் தொழில்முறை வாழ்க்கையைத் தொடர விரும்பும் மாணவர்களுக்கு உதவும் வகையில் இந்த பட்டக் கற்கை நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பட்டப்படிப்பில் இருந்து பெறப்பட்ட அறிவு மற்றும் திறன்கள் பட்டதாரிகளுக்கு அரசாங்கத்திலும், தனியார் துறையிலும், உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் அதிகரித்து வரும் உணவுத்துறை விஞ்ஞானிகள் மற்றும் தொழினுட்பவியலாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய உதவுகின்றன. உணவு விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் தொடர்பான துறைகளில் முதுநிலைப் பட்டதாரிக் கற்கைகளுக்கு இந்தப் பட்டக் கற்கை ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது. தற்போது, இத்துறையில் ஒரு பேராசிரியர், ஏழு சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் இரண்டு தகுதிகாண் விரிவுரையாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

சிறந்த பல சிரேஷ்ட கல்வியாளர்களும் தொழில்துறை வல்லுநர்களும் தத்தமது சிறப்புத் துறைகளில் வருகைதரு விரிவுரையாளர்களாகப் பங்காற்றி வருகின்றனர். இத்துறையானது உணவுப் பகுப்பாய்வு ஆய்வுகூடம், உணவு நுண்ணுயிரியல் ஆய்வுகூடம், உணவு பதப்படுத்தும் ஆய்வுகூடம், இறைச்சிப் பதப்படுத்தும் ஆய்வுகூடம் மற்றும் பால் பதப்படுத்தும் ஆய்வுகூடம் போன்ற துறைகளில் பட்டப் படிப்பை மேற்கொள்வோருக்கான ஆய்வக அமர்வுகள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள சகல வசதிகளையும் கொண்ட ஐந்து ஆய்வுகூடங்களைக் கொண்டமைந்துள்ளது. மேலும், தற்போது இத்துறையின் வருடாந்த மாணவர் சேர்க்கையானது 88 ஆக காணப்படுகின்றது.

இயற்கை வளங்கள் துறை

இயற்கை வளங்கள் துறையானது 1996 இல் ஆரம்பிக்கப்பட்டு இயற்கை வளங்களில் பொதுக் கற்கைக்கான விஞ்ஞான இளமாணிப் பட்டத்தை வழங்கி வருகின்றது. சுற்றுச் சூழல் பாதுகாப்பு, இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு, பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம், சுற்றுச்சூழல் வலுவாக்கம் மற்றும் சூழலியல் ஆகிய துறைகளில் இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள தற்போதைய தொழிற் சந்தையை நிரம்பல் செய்யும் வகையில் இந்தப் பட்டதாரிக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டில், ஆரம்பத்தில் இயற்கை வளங்களில் மூன்று வருட விஞ்ஞான இளமாணிப் பட்டக் கற்கைநெறி வழங்கப்பட்டு வந்தது. பின்னர்

பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கில் அக்கற்கைநெறியானது சுற்றுச்சூழல் விஞ்ஞானம் மற்றும் இயற்கைவள முகாமைத்துவம் என்ற வகையில் தரமுயர்த்தப்பட்டு மறுசீரமைக்கப்பட்டது.

தற்போது இப்பட்டதாரிக் கற்கைநெறியானது சுற்றுச்சூழல் விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் புவியியல் விஞ்ஞானம் எனும் மூன்று முக்கிய துறைகளைக் கொண்டுள்ளது. இது சுற்றுச்சூழல் விஞ்ஞானம் மற்றும் இயற்கைவள முகாமைத்துவத்தில் நான்கு வருட விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம், சுற்றுச்சூழல் விஞ்ஞானம் மற்றும் இயற்கைவள முகாமைத்துவத்தில் மூன்று வருட விஞ்ஞான இளமாணிப் (பொதுத்துறை) பட்டம் ஆகிய இரண்டு பட்டதாரிக் கற்கைநெறிகளைக் கொண்டுள்ளது. இக்கற்கைநெறிகள் இத்துறை சார்ந்த முதுகலை பட்டதாரிக் கற்கைகளுக்கும் சிறப்பாக வழிகாட்டி நிற்கின்றன. இத்துறையானது வருடாந்தம் நூறு மாணவர்களைப் சேர்த்துக் கொள்ளும் திறனைக் கொண்டுள்ளது. தற்போது இத்துறையில் இரண்டு பேராசிரியர்கள், ஏழு சிரேஷ்ட விரிவுரையாளர்கள், ஒரு விரிவுரையாளர் என பத்து கல்விசார் ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறை

பௌதீக விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பவியல் துறையானது இரசாயனத் தொழினுட்பம், பிரயோக பௌதீகவியல் மற்றும் கணினி விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் ஆகிய மூன்று பிரதான துறைகளில் பட்டக் கற்கையினை வழங்குகிறது. அதாவது, கணிதம், புள்ளிவிபரவியல் மற்றும் முகாமைத்துவக் கற்கை என்பன இக்கற்கை நெறியோடு துணைப் பாடங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்துறையானது நான்கு சிறப்புப் பட்டக் கற்கைநெறிகளை வழங்குகின்றது. அவையாவன: இரசாயனத் தொழினுட்பத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம் (காலம்: 4 ஆண்டுகள்), கணினி விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பத்தில் (சிறப்பு)ப் பட்டம் (காலம்: 4 ஆண்டுகள்), பிரயோகப் பௌதீகவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) பட்டம் (காலம்: 4 ஆண்டுகள்), (பிரயோக விஞ்ஞானம்) பிரயோகப் பௌதீகவியல் விஞ்ஞான இளமாணி பட்டம் (காலம்: 3 ஆண்டுகள்) என்பனவாகும்.

ஒவ்வொரு துறையிலும் வழங்கப்படும் அனைத்துக் கோட்பாட்டுப் பாடநெறி அலகுகளும் செயல்முறைப் பயிற்சியோடு தொடர்புடையனவாகவே வடிவமைக்கப்பட்டுள்ளன. இது அடிப்படை அனுபவத் தேர்ச்சியுடன் தன்னம்பிக்கையோடு செயல்படும் திறனை மாணவர்களுக்கு வழங்குகிறது. மேலும், மூன்றாவது மற்றும் நான்காவது கல்வி ஆண்டுகளில் மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கச் சிந்தனைகளைத் தூண்டும் வகையில் சிறு செயற்றிட்டங்களும் நடாத்தப்படுகின்றன. இறுதி ஆண்டில் ஒரு முழு

அரையாண்டு காலம் மேற்கொள்ளப்படும் செயற்திட்டமானது (ஆராய்ச்சி அல்லது தொழில்துறைப் பயிற்சி) பட்டதாரிகளைத் தொழிற்துறைச் சூழலுக்குப் பழக்கப்படுத்தி விடுவதோடு, பட்டப்படிப்பை நிறைவு செய்யும் முன்னர் தொழில்துறையில் அனுபவத்தையும் வழங்குகிறது. இந்த இலக்கை அடையும் வகையில் அவர்களை அந்தந்த துறைகளில் நிபுணர்களாக உருவாக்குவதை நோக்காகக் கொண்டு பல்கலைக்கழகச் சூழலும் கற்பித்தல் திட்டங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களோடும் ஒப்பிடுகையில் பிரயோக பௌதீகவியலில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) ப் பட்டம் வழங்கும் ஒரேயொரு துறை இருப்பது இங்குதான் என்பது குறிப்பிட்டுக் கூறத்தக்கதாகும்.

இத்துறையில் எல்லா வசதிகளையும் கொண்ட நான்கு ஆய்வுகூடங்கள் உள்ளன. அவையாவன: பௌதீகவியல் ஆய்வுகூடம், இரசாயனவியல் ஆய்வுகூடம் I, இரசாயனவியல் ஆய்வுகூடம் II, இரசாயனவியல் ஆராய்ச்சி ஆய்வுகூடம் என்பனவாகும்.

இத்துறையில் கற்கும் மாணவர் தொகை வருடத்திற்கு 100 ஆகும். மேலும், ஒரு சிரேஷ்ட பேராசிரியர், ஒரு இருக்கை பேராசிரியர் இரண்டு பேராசிரியர்கள், எட்டு சிரேஷ்ட விரிவுரையாளர்கள், ஒரு விரிவுரையாளர் மற்றும் எட்டு தகுதிகாண் விரிவுரையாளர்கள் இத்துறையில் பணியாற்றுகின்றனர்.

விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் உடற்கல்வித் துறை

2008 ஆம் ஆண்டு முதல் பிரயோக விஞ்ஞான பீடத்தால் விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம், உடற்கல்வித் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம் என்ற இரண்டு பட்டதாரிக் கற்கை நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2011 மார்ச் 01 ஆம் திகதி விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் உடற்கல்வித் துறை நிறுவப்பட்டது. விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவப் பட்டதாரிக் கற்கை நெறிகள் அனைத்தும் முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி மட்டங்களிலும், பிறதொழில் நிறுவனங்களிலும் விளையாட்டுகளைக் கற்பிப்பதற்குத் தேவையான அடிப்படை விளையாட்டு விஞ்ஞானத் திறன்கள் மற்றும் முகாமைத்துவத் திறன்களை உள்ளடக்கி மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன.
உடற்கல்வி தொடர்பான பட்டதாரிக் கற்கை நெறியானது, குறிப்பாக உடற்கல்வி நடவடிக்கைகள் மற்றும் பயிற்சிகள் நடைமுறை விஞ்ஞான ரீதியாக இத்துறைசார்ந்து திறமையான பட்டதாரிகளை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பட்டதாரிக் கற்கை நெறியின் காலம் நான்கு ஆண்டுகள் ஆகும். தற்போது இப்பட்டதாரிக் கற்கை நெறிக்குப் பெரும் கேள்வி

நிலவுகின்றது. இது ஆண்டுதோறும் அதிகரித்து வரும் மாணவர் உள்நுழைவு எண்ணிக்கையிலிருந்து தெளிவாகிறது. தற்போது மாணவர் சேர்க்கை அதன் அதிகபட்ச நிலையை எட்டியுள்ளது. இரண்டு பட்டதாரிக் கற்கைநெறிகளும் நான்கு ஆண்டுகளுக்குள் ஆற்றல் மிக்க தகைசார் பட்டதாரிகளை உருவாக்கத்தக்க வகையில், நடைமுறைப் பிரயோகங்கள் மற்றும் செயற்திட்டங்களை உள்ளடக்கியனவாக நன்கு வடிவமைக்கப்பட்டுள்ளன.
அத்தோடு, தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சித் திட்டங்களில் மாணவர்கள் பங்கேற்க ஏதுவாக இந்தத் துறை பல விளையாட்டு அமைப்புகளுடன் இணைந்தும் செயல்படுகிறது. இத்துறையில் எல்லா வசதிகளையும் கொண்ட இரண்டு ஆய்வுகூடங்கள் உள்ளன. அவை: உடற்பயிற்சி உயிர் இரசாயனவியல் மற்றும் ஆராய்ச்சி ஆய்வுக்கூடம் என்பனவாகும். இத்துறையின் வருடாந்த மாணவர் சேர்க்கையானது 183 ஆக காணப்படுகின்றது. இத்துறையில் ஆறு சிரேஷ்ட விரிவுரையாளர்கள், இரு விரிவுரையாளர்கள், ஏழு தகுதிகாண் விரிவுரையாளர்கள், இரண்டு பயிற்சியாளர்கள், இரண்டு தற்காலிக உதவி விரிவுரையாளர்கள் பணியாற்றுகின்றனர். இத்துறையின் மூலம் புகழ்பெற்ற விளையாட்டுத்துறை நிபுணர்களைத் தருவித்தும் மாணவர்களுக்குக் கோட்பாட்டுக் கற்கைநெறிகள் மற்றும் பயிற்றுவிப்புகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2.4 வரைபட (கேத்திர) கணித பீடம்

2.4.1 சுருக்க வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் எட்டு பீடங்களில் ஒன்றான வரைபட (கேத்திர) கணித பீடமானது 2004 இல் நிறுவப்பட்டது. 1997 ஆம் ஆண்டு அளவையியல் விஞ்ஞானத்துறையில் BSc பட்டக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் பல்கலைக்கழக வரலாற்றைப் பொறுத்தவரையில் அளவையியல் விஞ்ஞானத்துறையில் ஒரு பிரத்தியேகப் பட்டக் கற்கையானது நாட்டில் அத்துறை சார்ந்து நிலவிய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். இக்கற்கை நெறியானது நான்கு ஆண்டுகளைக் கொண்ட சிறப்புப் பட்டத்திற்குரியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துறையில் முதல் தொகுதி மாணவர்கள் 1997 இல் இப்பட்டதாரிக் கற்கை நெறியில் உள்ளீர்க்கப்பட்டு 2002 இல் தமது பட்டங்களைப் பெற்றனர்.

2.4.2 பீட முகாமைத்துவம்

பீடாதிபதி

திரு. P.G.V. அபேரத்ன
BSc (Surveying Geodesy, Photogrammetry),
MSc (Photogrammetry and Geoinformatics,
Stuttgart University of Applied Sciences, Germany)
(26.03.2021 முதல்)

கலாநிதி H.M. இந்திக்க பிரசன்ன
BScHons (Surveying Sciences) (SUSL), MPhil (Geodesy)
Kong
(25.03.2021வரை)

துறைத்தலைவர்கள்

அளவையியல் மற்றும் புவிப்பரப்பியல் (Geodesy) துறை

கலாநிதி.H. திவிதுர
BScHons (Surveying Sciences) (SUSL), MSc
(International Institute for Geo-Information Science
& Earth Observation – Netherlands)

தொலையுணர்தல் மற்றும் புவியியல் தகவலமைப்புத் துறை

கலாநிதி G.S.P.B. கொஸ்வத்தே
BSc (Surveying Sciences, இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்), MPhil (PDN), PhD (Spatial Scieces, USQ, Australia)

உதவிப் பதிவாளர்

திருமதி.K.M. பூர்ணிமா
BSc (SJP)
(15.02.2021 முதல்)

திருமதி H.H.K.N. தர்மசிரி
BScHons (PDN), MSc (PGIA, PDN)
(14.02.2021 வரை)

2.4.3 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

இப்பீடமானது அளவையியல் விஞ்ஞானத்தில் ஐந்து சிறப்புப் பிரிவுகளில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) பட்டங்களை வழங்குகின்றது. அவையாவன:

1) புவிப்பரப்பியல் (Geodesy)சார் அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
2) நில முகாமைத்துவம்சார் அளவையியல்துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
3) கடலியல்சார் அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
4) தொலையுணர்தல்சார் அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
5) புவியியல் தகவலமைப்புசார் அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்

2.5 முகாமைத்துவக் கற்கைகள் பீடம்

2.5.1 சுருக்க வரலாறு

1996 ஆம் ஆண்டு செப்டம்பரில் கணக்கியல் மற்றும் நிதித் துறை மற்றும் வணிக முகாமைத்துவத் துறையின் கீழ் மூன்று ஆண்டுகளுக்கான பட்டதாரிக் கற்கைக்குரிய பட்டத்தை வழங்குவதன் மூலம் வணிகக் கற்கைகளுக்கான பீடம் தனது கற்கை நெறிகளைத் தொடங்கியது. முதல் ஆண்டு பொதுக் கற்கை மற்றும் இரண்டு ஆண்டுகள் சிறப்புக் கற்கை நிறைவடைந்த பின்னர், நிதி முகாமைத்துவம், வணிக முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் மற்றும் சுற்றுலா முகாமைத்துவம் ஆகிய துறைகளில் விஞ்ஞான இளமாணிப் பட்டங்களை வழங்கிவருகின்றது. ஆறு தொகுதி பட்டதாரி மாணவர்கள் நிதி முகாமைத்துவம், வணிக முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், சுற்றுலா முகாமைத்துவம் ஆகிய துறைகளில் முறையே 1997, 1998, 1999, 2000, 2001 மற்றும் 2002 ஆண்டுகளில் தங்கள் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டங்களைப் பெற்றுள்ளனர். 2003 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) அங்கீகாரத்துடன் வணிகவியல் கற்கைப் பீடமானது முகாமைத்துவக் கற்கைகள் பீடம் என மறுபெயரிடப்பட்டது. அதே ஆண்டில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) அங்கீகாரத்துக்கமைய முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தால் நடாத்தப்பட்ட மூன்று வருடக் கற்கை நெறிகள் யாவும் நான்கு ஆண்டுக் கற்கை நெறிகளாக மாற்றியமைக்கப்பட்டன.

தற்போது, முகாமைத்துவக் கற்கைகள் பீடமானது கணக்கியல் மற்றும் நிதியியல் துறை, வணிக முகாமைத்துவத்துறை, சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துறை மற்றும் சுற்றுலா முகாமைத்துவத்துறை எனும் நான்கு துறைகளைக் கொண்டமைந்துள்ளது.

2.5.2 பீட முகாமைத்துவம்

பீடாதிபதி	பேரா. W.K. அதுல C. ஞானபால BSc (Tourism Management) (இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்), MSc (SJP), PhD (Xiamen- P R China)

துறைத்தலைவர்கள்

கணக்கியல் மற்றும் நிதியியல்துறை	கலாநிதி D.G. தர்மரத்ன BSc (Financial Management) (SUSL), MBA (PDN), PhD (CMB)
வணிக முகாமைத்துவத்துறை	திரு .I.A. ஏக்கநாயக்க BSc (Business Management) (SUSL), MBA (SJP) (15.07.2021 முதல்)
	கலாநிதி H.P.R. ப்ரியங்கர BSc (Bus Admin) (HRM) (SJP), MBA (HRM) (CMB), PhD (WUT) (China) (14.07.2021 வரை)
சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்துறை	திரு. D. ஜாசிங்ஹ BSc (Bus Admin) (SJP), MSc (SJP)
சுற்றுலா முகாமைத்துவத்துறை	கலாநிதி P.K.S. முனசிங்ஹ BSc (Tourism Management) (இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்), MBA (PIM - SJP), PhD (New Zealand)
உதவிப் பதிவாளர்	செல்வி. P.A.P. குணசேகர BSc in Food Sciences and Technology (PDN) (08.02.2021 முதல்)
	செல்வி.G.W.N.R. விஜேரத்ன BA (SUSL), Dip in English (07.02.2021 வரை)

2.5.3 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் நான்கு துறைகளினூடே எல்லாமாக ஏழு பட்டக் கற்கைநெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கற்கைத்துறை	கற்கைநெறிகள்
வணிக முகாமைத்துவத்துறை	வணிக முகாமைத்துவத்துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறை	சந்தைப்படுத்தல் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
கணக்கியல் மற்றும் நிதியியல் துறை	நிதி முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) வங்கி மற்றும் காப்பீட்டுத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்
சுற்றுலா முகாமைத்துவத்துறை	சுற்றுலா முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம் சூழலியல் வணிக முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு) விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையில் விஞ்ஞான இளமாணி (சிறப்பு)ப் பட்டம்

2.6 மருத்துவ பீடம்

2.6.1 சுருக்க வரலாறு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடமானது இலங்கையில் உள்ள மருத்துவ பீடங்களின் வரிசையில் அண்மையில் இணைந்து கொண்டுள்ளது. இது ஆகஸ்ட் 01, 2018 இன் வர்த்தமானி அறிவிப்பு எண் 2082/32 இன் கீழ் 2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இது இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 8வது பீடமாகக் காணப்படுகின்றது. மருத்துவத் தொழில் சமூகத்தின் மிக முக்கியமான தேவைகளில் ஒன்றாகும். ஆகவேதான் மருத்துவப் பட்டங்களைப் பெற அநேக சவால்களும், தகுதிகளில் போட்டித் தன்மையும் இருந்துகொண்டு இருக்கின்றது.

இந்தப் பீடமானது 15 துறைகளை உள்ளடக்கியுள்ளது. அவை அவற்றின் கல்விக்கான நோக்கம் மற்றும் குறிக்கோள்களின் அனைத்து அம்சங்களையும் அடைய அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றன. MBBS கற்கை நெறியானது நான்கு முக்கிய துறைகளை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. அவையாவன:

கோட்பாட்டுக் கல்வி, மருத்துவப் பராமரிப்பு, சமூக ஈடுபாடு மற்றும் ஆராய்ச்சி என்பனவாகும்.
இம்மருத்துவ பீடம் குருவிட்டவில் தற்காலிகமாக நிறுவப்பட்டுள்ளதுடன் முன் மருத்துவ கற்கை அங்கு நடாத்திச்செல்லப்படுகின்றன. மேலும் , பீடத்தின் புதிய கட்டடம் இரத்தினபுரி புதிய நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் , அதன் தொழில்சார் பிரிவொன்று இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
மேலும் மாணவர்களுக்கான சிறந்த கல்வி மற்றும் கற்றல் சூழலை வழங்குவதற்காக அதிநவீன_கலை_தொழில்நுட்பங்களுடன் கூடிய மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் ஆகிய இரண்டையும் இப்பீடம் கொண்டிருக்கும்.

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையானது மாணவர்களுக்கு அனைத்து மருத்துவ பயிற்சி வசதிகளையும் வழங்குகிறது. இப்பீடம் ஒரு உட்சேர்ப்புக்கு 100 மாணவர்களை உள்வாங்குவதுடன் தற்போது 04 தொகுதி மாணவர்களுடன் MBBS பட்ட கற்கைக்கு மொத்தம் 354 மாணவர்கள் பதிவுசெய்துள்ளனர்.

2.6.2 பீட முகாமைத்துவம்

பீடாதிபதி	பேரா. M.N. விக்ரமரத்ன Graduateship in Chemistry (Institute of Chemistry), PhD in Biochemistry, Loyola University, Chicago Chicago, Illinois USA
துறைத்தலைவர்கள்	
உயிர் இரசாயனவியல்	கலாநிதி அமல் வகீஷ Graduateship in Cemistry (Institute of Chemistry Ceylon, Sri Lanka), MI Chem C., MPhil in Biochemistry (SJP), PhD in Biochemistry (UOC)
உடலியல் துறை	கலாநிதி.K.M.G.M.K.K.குலதுங்க BVSc, PhD in Human Biology (Japan)
உடற்கூற்றியல் துறை	கலாநிதி நிலந்த கம்லத்கே MBBS (SL) (Res), MD (Res), DTCD (UOC), MSc (UK) DOHS (UOC), PGCME (UOC), AET (UK)
சமூக மருத்துவதுறை	கலாநிதி. B.M.C. தசாநாயக்க(பதில் தலைவர்) MBBS (RUH), MSc in Community Meicine (UOC), MPHM (Mahidol University, Thailand)

தடயவியல் மருத்துவ துறை	கலாநிதி.டிலீப பானகல (பதில் தலைவர்) MBBS MD (Orthopaedic Surgery)
மருத்துவ துறை	கலாநிதி .G.U. ரமடாச MBBS (UOC), MD (Medicine) (UOC), FRCP (London), FCCP, Dip Pall Medicine (Clinical) RACP
நுண்ணுயிரியல் துறை	கலாநிதி . P.D.V.M.பெரேரா (பதில் தலைவர்) BVScHons (Pera)
மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியல் துறை	கலாநிதி. ஒஷாதி நல்லபெரும(பதில் தலைவர்) MBBS (PDN), MD (UOC)
குழந்தை மருத்துவ துறை	கலாநிதி. M.G.U. சம்பத் (பதில் தலைவர்) MBBS (RUH), DCH (UOC), MD Paediatrics (UOC)
ஒட்டுண்ணியியல் துறை	திரு.G.L.S. கல்கமுவ(பதில் தலைவர்) BScHons, MPhil (PDN)
நோயியல் துறை	கலாநிதி .G.A.C. கமகரனகே(பதில் தலைவர்) MBBS (SJP) DPath, MD in Clinical Haematology (UOC)
மருந்தியல்	கலாநிதி R.M.M.K.N .ரத்னாயக்க MBBS (Pera), MSc (Medical Toxicology), MSc (Clinical Pharmacology & Therapeutics), MA, MPhil (Toxinology), PG Dip in Toxicology, PG Dip in Buddhist Studies, PG Dip in Occupational Health & Safety
உளவியல் துறை	கலாநிதி.V.I. தர்மவர்த்தன MBBS (UOC), MD (UOC)
சிரேஷ்ட உதவிப் பதிவாளர்	திருமதி A.A.S. ப்ரியதர்ஷனீ BA (Sp.), MPhil (Economics) (PDN), Dip in English, Dip in HRM

2.6.3 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள்

MBBS – மருத்துவத்துறை இளமாணி மற்றும் அறுவை சிகிச்சைத்துறை இளமாணிப் பட்டக் கற்கைநெறிகள்

மருத்துவ பீடமானது பின்வரும் கற்கைத்துறைகளை உள்ளடக்கியுள்ளது:

1. உடற்கூறியல் துறை
2. உயிரியல் இராசயனத் துறை
3. உடலியல் துறை
4. ஒட்டுண்ணித் துறை
5. நுண்ணுயிரியல் துறை
6. தடயவியல் மருத்துவம் மற்றும் நச்சுவியல் துறை
7. நோயியல் துறை
8. சமூக மருத்துவத் துறை
9. குடும்ப மருத்துவத் துறை
10. மருந்தியல் துறை
11. அறுவை சிகிச்சை துறை
12. மருத்துவத் துறை
13. குழந்தை மருத்துவத்துறை
14. மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியல் துறை
15. உளவியல் துறை

2.7 சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம்

2.7.1 சுருக்க வரலாறு

சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடமானது சபரகமுவ பல்கலைக்கழகத்துடன் இணைத்து 1996 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இப்பீடம் ஆரம்பத்தில் மொழிகள் துறை மற்றும் சமூக விஞ்ஞானத் துறை எனும் இரண்டு கற்கைத் துறைகளைக் கொண்டிருந்தது. பீடத்தின் மூன்றாவது துறையான, ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை 2004 இல் ஆரம்பிக்கப்பட்டது. நான்காவது துறையான பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறை 2009 இல் ஆரம்பிக்கப்பட்டது. புவியியல் மற்றும் சூழலியல் முகாமைத்துவத் துறை 2015 ஆம் ஆண்டில் ஐந்தாவது துறையாக நிறுவப்பட்டது. 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பீடம் அதன் கல்வி நடவடிக்கைகளில் முன்னாள் இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியின் மாணவர்களை, அவர்களின் ஆங்கில டிப்ளோமாக் கற்கை நெறிகளுடன் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு ஒரு பட்டக் கற்கைநெறியைத் தொடர அனுமதித்தது. 1998 ஆம் ஆண்டிலிருந்தே இப்பீடம் உயர்தரத்தில் தகுதி பெற்ற மாணவர்களுக்கான பதிவுகளை மேற்கொள்ளத் தொடங்கியது.

தூரநோக்கு மற்றும் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு இப்பீடமானது அதன் துறைகளின் மூலம் கற்கைநெறிகளுக்கான சிறப்புப் பட்டங்களை வழங்கி வருகிறது. 2007 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வந்த மூன்று ஆண்டு காலப் பாடநெறிகளுக்குச் சிறப்புப் பட்டம் வழங்குதல் எனும் தனது ஆரம்பகால எண்ணக்கருவை மாற்றியமைத்து, மூன்று ஆண்டுகால சமூக விஞ்ஞானத்துக்கான சிறப்புப் பட்டக் கற்கையைத் தவிர, பொருளியல், புள்ளிவிபரவியல், புவியியல், அரசறிவியல், சமூகவியல் மற்றும் மானிடவியல் ஆகிய துறைகளில் நான்கு ஆண்டுகளுக்கான சிறப்புக் கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

2013 ஆம் ஆண்டு முதல் சிங்களம், தமிழ், ஆங்கிலம், ஜெர்மன், ஜப்பானிய, சீன மற்றும் ஹிந்தி மொழிகளில் நான்கு ஆண்டுகளுக்கான சிறப்புக் கற்கைநெறிகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. 2014 ஆம் ஆண்டில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தில் கலைத்துறை சிறப்புப் பட்டத்தையும், 2015 இல் மொழிபெயர்ப்புக் கற்கையில் கலைத்துறை சிறப்புப் பட்டத்தையும் இப்பீடம் அறிமுகப்படுத்தியது. தற்போது, பீடமானது நான்கு ஆண்டுகளுக்கான சிறப்புப் பட்டங்களையும், மூன்று ஆண்டுகளுக்கான பொதுப் பட்டங்களையும் மட்டுமே வழங்கி வருகிறது.

சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் மாணவர்களை மனிதநேய பாரம்பரியத்தோடு இணைத்து பல துறைகளில் விரிவான புரிந்துணர்வைப் பெற்றுக் கொடுத்து அவர்களைத் தொழில்முறை வாழ்க்கைக்குத் தயார்படுத்துகிறது. சமகால உலகில் உள்ள பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொண்டு தமது துறைசார் பணிகளுக்குப் பயன்படும் வகையில் தாம் பெற்ற

அறிவைப் பயன்படுத்துவதற்கான திறனை மேம்படுத்தும் வகையில் இப்பீடத்தின் கற்கைநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இப்பீடமானது சுயாதீனமான விமர்சன சிந்தனை, தர்க்க ரீதியான பகுப்பாய்வு, பயனுள்ள தகவல் தொடர்பு என்பவற்றை மேம்படுத்தி, குழுப் பணிகளில் மாணவர்களின் திறனை வளர்ப்பதற்குப் பாடுபடுகிறது. எனவே, இப்பீடத்தின் கலைத் துறை பட்டப் படிப்பானது வகுப்பறை வேலை மற்றும் மாணவர்களின் சுயாதீனமான வாசிப்பு, எழுத்து, ஆய்வு மற்றும் செயற்திட்டப் பணிகள் என்பவற்றை ஒருங்கிணைத்து மாணவர்களுக்கு அளிக்கும் வகையில்

ஒழுங்கமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

2.7.2 பீட முகாமைத்துவம்

பீடாதிபதி	கலாநிதி M.A.C.S.S. பெர்னாண்டோ BScHons (Statistics) (SJP), MPhil (PDN), PhD (University of Auckland)

துறைத்தலைவர்கள்

பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை	கலாநிதி R.A.H.M. ரூபசிங்ஹ BSc (Computing and Information Systems) (SUSL), MSc (Computer Science and Engineering) (University of Aizu, Japan), PhD (Computer Sciences and Engineering) (University of Aizu, Japan)
ஆங்கில மொழி கற்பித்தல் துறை	கலாநிதி K.S.N. பிரசங்கனி BAHons (SUSL), MA in Linguistics (KLN), PhD (University Malaysia, Sarawak)
புவியியல் மற்றும் சூழலியல் முகாமைத்துவத்துறை	கலாநிதி.R.J.M. உடுபொறுவ BAHons (Geography) (SJP), PGDip (MRT), PhD(UOC) (18.05.2021 முதல்) கலாநிதி K.V.D.E. மெனிக்கே BA (Geography) (SJP), MA (Geography) (SJP), PhD(Geography) (SJP) (17.05.2021 வரை)

மொழித் துறை	கலாநிதி H.A.M.A. ஹபுகொட BAHons (SUSL), MA (SUSL), PhD (UOC) (13.04.2021 முதல்)
	பேரா R.G.S. ரத்னாயக்க BA (Sp.) (Hindi) (KLN), MPhil (Hindi) (KLN), PhD (Hindi) (MGAHV, India) (12.04.2021 வரை)
சமூக விஞ்ஞான துறை	கலாநிதி U.P. லேகம்கே BAHons (PDN), PG Dip (TESL) (UOC), MA (KLN), MSSc (KLN), MA (UOC), PhD (SIJ) (22.11.2021 முதல்)
	திரு. S.K. ஹந்தராகம BAHons (Sp.) (Sociology) (UOC), MA (Sociology) (UOC), PhD (Reading) (AIT) (20.11.2021 வரை)
உதவிப் பதிவாளர்	திருமதி யசோதா சந்திரசேகர LL.B. Hons (Law) (UOC)

2.7.3 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள்

சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் ஐந்து துறைகளைக் கொண்டமைந்துள்ளது. அவையாவன: பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை, புவியியல் மற்றும் சூழலியல் முகாமைத்துவத் துறை, மொழிகள் துறை, சமூக விஞ்ஞானத்துறை மற்றும் ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை என்பனவாகும்.

இப்பீடத்தினால் பின்வரும் கற்கைநெறிகளுக்காகப் பட்டங்கள் வழங்கப்படுகின்றன:

1. கலைத் துறை (சிறப்பு)ப் பட்டம் (நான்கு ஆண்டுகள்)
2. கலைத் துறைப் பொதுப் பட்டம் (மூன்று ஆண்டுகள்)

பீடத்தில் உள்ள அனைத்து துறைகளின் ஆதரவோடு BA பொதுப் பட்டக் கற்கைநெறியும் நடாத்தப்படுகிறது. அதேவேளை, அதனோடு தொடர்புடைய பின்வரும் பாடங்களில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டங்களும் வழங்கப்படுகின்றன:

பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை

பொருளியலில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்
புள்ளிவிபரவியலில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம் (ஆங்கில மொழியில் மட்டும் வழங்கப்படுகிறது)

புவியியல் மற்றும் சூழலியல் முகாமைத்துவத் துறை

புவியியலில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

மொழிகள் துறை

சிங்களமொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்
தமிழ்மொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்
ஆங்கிலமொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்
ஜெர்மன் மொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்
ஜப்பானிய மொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்
சீன மொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்
ஹிந்தி மொழியில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்
மொழிபெயர்ப்புக் கற்கையில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

சமூகவியல் துறை

அரசறிவியலில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்
சமூகவியலில் இளங்கலைமாணி (சிறப்பு)ப் பட்டம்

ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை (DELT)

ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையானது (DELT) ஆங்கிலத்தை பிரதான/துணைப் பாடமாகவும், இரண்டாம் மொழிப் (ESL) பாடமாகவும் கற்பிக்கின்றது. அதுமட்டுமன்றி, மாணவர்களின் பல்கலைக்கழகக் காலம் முழுவதும் இத்துறையினால் ஆங்கில மொழிப் பாடநெறி கற்பிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2.8 தொழினுட்பவியல் பீடம்

2.8.1 சுருக்க வரலாறு

இத் தொழினுட்பவியல் பீடமானது, நவம்பர் 07, 1995 இன் வர்த்தமானி சிறப்பு இலக்கம் 896/2 இன் படி இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பீடங்களோடு 2018 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது. இப்பீடத்தில் பொறியியல் தொழினுட்பவியல் துறை மற்றும் உயிரமைப்புத் தொழினுட்பவியல் ஆகிய இரு துறைகள் நிறுவப்பட்டன.

2.8.2 பீட முகாமைத்துவம்

பீடாதிபதி

கலாநிதி A.D. அம்பிட்டியாவத்த
BSc (Agriculture) (RUH), MSc (Agriculture) (PDN), D. Eng (Water Resource Engineering) (Wuhan, PR China)

துறைத்தலைவர்கள்

பொறியியல் தொழினுட்பவியல் துறை

கலாநிதி K.R. கொஸ்வத்தகே
BSc (Sp.) (Physics) (UOC), MSc. (Kobe University, Japan), PhD (Kobe University, Japan)

உயிரமைப்புத் தொழினுட்பவியல் துறை

கலாநிதி W.G. M. S. பெரேரா
BScHons (Sp.) (Chemistry) (PDN), PhD (Chemistry) (University of Texas at San Antonio, USA)

உதவிப் பதிவாளர்

திருமதி. N. அகல்யா
BBA (Financial Management), CBA (CA Sri Lanka)
(01.08.2021 முதல்)

செல்வி. W.N.K.வெரகல
BSc (Agricultural Technology and Management) (PDN)
(18.02.2021 -31.07.2021)

திரு. D.S.R.C. சவனவடு
BSc (Information Technology) (SLIIT), MSc (Computer Sciences), (PDN)
(17.02.2021 வரை)

2.8.3 பீடத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறிகள்

உயிரமைப்புக்கள் தொழினுட்பவியலில்: BBST (சிறப்பு)

பொறியியல் தொழினுட்பவியலில் BET (சிறப்பு)



3. கற்பித்தல் வளங்கள்

3.1 நூலகம்

3.1.1 நூலகத்தின் விபரம்

பிரதான நூலகமானது முழுப் பல்கலைக்கழகத்திற்கும் அவர்களின் கல்விசார் கற்கைநெறிகளில் சிறந்த தரத்தை அடையும் வகையில் தனது சேவைகளைச் சிறப்பாக வழங்கிவருகிறது. முகாமைத்துவப் பீட நூலகமானது முகாமைத்துவக் கற்கை நெறிகள் பீடத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. விவசாய விஞ்ஞான பீட நூலகமானது விவசாய விஞ்ஞான பீடத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. மருத்துவ பீடமானது தனக்கான பிரத்தியேக நூலகமொன்றினைக் கொண்டமைந்துள்ளது. நூலகத்தின் சேகரிப்புகள் மற்றும் சேவைகள் பாடத்திட்டத்தின் அடிப்படை நோக்கம், ஆய்வுத் தேவைகள் என்பவற்றோடு பொருந்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சபரகமுவ பல்கலைக்கழகத்தின் நூலகங்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் புதிய சவால்களுக்கு ஈடுகொடுக்கும் வண்ணம் வாசகர்களை மையமாகக் கொண்ட தரமான தகவல் தயாரிப்புகள், சேவைகள் மற்றும் மாற்றமுறும் தகவல் தேவைகளுக்கு ஏற்ப சேவைகளை வழங்கிவருகின்றது.

2021 ஆம் ஆண்டின் இறுதியில் நூலகங்களின் அனைத்து புத்தகங்களினதும் தொகுப்பு சுமார் 134,000 ஆகும். இதில் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள், நூலகத்திற்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற புத்தகங்கள் உள்ளிட்டு, சிறுபிரசுரங்கள் ஒலி-ஒளிநாடாக்கள் மற்றும் மின்னியல் தகவல்மூலங்களும் அடங்கும்.

3.1. 2 உள்ளக நடவடிக்கைகள்

நூலகக் குழு

நூலகக் குழுவானது, செனட்டின் ஒரு துணைக் குழுவாகவும், சபரகமுவ பல்கலைக்கழக நூலகத்தின் முதன்மை நிர்வாக அமைப்பாகவும் காணப்படுகின்றது. நூலகக் குழுக் கூட்டம் ஒவ்வொரு மாதமும் தவறாமல் இடம்பெறுமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குழுவின் செயலாளராக நூலகர் இருப்பார். குழுவின் தலைவர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆவார்.

நூலகங்களின் நோக்கங்கள்

சுயகற்கையையும் சுய முன்னேற்றத்தையும் ஊக்குவிப்பதன் ஊடாக பல்கலைக்கழகங்களை முன்னேற்றுவதை பிரதான இலக்காகக் கொண்டு இயங்குவதில் நாட்டில் உள்ள பல்கலைக்கழக நூலகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சபரகமுவ பல்கலைக்கழகத்தில் பிரதான நூலகம் தவிர மூன்று கிளை நூலகங்கள் உள்ளன. முகாமைத்துவக் கற்கைகள் பீட நூலகம், விவசாய விஞ்ஞான பீட நூலகம், மருத்துவ பீட நூலகம் என்பனவே அவையாகும்.

பிரதான நூலகமானது தற்போது சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், வரைபட (கேத்திர) கணித பீடம், தொழினுட்பவியல் பீடம், பட்டதாரிக் கற்கைகள் பீடம் முதலான ஐந்து பீடங்களின் கற்றல் தேவைகளை நிறைவேற்றுகிறது. விவசாய விஞ்ஞான பீடம், முகாமைத்துவக் கற்கைகள் பீடம், மருத்துவ பீடம் ஆகியவற்றில் அமைந்துள்ள நூலகங்கள் தங்கள் இளங்கலைமாணிப் பட்டதாரிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. தற்போது இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகமானது மின்தகவல் வழங்கலை மேம்படுத்துவதில் செயற்றிறனுடன் ஈடுபட்டுவருகிறது. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக வலைபின்னலானது பிரதான நூலகத்திற்கான புதிய கட்டடத்தை மேம்படுத்துவதோடு, அதன் காப்பாளர்களுக்கான வசதிவாய்ப்புக்களை விரிவாக்கம் செய்யவும் தீர்மானித்துள்ளது. நூலகத்தினால் புதிய கட்டட நிர்மாணத்துக்குச் சமாந்திரமாக தரத்திலும் அளவிலும் மனித வள மேம்பாட்டுக்கு அப்பால் கொடைவழங்குநர் மூலமும் கொள்வனவின் மூலமும் பெறப்பட்ட உசாத்துணை மூலங்கள் முதலான பௌதீக வளங்களை மேம்படுத்துவதில் கவனக் குவிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.1.3 பிற செயற்பாடுகள் - 2021

நியமனங்கள், பதவி உயர்வுகள், நிகழ்வுகள்

- திரு. I.D.K.L. பெர்னாண்டோ அவர்கள் பிரதான நூலகத்தின் தரம் **II** சிரேஷ்ட துணை நூலகராக 31.03.2021 முதல் பணியேற்றுள்ளார்.

- செல்வி W.W.S.T. வர்ணசூரிய**,** அவர்கள் பிரதான நூலகத்தின் உதவி நூலகராக 11.10.2021 முதல் பணியேற்றுள்ளார்.

- திரு. A.K.N. லூயிஸ் மற்றும் திருமதி.H.M.T.U. குமாரி ஆகியோர் பிரதான நூலகத்தின் சிரேஷ்ட துணை அலுவலர்களாக பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

- திரு.K.A.S.W. கெவிடியாகல**,** திரு. P.H.S.W. கருணாரத்ன மற்றும் திரு. R.M.D. ஜெயநுவன் ஆகியோர் நூலக தகவல் உதவியாளர் தரம் **I** இற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளனர். செல்வி B.D.M. பிரியங்கனி நூலக தகவல் உதவியாளர் தரம் **II** இற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

- செல்வி A.M.K.P. அத்தநாயக்க மற்றும் திரு. W.K.N. குணதிலக ஆகியோர் நூலக அலுவலர் தரம் **I** இற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

- இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட துணை நூலகரான கலாநிதி. மஞ்சுள விஜேவிக்ரம அவர்கள் இலங்கை பல்கலைக்கழக நூலகர்கள் சங்கத்தினால் "வருடாந்த ஆய்வாளர் விருது-2021" வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்

செயற்பாடுகள்

ஆண்டு	சாதனை	நிறுவனம்
2021	இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட துணை நூலகரான கலாநிதி. மஞ்சுள விஜேவிக்ரம அவர்கள் இலங்கை பல்கலைக்கழக நூலகர்கள் சங்கத்தினால் "வருடாந்த ஆய்வாளர் விருது-2021" வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்	பல்கலைக்கழக நூலகர்கள் சங்கம்

மனித வள மேம்பாட்டுக்காக கலந்து கொண்ட பட்டறைகள் / பயிற்சிகள்- 2021

பங்கேற்பாளர்	பட்டறை / பயிற்சி / மாநாட்டு	திகதி & இடம்
T.N. ஞெய்சூரி / நூலகர் H.P.K.N.D. சிறிவீர / உதவிப் பதிவாளர்	Workshop on meeting techniques	2021.03.04, SDC
H.P.K.N.D. சிறிவீர / உதவிப் பதிவாளர்	Training programme for preparation of fixed assessment	2021.03.18 / முகாமைத்துவப்பீடம்
திருமதி.T.N. ஞெய்சூரி / நூலகர்	Introduction to Library (Orientation programme)	2021.03.26 / மருத்துவ பீடம்
நூலகத்தின் அனைத்து கல்வி, நிர்வாக, கல்விசாரா பணியாளர்கள்	Capacity Building programme	07.09.2021
திருமதி M.G.P.K. பிரேமதாச செல்வி M.H.P.V. குமாரி திரு. S. ஹெட்டியாராச்சி திருமதி H.M.T.U. குமாரி திருமதி M.R.N.P. ஏக்கநாயக்க திருமதி B.D.M. பிரியங்கனி திரு. D.K.S. காமினி திரு. A.M. பிரேமவர்தன திருமதி K.L.D.C. லேகம்கே திருமதி D.M. நில்லேகொட திரு. P.H.S.W. கருணாரத்ன திருமதி P.R.சிரியலதா	“ආකල්ප සංවර්ධනය, ඵලදායිතාව සහ 5 සංකල්පය, තත්ත්ව කව හැඳින්වීම සහ තත්ත්ව කව මෙවලම්, කයිසෙන් හා හරිත ඵලදායිතාවය යන විෂයන් යටතේ ජාතික ඵලදායිතා ලේකම් කාර්යාලයේ සම්පත් දායකත්වයෙන් කාර්ය මණ්ඩල සංවර්ධන මධ්‍යස්ථානයේ පවත්වනු ලැබූ පුහුණු වැඩමුළුව”	2021.11.23-2021.11.24 2021.11.30-2021.12.01 2021.12.15-2021.12.16
திருமதி.T.N. ஞெய்சூரி / நூலகர் திரு. குசல பெர்னாண்டோ / சிரேஷ்ட துணை நூலகர் திருமதி த்ரிஷலா வர்ணசூரிய / உதவி நூலகர் H.P.K.N.D. சிறிவீர / உதவிப் பதிவாளர் திருமதி H.M.T.U. குமாரி / சிரேஷ்ட துணை அலுவலர் திருமதி D.M. நில்லேகொட / சிரேஷ்ட துணை அலுவலர் திரு. A.M. பிரேமவர்தன / நூலக தகவல் உதவியாளர்	Awareness Programme on Procurement Process	21.12.2021

பங்கேற்பாளர்	பட்டறை / பயிற்சி / மாநாட்டு	திகதி & இடம்
H.P.K.N.D. சிறிவீர / உதவிப் பதிவாளர்	Awareness Programme on Board f Survey	22.12.2021
T.N. ஞெய்சூரி / நூலகர் H.P.K.N.D. சிறிவீர / உதவிப் பதிவாளர்	Unqualified Audit Opinion	29.12.2021

3.2 கணினி விஞ்ஞானக் கற்கைகளுக்கான நிலையம்

3.2.1 அறிமுகம்

கணினிக் கற்கைகளுக்கான நிலையமானது இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்திற்குத் தகவல் தொழினுட்பம் தொடர்பான பல கல்விசார் மற்றும் தொழினுட்பச் சேவைகளை வழங்கிவருகிறது. இந்த நிலையம் கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும் கல்விசார் துணை ஊழியர்களுக்கும் தொழினுட்பப் பாடத்திட்டத்தை வகுப்பதற்கு உதவுவதோடு, அத்துறைசார்ந்த பல்வேறு பயிற்சிகளையும் அளிப்பதோடு, பல்வேறு பீடங்களின் கற்கைகளை மேற்கொள்ளவும் அவற்றை மேற்பார்வையிடவும் பங்களிப்புச் செய்து வருகின்றது.

கணினிக் கற்கைகளுக்கான நிலையமானது முழுப் பல்கலைக்கழகச் சமூகத்திற்கும் பல்கலைக்கழக வலையகச் சேவை மற்றும் மின்னஞ்சல் வசதியை வழங்கி வருகிறது. கணினிக் கற்கைகளுக்கான நிலையமானது வளாகம் முழுவதற்கும் இணையதள மற்றும் வலையமைப்பு வசதிகள், பிற வலையமைப்புச் சேவைகளுக்கு நிகரான கற்றலுக்குரிய சூழல், மின்னியல் கற்றல் வசதி மற்றும் வன்பொருள் மென்பொருள் பராமரிப்புச் சேவைகள் ஆகிய சேவைகளை வழங்குகிறது.

3.2.2 வரலாறு

சபரகமுவ பல்கலைக்கழக கணினி மையத்தின் வரலாறானது 1991 இல் சபரகமுவ மாகாணத்தின் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி (AUC) திறக்கப்பட்ட காலத்திற்குப் பின்னோக்கிச் செல்கிறது. இது முதன்முதலில் சமனலவெவ நீர்மின்சக்தி திட்டத்திற்குச் சொந்தமான ஒரு குடியிருப்புக்கான கட்டிடத்தில் நிறுவப்பட்டதோடு, இப்போது இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் D1-4 விடுதியில் அமைந்துள்ளது.

ஆரம்பத்தில், இது 1Mb RAM, 40MB வன் வட்டுகளையும் (Hard disks) மற்றும் OKI 9-pin dot-matrix அச்சு இயந்திரத்தையும் கொண்ட 10 Tatung 286 கணினிகளையும் கொண்டிருந்தது. ஒன்றிணைந்த பல்கலைக்கழக கல்லூரியாக இருந்தபோது மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச, அவர்களால் இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

ஒன்றிணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியானது ஆரம்ப ஆண்டுகளில் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்ததுடன், கணக்கியல் மற்றும் நிதி, சுற்றுலா முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் ஆங்கிலத்தில் டிப்ளோமா போன்ற மூன்று கற்கை நெறிகளையும் நடாத்தியது. கணினி மையத்தால் வழங்கப்படும் கணினிக் கற்கைநெறிகளுக்கு ஏனைய அனைத்துக் கற்கை நெறிகளாலும் வழங்கப்படும் டிப்ளோமாவைப் பெறுவது கட்டாயமாகும்

சில காலங்களுக்குப் பிறகு, போதைப் பொருட்களால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட அபராதங்களிலிருந்து சமூகப் பணிகளுக்காக நன்கொடை வழங்கும் நிதித் திட்டத்தை ஆரம்பித்த பலங்கொட மாவட்ட நீதிபதியிடமிருந்து 15,000/= ரூபாவையும், "சிரமதான பிரசாரங்கள்" ஊடாக ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் கிராமவாசிகளின் உதவியுடன் தற்போதுள்ள கணினி மையக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியாக, இந்த மையம் அரசாங்க நிதி உதவியுடன் பூர்த்தி செய்யப்பட்டது. சமனலவெவ திட்டத்திலிருந்து பெற்றுக் கொண்ட கட்டிடங்களுக்கு மேலதிகமாக இணைந்த பழைய பல்கலைக்கழகக் கல்லூரி கேட்போர் கூடத்துடன் ஒன்றாக இணைத்துக் கட்டப்பட்ட முதல் கட்டடம் இதுவாகும்.

ஆரம்பத்தில் கணினி மையத்திற்கான உத்தியோகத்தர் குழுவில் ஒருவர் கணினி மையத்திற்கு விரிவுரைகள் மற்றும் செய்முறைகளை நடத்துவதற்காகக் கணினித் தொழினுட்பத்தில் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டார். இதற்கிடையில், கணினி மையத்தின் பணிகளை விரிவுபடுத்தும் வகையில் மேலும் இரண்டு பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும், இது ஒன்றிணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி அமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரே நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது.

இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியானது ஒரு தேசிய பல்கலைக்கழகமாக மேம்படுத்தப்பட்ட பின்னர் 1996 ஆம் ஆண்டில் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகமாக மாற்றியமைக்கப்பட்டது. கணினி மையம் அதன் சேவைகளை பல்வேறு பட்டதாரிக் கற்கை நெறிகளுக்கு வழங்கத் தொடங்கியது. குறிப்பாக, தகவல் தொழினுட்பம் அல்லாத பீடங்களுக்கான தகவல் தொழினுட்பம் தொடர்பான பாடங்களுக்கான பாட வழிகாட்டிகளை வடிவமைப்பதன் மூலம் விரிவுரைகள் மற்றும் செய்முறை வகுப்புகளை நடத்தி தனது சேவைகளை வழங்கியது.

மேலும், பல்கலைக்கழகத்திற்கான கணினிகள் மற்றும் கணினித் தொழினுட்பம் தொடர்பான ஒப்பந்த அடிப்படையிலான பிற உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஆவணங்களைத் தயாரிப்பதற்கும், அவற்றை மதிப்பீடு செய்வதற்குமான தொழினுட்ப அறிவை வழங்கியதோடு, பல்கலைக்கழகத்தின் எழுதுவினைஞர்களுக்கு அவர்களின் அன்றாட வேலைகளில் தொழினுட்ப அறிவைத் திறம்படப் பயன்படுத்துவதற்கும், கல்விசார் ஊழியர்களுக்கு உதவுவதற்கும் முதுமாணிக் கற்கைகளுக்கான ஆய்வேடுகளைத் தயாரிப்பதற்கும் கற்பித்தல் கையேடுகளைத் தயாரிப்பதற்கும் தேவையான தொழினுட்ப அறிவை வழங்கிச் சேவையாற்றியது.

பல்கலைக்கழகத்தினதும் அதன் செயல்பாடுகளினதும் விரிவாக்கத்துடன், கணினி மையம், கணினிக் கற்கைகளுக்கான மையம் என மறுபெயரிடப்பட்டது. குறிப்பாக, முகாமைத்துவக் கற்கைகள் பீடம், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம் என்பவற்றினால் மேற்கொள்ளப்படும் பட்டதாரிக் கற்கைகளோடு தொடர்பான பாடநெறிகளுக்குத் தேவையான உதவிகளைப் பரந்தளவில் வழங்க ஒரு பணிப்பாளரின் கீழ் அது மீண்டும் ஒழுங்கமைக்கப்பட்டது. அதன் சேவைகளை விரிவு படுத்துவதற்காகத் தற்போதுள்ள மையத்திற்கு அருகில் மற்றொரு கட்டடம் அமைக்கப்பட்டது.

அதேநேரத்தில் பல்கலைக்கழகத்தின் உள்ளக வலையமைப்பை LEARN வழியாக இணையத்துடன் இணைத்துள்ளதுடன், முழுப் பல்கலைக்கழகச் சமூகத்திற்கும் இணையம் மற்றும் வலையமைப்புச் சேவைகளை வழங்கவும் பராமரிக்கவும் ஆரம்பித்தது. சபரகமுவ பல்கலைக்கழக வலையத் தளத்தைத் தொடங்குதல் மற்றும் மின்கற்றல் சூழலை வழங்குதல் ஆகியவை மையத்தால் வழங்கப்பட்ட சேவைகளின் முக்கிய அம்சங்களாகும்.

அதேவேளை, கணினிக் கற்கைகள் மையம் வழங்கும் சேவைகளை வலுப்படுத்துவதற்காக, அதன் ஊழியர்களின் தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது, 2012 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் பட்டியலின் படி, கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்:

3.2.3 நிரந்தர ஊழியர்கள்

பணிப்பாளர் - திரு. R.L. தங்கல்ல
சிரேஷ்ட விரிவுரையாளர்- தரம் II / பிரயோக விஞ்ஞான பீடம்

பெயர்	பதவி	மின்னஞ்சல் முகவரி
திரு. R.V.S.P.K. ரணதுங்க	சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II)	spkr@ccs.sab.ac.lk
திரு. R.M.N.B. ரத்னாயக்க	சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II)	nevil@ccs.sab.ac.lk
கலாநிதி H.K. சாலிந்த ப்ரேமதாச	சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II)	salinda@ccs.sab.ac.lk
திரு. N.J. மல்ராஜ் சில்வா	விரிவுரையாளர்	malraj@ccs.sab.ac.lk
திரு. S. நிமிஷான்	விரிவுரையாளர் (தகுதிகாண்)	nimishan@ccs.sab.ac.lk

கல்விசார் உதவி ஊழியர்களின் விபரங்கள்

பெயர்	பதவி	மின்மடல் முகவரி	பணி இடம்
திரு. W.H.D. ப்ரேமவர்தன	பயிற்றுவிப்பாளர் (தரம் I)	ccwhd@ccs.sab.ac.lk	CCS/AGR
திரு.W.R.Y.S. சமரசேகர	பயிற்றுவிப்பாளர் (தரம் II)	yasantha@ccs.sab.ac.lk	CCS/SSL
செல்வி. A.C. நாணயக்கார (கற்கை விடுமுறையில்)	பயிற்றுவிப்பாளர் (தரம் II)	chethana@ccs.sab.ac.lk	CCS/SSL
திரு. H.M.M.A. ஹேரத்	CT பயிற்றுவிப்பாளர் (தரம் II)	mahesh@ccs.sab.ac.lk	CCS/MGT
திரு.A.C.P.K. சிறிவர்தன (கற்கை விடுமுறையில்)	பயிற்றுவிப்பாளர் (தரம்II)	chaminda@geo.sab.ac.lk	CCS/AGRI
திருமதி J.D.U. இந்துமினி	பயிற்றுவிப்பாளர் (தரம்II)	indumini@ccs.sab.ac.lk	CCS/GEO/ MGT
செல்வி. K.T. தனஞ்சலி	தற்காலிகப் பயிற்றுவிப்பாளர் (தரம் II)	dananjali@ccs.sab.ac.lk	CCS/SSL/ MGT
திரு. W.G.S. ஸமீர	தற்காலிக செயல்முறை விளக்குநர்	sameera@ccs.sab.ac.lk	CCS/SSL
திரு. E.S.A. குணசிங்க	உதவி வலையமைப்பு முகாமையாளர் (தரம் I)	suranjith@ccs.sab.ac.lk	CCS

பெயர்	பதவி	மின்மடல் முகவரி	பணி இடம்
திரு. S.A.S.K.J. பெரேரா	உதவி வலையமைப்பு முகாமையாளர் (தரம் II)	sadeepa@ccs.sab.ac.lk	CCS
திரு. J.N.C. மல்லிகரத்னா	கணினி நிரலர் (தரம் II)	chamara@ccs.sab.ac.lk	CCS
செல்வி J.M.L.R.P. ஜெயசிங்க	தற்காலிக செயல்முறை விளக்குநர்	hiru.0316@gmail.com	CCS/SSL
திருமதி H.K.N. உதயங்கனி	தற்காலிக செயல்முறை விளக்குநர்	niroshima@ccs.sab.ac.lk	CCS/AGRI

திரு. R.M.N.B. ரத்னாயக்க (சிரேஷ்ட விரிவுரையாளர்) அவர்கள் கணினி மையம் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடத்தின் இணைப்பாளராகப் பணியாற்றி வருகிறார். சிரேஷ்ட பயிற்றுவிப்பாளரான திரு. ப்ரேமவர்தன அவர்கள் விவசாய விஞ்ஞான பீடத்தின் தகவல் தொழினுட்ப இணைப்பாளராகப் பணியாற்றுகின்றார். திரு. H.M.M.A. ஹேரத் அவர்கள் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் தகவல் தொழினுட்ப இணைப்பாளராகப் பணியாற்றுகின்றார். அவ்வந்த பீட நிர்வாகக் குழுக்களில் பங்குபற்றும் இணைப்பாளர்கள் கணினிக் கற்கைகளுக்கான மையத்தின் பணிப்பாளரோடு இணைந்து பல்கலைக்கழகப் பீடங்களுக்குத் தேவையான மனிதவளத்தையும் தகவல் தொழினுட்பம் சார்ந்த சேவைகளையும் ஒருங்கிணைத்து வழங்கி வருகின்றமை கவனத்துக்குரியது.

இப் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் செயல்முறை விளக்குநர்கள் தகவல் தொழினுட்பம்சார்ந்த விரிவுரைகள், செயல்முறைப் பயிற்சிகளைத் தேவைக்கேற்ப வழங்கும் வகையில் விவசாய விஞ்ஞான பீடம், பிரயோக விஞ்ஞான பீடம், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம், முகாமைத்துவக் கற்கைகள் பீடம் ஆகிய நான்கு பீடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வலையமைப்பு உதவி முகாமையாளர்களான திரு. E.S.A. குணசிங்ஹ மற்றும் திரு. S.A.S.K.J. பெரேரா ஆகியோர் பல்கலைக்கழக LAN வலையமைப்பினைப் பரிபாலித்து, அதன் செயற்பாட்டை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருவதோடு, பணிப்பாளரின் மேற்பார்வையின்கீழ் புதிய வலையமைப்புச் சேவைகளை உள்ளீர்ப்பதிலும் செயற்பட்டு வருகின்றார்.

கணினி நிரலர் திரு. J.N.C. மல்லிகரத்னா பல்கலைக்கழக இணையதள பராமரிப்பு மற்றும் மேம்பாடு, கட்டண நுழைவாயில் கையாளுதல் மற்றும் இயக்குனரால் ஒதுக்கப்படும் பிற நிரலாக்கம் தொடர்பான பொறுப்புகளை கையாளுகின்றார்.

கல்விசாரா ஊழியர்களின் விபரங்கள்

பெயர்	பதவி	மின்மடல் முகவரி	பணி இடம்	சேவை வழங்கு மிடம்/ பணியின் தன்மை
திரு. P.S. ப்ரேமலால்	கணினிச் செயலி உதவி யாளர் (தரம்.I)	sanjewa@ccs.sab.ac.lk	CCS	இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் / மென்பொருள் பராமரிப்பு
திரு. H.J.C. செனரத்	தொழினுட்ப அலுவலர் (தரம்.II)	hjcsenarath@gmail.com	CCS	இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் / வன்பொருள் பராமரிப்பு
திரு. D.A. சத்துரங்க	ஊழியர் (தரம்.III)	asithachathuranga5@gmail.com	CCS	CCS
திரு. G.A.R. இந்திக்க	ஆய்வுகூட ஊழியர் (கடைநிலை)	ranilindika2244@gmail.com	CCS	CCS

பீடக் கணினி மையங்கள் உட்பட பல்கலைக்கழக மையங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் உள்ள கணினி மற்றும் கணினிசார் உபகரணங்களில் ஏற்படக்கூடிய மென்பொருள் மற்றும் வன்பொருள்சார் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் கணினிச் செயலி உதவியாளர்கள் செயலாற்றி வருகின்றனர். திரு. சஞ்சீவ ப்ரேம்லால் மற்றும் திரு. ஜனக செனரத் ஆகியோர் மேற்கண்ட பணிகளில் ஈடுபட்டு வருவதோடு, பழுதடையும் கணினிசார் உபகரணங்கள் குறித்த தகவல்களை பொறுப்புடைய நிர்வாகத் தரப்பினருக்கு அறியத்தந்து உரிய ஆலோசனைகளுக்கு அமைவாக அவற்றைச் சீரமைப்பதிலும் முனைந்து வருகின்றனர்.

3.2.4 தற்போதைய நிலைவரம்

தற்போது பல்வேறுபட்ட பீடங்களின் வேண்டுகோளுக்கு அமைவாக, இம்மையத்தினால் வழங்கப்படும் கல்விச் சேவைகளைப் பொறுத்தவரையில், அவை சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடம், முகாமைத்துவக் கற்கைகள் பீடம் மற்றும் விவசாய விஞ்ஞான பீடம் ஆகியவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இணையதளம், வலைதளச் சேவைகள் முதலான ஏனைய தகவல் தொழினுட்பம்சார் சேவைகள் முழுப் பல்கலைக்கழகச் சமூகத்துக்கும் பொதுவாக வழங்கப்பட்டு வருகின்றன.

இவை தவிர, நூலக அமைப்பு, IP தொலைபேசி அமைப்பு, IP கெமரா அமைப்பு, கம்பியில்லா வலையமைப்பு முதலான பிறதரப்பினரால் உள்ளீடு செய்யப்பட்ட வலைபின்னல் அமைப்பினை இயக்கும் வகையிலான பராமரிப்பு உதவிகளையும் இம்மையம் வழங்கிவருகின்றது.

தற்போது அனேகமான பீடங்கள் தமது கற்கைநெறிகளோடு தொடர்புடைய தகவல் தொழினுட்பப் பாடநெறிகளை வழங்குமுகமாக வளாகப் பரப்புக்குள் தத்தமக்கெனப் பிரத்தியேகமான கணினி மையங்களை நிறுவியுள்ளன. இதனால், அக்கற்கைநெறிகளின் பொருட்டு இனிமேலும் கணினிக் கற்கைகளுக்கான மையத்தின் கட்டிடங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவை இல்லாத காரணத்தினால், கல்விசாரா ஊழியர்கள், நிர்வாகத்துறை ஊழியர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களுக்குத் தகவல் தொழினுட்பத்துறைசார் பயிற்சிநெறிகளை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட முடியும்.

கணினி தொடர்பான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் CCS இந்த ஐந்து கணினி மையங்களில் மேற்பார்வையிடுகிறது. மேலும், வலை, மின்-கற்றல், DNS, மின்னஞ்சல், எண்முறை நூலக அமைப்பு, மாணவர் தகவல் சேவை மற்றும் வலைப்பின்னல் சீரமைக்கும் சேவை போன்றவற்றை வழங்க தேவையான அனைத்து சேவையகங்களையும் உள்ளடக்கிய வளாக அளவிலான வலைப்பின்னலை பராமரிக்கிறது

2013 ஆம் ஆண்டில் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைப்பு நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி பல்கலைக்கழகமானது தனது தகவல் தொழினுட்பம் சார் கீழ்க்கட்டுமான வசதிகள், கற்கைநெறிகளோடு தொடர்புடைய வசதிகளை மேலும் மேம்படுத்திக்கொண்டது. அத்துடன், இந்நிதி உதவியினால் இணைய அலைவரிசை அளவினை 20 Mbps முதல் 100 Mbps வரை அதிகரித்துள்ளதோடு, அனைத்துக் கல்விசார் ஊழியர்கள் மற்றும் நிர்வாக ஊழியர்களினதும் பணியிடங்களில் உள்ள கணினி வசதிகளையும் மேம்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக இணையப் பாவனையில் காணப்படும் அதிகபட்ச கேள்வியானது இணையத் தொடர்பு வழங்குநர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக இணைய அலைவரிசையானது 2018 ஆம் ஆண்டில் 225 Mbps ஆக அமைந்திருந்தது. அதன்படி, கணினிக் கற்கை மையமானது அதன் உள்ளக இணைய அலைவரிசையினை அதிகரிக்குமாறு பரிந்துரை செய்ததன் விளைவாக, தற்போது 600 Mbps அலைவரிசையளவு பல்கலைக்கழக இணையத் தொடர்பாடல் வசதி வழங்கப்பட்டு வருகின்றது.

மாணவர்களுக்கு சிறந்த கற்றல் சூழலை வழங்குவதற்காக பல்கலைக்கழகத்திற்குள் இலவச Wi-Fi பகுதிகள் செயல்படுத்தப்பட்டுள்ளனஅதன்படி அனைத்து பீடங்களும் Wi-Fi வசதியுடன் காணப்படுகின்றன. மேலும், மாணவர் விடுதிகள் மற்றும் கற்றல் பகுதிகளுக்கு இலவச Wi-Fi சேவைகளை அதிகரிக்க, கணினிக் கற்கைகளுக்கான நிலையமானது கல்வி அமைச்சுடன் இணைந்து இலவச Wi-Fi திட்டத்தை தொடங்கியுள்ளது.

கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக, பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகள், மாணவர்களின் மதிப்பீட்டு செயல்முறை மற்றும் அனைத்து பல்கலைக்கழக செயற்பாடுகளையும் நிகழ்நிலையில் முழுமையாக நடத்த வேண்டியிருந்தது. ஆகவே பல்கலைக்கழகத்தின் கணினிக் கற்கைகளுக்கான நிலையமாக, அச் செயற்பாடுகளை அதிகபட்ச திறனுடன் எளிதாக்க வேண்டியிருந்தது.
VLE (Virtual Learning Environment) க்கு கூடுதலாக, பட்டதாரி கற்கைகள் பீடம் மற்றும் திறந்த மற்றும் தொலைதூரக் கற்றல் மையம் உட்பட ஒவ்வொரு பீடத்தின் பரீட்சை நோக்கங்களுக்காக தனியான VLE சேவையகம் கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை நிகழ்நிலை முறையில் நடாத்த அனைத்து கல்வி ஊழியர்களுக்கும் மற்றும் பல்கலைக்கழகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கும் Zoom கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன

பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களின் கோரிக்கையின்படி Turnitin (Turnitin என்பது அமெரிக்க நிறுவனமான Turnitin ஆல் நடத்தப்படும் இணைய அடிப்படையிலான கருத்துத்திருட்டை கண்டறிதல் சேவையாகும்) கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன

பல்கலைக்கழகத்தின் எண்முறை களஞ்சியம் செயல்படுத்தப்பட்டு வருவதோடு எண்முறை பயன்பாட்டிற்காக 1500 க்கும் மேற்பட்ட கட்டுரைகள் உள்ளன.

CCS உதவிமையம்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் தகவல் தொழினுட்பம் சார்ந்த அனைத்துத் தேவைகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் உதவிகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொள்வதற்கான முதன்மை ஸ்தானமாக CCS உதவிமையம் இயங்கிவருகின்றது. இவ் உதவிமையமானது பல்கலைக்கழக

மின்மடல்களைக் கையாள்வதோடு, பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசார் ஊழியர்கள், கல்விசாரா ஊழியர்கள், நிர்வாக ஊழியர்கள் முதலான அனைத்துத் தரப்பினர்க்கும் தகவல் தொழினுட்பம் சார்ந்த அன்றாடத் தேவைகளின் போதான சகல வழிகாட்டல்களையும் வழங்கி உதவுகின்றது.

CCS மாணவர் உதவிமையம்

கணினிக் கற்கைகளுக்கான மையம் (CCS) மாணவர் உதவிமையமானது CCSயினால் பணியமர்த்தப்பட்ட தொழினுட்ப ஊழியர்களின் உதவியோடு, பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களிலும் உள்ள கணினி மையங்களின் பயனாளர்களுக்கான அன்றாடக் கணினிப் பாவனையின் போதான தேவைப்பாடுகளுக்கு அமைவான உதவிகளை வழங்கி வருகின்றது.

பணிகள்

கணினிக் கற்கைகளுக்கான மையம் (**CCS)** இனது சேவை மைய ஊழியர்கள் பல்கலைக்கழகத்தினுள் பொறியியல்**,** தொழினுட்பவியல்**,** இலத்திரனியல் சார்ந்த சேவைகளை வழங்கிவருவதோடு**,** கணினித்திருத்தம் மற்றும் சீரமைக்கும் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இதன் விளைவாக**,** பல்கலைக்கழகத்தின் கல்விசார் நடவடிக்கைகள் மட்டுமின்றிச் நிர்வாகம்சார் பணிகளும் தங்குதடையின்றிக் காத்திரமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பணி	**விவரணம்**
இயக்கு தளங்களை மீள் உள்ளீடு செய்தல்	கணினி இயக்குதளங்களை மீள் உள்ளீடு செய்தல், இயக்க முறைமைகளுக்கான சமீபத்திய பாதுகாப்பு இணைப்புகள் மற்றும் அனைத்துவிதத்திலும் பொருத்தமான வன்பொருள் இயக்கிகளும் ஒரு சேவையாக உள்ளடக்கப்படுதல்.
மென் பொருள் உள்ளீடு	கணினி மையங்களில் உள்ள கணினிகளுக்கும் விரிவுரையாளர்கள், நிர்வாகப் பணியாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்களின் தனிப்பட்ட மடிக்கணினிகள், பிற கணினிகள் உள்ளிட்டு, அனைத்து கல்வித் திட்டங்களுக்கும் அமைவான அனைத்து மென்பொருட்களையும் வழங்கி நிறுவுதல்.
வைரஸ், மென் பொருள் மற்றும் விளம்பர மென்பொருள் நீக்கம்	பொதுவாக எட்வெயார், ஸ்பை-வெயார் மற்றும் வைரஸ்கள் முதலான கணினியின் செயல்திறன், செயல்பாடு மற்றும் பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தி, பல்கலைக்கழக வலைதளத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

பணி	விவரணம்
	ஏற்படுத்தக்கூடிய தீங்கிழைக்கும் குறியீடுகள் அகற்றப்படுதல்.
வலையமைப்பு இணைப்பாக்கம்/ சீராக்கம்	உள்ளமைவு அமைப்புகள், மென்பொருள் இயக்கிகள் அல்லது வைரஸ்கள் போன்ற தீயபொருள்கள் மற்றும் மின்னல், மின்சார சிதைவுகள் போன்ற வெளிப்புற அனர்த்தங்கள் காரணமாக பல்கலைக்கழகச் சமூகத்தின் இணைய அணுகலைக் கட்டுப்படுத்தும் தந்தியுடன்கூடிய அல்லது தந்தியில்லா வலையமைப்புகளின் இணைப்புச் சிக்கல்களின் சரிசெய்து சீரமைத்தல்.
செயலிகளை சீராக்கம் செய்தல் (மைக்ரோசொஃப்ட் ஒஃபீஸ்)	மைக்ரோசாஃப்ட் ஒஃபிஸ் பயன்பாடுகளில் ஒழுங்கற்ற மற்றும் சீரற்ற செயல்திறனுக்கான பிழையறிந்து திருத்துதல்.

கணினிக் கற்கைகளுக்கான மையத்தினால் வழங்கப்பட்டுவரும் பிரதானமான சேவைகள்:

- கணினிப் பொறியமைப்பின் பராமரிப்புக்குத் தேவையான தொழினுட்ப உதவிகளை வழங்குதல்
- கணினி வலையமைப்பினை உள்ளீடு செய்தல், வடிவமைத்தல், சீரமைத்தல்
- இலத்திரனியல், மின்சார், தொலைபேசிக்கட்டமைப்பினைப் பராமரித்தல்
- விரிவுரைகள், சிறப்பு நிகழ்வுகளுக்கான தொழினுட்ப உதவிகள், கேட்போர்கூட நிகழ்வுகளை ஒழுங்கமைத்தல், பயிற்சி நிகழ்வுகளுக்கான கணினித் தொழினுட்ப உதவிகளை வழங்குதல்.

பல்கலைக்கழக வலையக மடல்

CCS ஆனது பல்கலைக்கழகத்தின் xxx.sab.ac.lk எனும் பல்கலைக்கழக தளத்தின் மூலம் அனைத்துக் கல்விசார் மற்றும் நிர்வாகத்துறை ஊழியர்களுக்கும் மாணவர்களுக்குமான கட்டற்ற சேமிப்பக ஆற்றலுடன் கூடிய மின்மடல் வசதியினை வழங்கி வருகின்றது.

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் மின்மடல்

The CCS ஆனது மைக்ரோசொஃப்ட் நிறுவனத்துடன் இணைந்து 1 GB சேமிப்பக வசதியுடன்கூடிய ms.sab.ac.lk எனும் தளத்தின் மூலம் அனைத்துக் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கும், நிர்வாகத்துறை ஊழியர்களுக்கும் மாணவர்களுக்குமான ஏனைய மின்மடல் வசதிகளையும் வழங்கி வருகின்றது.

மெய்ந்நிகர்க் கற்கைச் சூழல் (VLE)

The CCS ஆனது சகல கல்வியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் தேவையான மின்கற்றல் மற்றும் மெய்ந்நிகர்க் கற்றல் முகாமைத்துவத்திற்குத் தேவையான கீழ்க்கட்டமைப்பு வசதிகளை வழங்குகின்றது.

பரீட்சை மெய்ந்நிகர்க் கற்கைச் சூழல் (EVLE)

CCS ஆனது பரீட்சை மெய்ந்நிகர்க் கற்கைச் சூழல் (EVLE) க்கான தனி சேவையகத்தை பெற்று, நிகழ்நிலை பரீட்சைகளுக்காக ஒவ்வொரு பீடத்திற்கும் தனித்தனியாக EVLE ஐ நிறுவியுள்ளது.

Zoom கணக்குகள்

பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்விசார் ஊழியர்களுக்கும் மற்றும் பல்கலைக்கழகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கும் Zoom கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.

Turnitin கணக்குகள்

பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களின் கோரிக்கையின்படி அனைத்து கல்விசார் ஊழியர்களுக்கும் Turnitin கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வளாகமளாவிய வலையமைப்பு

வளாக ரீதியான உள்ளக எல்லை வலையமைப்பு வசதியானது இக்கணினிக் கற்கை மையத்தினால் வழங்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. சேர்வர் அறையினுள் கணினி மையத்தின் உதவி வலையமைப்பு முகாமையாளர்களால் அச்சேவை நிர்வகிக்கப்படுகின்றது. இவ்வறையானது CISCO ரவுட்டர்கள் எனப்படும் திசைவிகளாலும், ப்ரொக்ஸி சேவையகம், DNS சேவையகம், CISCO ஆளிகள், இணைய சேவையகம், மின்கற்றல் சேவையகம், வைரஸ் காப்பு சேவையகம் முதலான அனைத்தையும் உல்ளடக்கி இயங்கி வருகின்றது.

வலையமைப்புத் தொழிற்பாடுகளின் செயல்திறன் மற்றும் மின்கற்றல் முறைமை என்பவற்றை மேம்படுத்துமுகமாக மூன்று சேவையகங்கள் 2014 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன. தற்போதுள்ள கணினி ஆய்வுகூடத்துக்குப் புறம்பாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ள சேவையகமானது அதன் பிரத்தியேகப் பாதுகாப்பினையும் இலகுத்தன்மையுடனான பராமரிப்பினையும் உறுதிசெய்யும் வகையில் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், 20KVA கைவசமுள்ள ஜெனரேட்டர் மற்றும் 20KVA தடையற்ற மின்வழங்கி (UPS) என்பவற்றைப் பயன்படுத்தி மாற்று மின்வழங்கும் முறைமையின் ஊடே இணைய வலையமைப்பின் தொழிற்பாடுகள் வாரம் முழுவதும் 24 மணிநேரமும் இடையூறின்றி வழங்கப்படுவது உறுதிசெய்யப் படுகின்றமையும் கவனத்திற்குரியது.

பல்கலைக்கழகத்தின் எட்டுப் பீடங்களும் தமக்கிடையிலான இணைய வலையமைப்பின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இந்நிலைமை அடுத்த வருடம் இன்னும் மேம்படுத்தப்படவுள்ளது. தற்போது நமது இணைய அலைவரிசையானது 600Mbps அளவில் காணப்படும் அதேவேளை, 100Mbps அலைவரிசை அளவிலான பௌதீகத் தொடர்புச் சமிக்ஞையினைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டு செயற்பாடுகள்:

- பல்கலைக்கழக இணையதளத்தினை மேம்படுத்துதல்.
- பல்கலைக்கழக ஊழியர்களுக்கு உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வகையில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் தொடர்பாகவும் நிகழ்நிலை, கற்பித்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பான பட்டறைகளையும் நடாத்துதல்
- இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் மூலவளங்களை இலத்திரனியல் நூலகச் சேமிப்பகமொன்றை உருவாக்கிப் பராமரித்து மேம்படுத்துதல்.
- பல்கலைக்கழகத்துக்கான உத்தியோகபூர்வ முகநூல் பக்கம், யூ ட்யூப், லிங்கேடன், ட்விட்டர் முதலான சமூக ஊடகப் பக்கங்களை உருவாக்கி பராமரித்தல் .
- பல்கலைக்கழக நடவடிக்கைகளை நிகழ்நிலையில் தொடர தகுந்த நிகழ்நிலை தொடர்பு தளத்தை ஏற்படுத்திக்கொடுத்தல்.
- பல்கலைக்கழக கல்வி சார் ஊழியர்களுக்கு இணைய அடிப்படையிலான கருத்து திருட்டு கண்டறியும் சேவையை வழங்குதல்.
- பல்கலைக்கழக நிகழ்வுகளின் போதான இணைய ஒளிபரப்பு வசதிகளை வழங்குதல்

- பரீட்சை நோக்கங்களுக்காக தனியாக VLE ஐ நிறுவ புதிய சேவையகத்தை கொள்வனவு செய்தல்.
- கட்டணம் செலுத்தும் வழியை கட்டமைத்தல்.
- இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் அனைத்து மாணவர் விடுதிகளுக்கும் ஊழியர் விடுதிகளுக்குமான Wi-Fi இணைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- கல்வி அமைச்சுடன் ஒருங்கிணைந்து வளாகம் அளாவிய Wi-Fi செயற்றிட்டமொன்றை நிறுவும் பணியினை முன்னெடுத்தல்.
- பரீட்சை சபரகமுவ மாகாண சபைக்கு வலை முகப்பொன்றை உருவாக்குதல்.
- பல்கலைக்கழகத்துக்கான தகவல் தொடர்பாடல் தொழினுட்பக்கொள்கையொன்றை அமுல்படுத்துதல்.
- பல்கலைக்கழகத்தில் SMART வகுப்பறையை அமுல்படுத்த உதவுதல்.

2021 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்ட செயற்பாடுகள்

பல்கலைக்கழக வலைப்பக்கத்தினை த்ருபால் உள்ளடக்க முகாமைத்துவ அமைப்பின் புதிய வார்ப்பினை நிறுவி மேம்படுத்தியமை.

- CCS மற்றும் வெளிப்புற வளங்கள் மூலம் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் தொடர்பாகவும் நிகழ்நிலை, கற்பித்தல் மற்றும் மதிப்பீடு தொடர்பானதுமான பயிலரங்குகளை நடாத்துதல்.

- இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் மூலவளங்களை இலத்திரனியல் நூலகச் சேமிப்பகமொன்றை உருவாக்கிப் பராமரித்து மேம்படுத்துதல்.

- பல்கலைக்கழகத்துக்கான உத்தியோகபூர்வ சமூக ஊடகப் பக்கங்களை உருவாக்கி, நடைமுறைச் செய்திகளை அவ்வப்போது பதிவேற்றம் செய்து பல்கலைக்கழகத்தின் மீதான கவனத்தினை உள்ளீர்க்கும் வகையில் அவற்றை இற்றைப்படுத்திப் பராமரித்தல்.

- பல்கலைக்கழகத்தின் கற்பித்தல் மற்றும் நிர்வாக செயற்பாடுகளை நிகழ்நிலை முறையில் நடாத்த அனைத்து கல்வி ஊழியர்களுக்கும் மற்றும் பல்கலைக்கழகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கும் Zoom கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.

- பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்களின் கோரிக்கையின்படி Turnitin (இணைய அடிப்படையிலான கருத்துத்திருட்டை கண்டறிதல் சேவையாகும்) கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- பல்கலைக்கழக சிறப்பு நிகழ்வுகளின் போதான இணைய ஒளிபரப்பு வசதிகளை வழங்குதல்.
- பரீட்சைகளை நிகழ்நிலையில் நடாத்துவதற்காக பட்டதாரிக் கற்கைகள் பீடம் மற்றும் திறந்த மற்றும் தொலைக் கல்வி கற்றல் மையம் உட்பட ஒவ்வொரு பீடத்திற்கும் தனியாக VLE ஐ நிறுவ புதிய சேவையகத்தை கொள்வனவு செய்தல்.
- கட்டணம் செலுத்தும் பொறிமுறை உருவாக்கம் பூர்த்தியாகியுள்ளதுடன் திறந்த மற்றும் தொலைக் கல்வி கற்றல் மைய கட்டணம் மற்றும் நுண்ணறிவு போட்டி பரீட்சை கட்டணம் போன்றவற்றை நிகழ்நிலையில் செலுத்தம் வசதியை பெற்றுக்கொள்ளமுடியும்.
- பல்கலைக்கழகத்தின் அனைத்து மாணவர் விடுதிகளுக்கும் ஊழியர் விடுதிகளுக்குமான Wi-Fi இணைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.
- கல்வி அமைச்சுடன் ஒருங்கிணைந்து வளாகம் அளாவிய Wi-Fi செயற்றிட்டமொன்றை நிறுவும் பணியினை முன்னெடுத்தல்.
- CCS இன் மறுசீரமைப்பு செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது.
- பரீட்சை சபரகமுவ மாகாண சபைக்கு வலை முகப்பொன்றை உருவாக்குதல்.
- பல்கலைக்கழகத்துக்கான தகவல் தொடர்பாடல் தொழினுட்பக்கொள்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது.
- பல்கலைக்கழகத்தில் SMART வகுப்பறையை அமுல்படுத்த உதவுதல்.(விவரக்குறிப்புகளை தயாரித்தல், தொழில்நுட்ப மதிப்பீடுகள், தர அறிக்கைகளை வெளியிடுதல்)

3.3 உடற்கல்வித் துறை

3.3.1 ஊழியர்கள்

பணிப்பாளர் திரு. W.A. லலித் ரோஹன

பயிற்றுநர்கள் திருமதி B.K. சமந்தா ப்ரின்ஸி லலனி
திரு. G.S.K. போபிட்டிய
திரு. P.D.D.I. குணதிலக்க

இரசாயன மற்றும் கண்ணாடி பொருட்கள்		8,239,679	2,887,347
மருத்துவ விநியோகங்கள்		384,898	942,102
ஏனைய விநியோகங்கள்		11,231,488	10,658,905
		48,515,173	**43,188,183**
பராமரிப்பு	**27-D**		
வாகனங்கள்		10,174,462	7,517,184
தொழில்கூடம், இயந்திரங்கள் உபகரணங்கள்		4,682,417	4,933,196
கட்டடமும் கட்ட அமைப்பும்		992,008	1,835,680
தளபாடங்கள்		112,000	-
ஏனைய		769,370	150,770
		16,730,258	**14,436,830**
ஒப்பந்த சேவைகள்	**27-E**		
போக்குவரத்து		556,657	91,718
தொலைதொடர்பாடல்		19,195,059	20,410,932
தபால் கட்டணங்கள்		1,568,328	1,280,832
மின்சாரம்		15,390,215	19,504,043
பாதுகாப்பு சேவைகள்		80,134,510	86,212,562
நீர்		181,666	42,116
சுத்திகரிப்பு சேவை		56,558,392	60,196,494
வாடகை மற்றும் கூலி கட்டணங்கள்		28,300,479	21,514,586
உள்ளூர் அதிகாரசபைக்கான வரி விகிதங்கள்			-
அச்சிடுதலும் விளம்பரமும்		7,408,522	6,990,048
ஏனைய		6,871,850	4,894,502
		216,165,677	**221,137,833**

14. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான இலங்கை சபரகமுவ பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு 2020

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டப் பிரிவின் 3 ஆம் ஷரத்தின் 17 (ஈ) பிரிவுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி நடவடிக்கைகள் வருமாறு:

2021 இல் நிலையான அபிவிருத்தி அடைவதற்கான தர உத்தரவாதத்திற்கான மையத்தின் பங்களிப்பு

நாட்டின் நிலையான வளர்ச்சியில் கற்றல் அமைப்புகளுடன் கல்வியும் முக்கிய கூறுகளாகும். நிலையான இலக்குகளை அடைவதற்கான அறிவு மற்றும் திறன்களை வழங்கினாலும், நாட்டின் தேவையை பூர்த்தி செய்யும் திறன் கொண்ட நபர்களை உருவாக்குவதில் உயர்கல்வி நிறுவனங்கள் மகத்தான பங்கு வகிக்கின்றன. மாணவர்கள் தலைமைப் பண்புகளைக் கொண்டுள்ளனர் மற்றும் எதிர்காலத் தலைவர்களை உருவாக்க முடிவெடுக்கும் திறன்களுடன் அவர்களை வடிவமைக்கிறார்கள். கல்வியானது மாணவர்களை நிலையான வளர்ச்சியில் தீவிரமாக ஈடுபடுத்த உதவுகிறது. இந்த அம்சங்களில் தரமான கல்வியை வழங்குவது முதன்மை முக்கியத்துவம் வாய்ந்தது மற்றும் தரமான பட்டதாரிகளை உருவாக்குவதற்கு பல்கலைக்கழகத்திற்குள் தரமான சூழலைப் பேணுவது அவசியம். எனவே பல்கலைக்கழகத்தின் தரத்தை மேம்படுத்துவதில் முக்கியத் தூண்களாக தரஉத்தரவாத மையம் மற்றும் ஆசிரிய தரக் காப்பீட்டுக் கலங்கள் பங்கு வகிக்கின்றன. நிறுவனங்கள் தரத் தரங்களை காப்பகப்படுத்தினால், நமது பட்டதாரிகள் நாட்டின் வளர்ச்சியை உள்ளடக்கிய தேசிய மற்றும் உலகளாவிய தேவையை பூர்த்தி செய்ய முடியும் அல்லது நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு பங்களிக்க முடியும்.

2021 இல் நிலையான அபிவிருத்தி அடைவதற்கான பணியாளர்

SDC இன் நோக்கமானது, நாட்டில் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளை உருவாக்குவதற்கான பணியாளர்களின் திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை மேம்படுத்துவதாகும். எனவே, SDC நடவடிக்கைகள் தரமான கல்வியான 4வது நிலையான வளர்ச்சி இலக்குகளை நேரடியாக ஆதரிக்கின்றன. புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கல்வி ஊழியர்களுக்கான எங்கள் தூண்டல் திட்டம் மற்றும் நிலையான வளர்ச்சியின் தரமான கல்வி இலக்கைப் பிடிக்க நேரடியாக ஆதரவு தேவை என்பதனால் பகுப்பாய்வு அடிப்படையில் ஆண்டுதோறும் திட்டமிடப்பட்ட தேவை சார்ந்த பயிற்சித் திட்டம் நடடத்தப்படுகின்றது

15. தணிக்கை அறிக்கை – 2021

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல: RAT/D/SUSL/01/FA/2021 திகதி: 2022 மே மாதம் 31ஆம் திகதி

உபவேந்தர்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2021 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடையும் இறுதி ஆண்டிற்கான நிதிக் கூற்று மற்றும் ஏனைய சட்டரீதியானதும் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான தேவைப்பாடுகள் குறித்து 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

……

மேற்குறித்த அறிக்கை இத்தோடு அனுப்பட்டுள்ளது.

ஒப்பம் தெளிவில்லை.

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

பிரதிகள்: 01. செயலாளர், கல்வி அமைச்சு.

02. செயலாளர், நிதி அமைச்சு.

03. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல: RAT/D/SUSL/01/FA/2021 திகதி: 2022 மே மாதம் 31ஆம் திகதி

உபவேந்தர்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2021 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடையும் இறுதி ஆண்டிற்கான நிதிக் கூற்று மற்றும் ஏனைய சட்டரீதியானதும் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான தேவைப்பாடுகள் குறித்து 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

……..

1. நிதிக் கூற்று

1.1. தரநிலை மதிப்பீடு

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2021 டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கான நிதி நியமக் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் இறுதி ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கை, நிகர சொத்து மாற்ற அறிக்கை மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் இறுதி ஆண்டிற்கான நிதிப் புழக்கங்களின் அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களோடு தொடர்பான பதிவுகள், சுருக்கமான முக்கிய கொள்கைகளை உள்ளடக்கிய 2021 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடியவடையும் இறுதி ஆண்டிற்கான நிதிக் கூற்று 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 107 (5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழக சட்டத்தின் 108 (1) உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையுடன் வெளியிடப்பட வேண்டும் என நான் கருதுகின்ற எனது கருத்துத் தெரிவிப்புக்கள் மற்றும் அவதானங்கள் இவ் அறிக்கையில் உட்பொதிந்துள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கையினை வருங்காலத்தில் பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எனது அறிக்கையில் தரநிலை மதிப்பீட்டிற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் தவிர,

பல்கலைக்கழகத்தின் 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைகள் மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதி செயற்படுதன்மை மற்றும் நிதிப் புழக்கங்களை இலங்கை அரச பிரிவின் கணக்கீட்டு நியமங்களுக்கு உட்பட்ட வகையில் உண்மையானதும், நியாயமானதுமான தன்மைகளை காட்டுகிறது என்பது எனது கருத்தாகும்.

1.2. தரநிலை மதிப்பீட்டிற்கான அடிப்படை

(அ) இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமம் 7 இன் 65ஆம் பந்தியின் பிரகாரம் அசையாச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை மதிப்பாய்வு செய்யாயதன் காரணத்தினால் ரூ. 1,253,598,110 செலவான நிலையான சொத்துக்கள் முழுமையாக தேய்வடைந்துள்ள நிலையில் தொடர்ந்தும் பாவனைக்கு எடுக்கப்பட்டு வந்துள்ளது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட கோளாறினை இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமங்கள் 3இன் பிரகாரம் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதிப்பாய்வு ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூ. 426,000,000 பெறுமதியான மூலதன அன்பளிப்பு தொடர்பில் இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமங்கள் 11 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் அடையாளம் காணப்படுதல் மற்றும் அளவீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமம் 20 இன் 103ஆம் பந்தியின் பிரகாரம் கட்புலனாகாத சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலம் மதிப்பாய்வு செய்யப்படாததன் காரணத்தினால் செலவு ரூ. 13,327,143 ஆக உள்ள கட்புலனாகாத சொத்துக்கள் முழுமையாக தேய்வடைந்துள்ள நிலையில் தொடர்ந்தும் பாவனைக்கு எடுக்கப்பட்டு வந்துள்ளது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட கோளாறினை இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமங்கள் 3 இன் பிரகாரம் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு தயாரிக்கப்பட்ட நிதி நிலைக் கூற்றின் பிரகாரம், அன்றைய திகதிக்கான ஊக்க ஊதிய (போனஸ்) ஒதுக்கீடானது ரூ. 514,666,493 ஆக காணப்பட்டதுடன், போனஸ் தொகையை கணக்கீடு செய்யும் பிரத்தியேக மீதிப் பட்டியல் ப்pரகாரம் அத்தொகை ரூ. 601,158,480 ஆக காணப்பட்டது. 2019ஆம் ஆண்டில் கல்விப் பணியாளர் குழுவினருக்கான கற்கைக் கொடுப்பனவு மற்றும் கல்வி சாரா பணியாளர் குழுவினருக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் உள்ளீர்க்கப்பட்டு போனஸ் தொகை கணக்கிடப்பட்டு கணக்கில் வைக்கப்பட்ட போது இடம்பெற்ற ரூ. 86,491,987 குறைபாட்டு வேறுபடுத்தலை 2021ஆம் ஆண்டு செம்டம்பர் மாதம் 31ஆம் திகதியாகின்ற போதும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மதிப்பாய்வு வருடத்தினுள் சுய வருமான நிதிச் செயற்பாடுகளின் மூலமாக கிடைக்கப்பெற்ற ரூ. 73,414,154 நிதியானது மதிப்பாய்வு ஆண்டிண் வருமானமாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக அதில் ரூ. 36,425,658 தொகை மாத்திரமே மதிப்பாய்வு ஆண்டில் வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. அத்துடன் எஞ்சிய ரூ. 36,988,496

தொகை நேரடியாகவே அபிவிருத்தி நிதியக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. அதன் காரணமாக மதிப்பாய்வு ஆண்டின் மிதமிஞ்சிய தொகை ரூ. 36,988,496 இனால் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஊ) மூலதனம் மற்றும் திட்டமிடல் பிரிவின் மூலம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் சமூக விஞ்ஞானம் மற்றும் மொழியியல் பீட விரிவுரை மண்டப கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக வேண்டி பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசணைப் பணியகத்திற்கு 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியாகின்ற போது ரூ. 20,860,844 நிதி செலுத்த வேண்டியிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அதற்கான ஒதுக்கீடுகள் உருவாக்கப் பட்டிருக்கவில்லை.

(எ) 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றின் படி, 03 பீடங்களுக்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக வேண்டி அன்றைய தினமாகின்ற போது பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசணைப் பணியகத்திற்கு ரூ. 40,289,882 தொகையை செலுத்த வேண்டியிருந்தும் மூலதனம் மற்றும் திட்டமிடல் பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய அக் கருத்திட்டங்களுக்காக அப் பணியகத்திற்கு எவ்விதப் பணமும் செலுத்த வேண்டியதில்லை. மாற்றத்திற்கான காரணங்கள் முன்வைக்கப்படவில்லை.

(ஏ) மதிப்பாய்வு ஆண்டினுள் ரூ. 47,851,166 நிதி கட்டிடக் கணக்கிலிருந்து ஒதுக்கப்பட்டு கடன் உரித்துக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்ட போதிலும் அதனோடு தொடர்பான ஜர்னல் பதிவு தயார் செய்யப்படாமையினால் அக் கொடுக்கல் வாங்கலை அடையாளம் காண்பதற்கும் பரீட்சிட்பதற்கும் முடியாமல் போனது.

(ஐ) 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு தயார் செய்யப்பட்டிருந்த நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், பிரதான நூலகக் கட்டிட நிர்மாணிப்பு தொழிற்றுறையின் முடிவுறாத வேலைகளின் பெறுமதி ரூ. 48,882,099 என்ற போதிலும், மூலதனம் மற்றும் திட்டமிடல் பிரிவின் மூலம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் படி அன்றைய திதிக்கு முடிவுறாத வேலைகளின் பெறுமதி ரூ. 75,503,800 ஆக காணப்படுகிறது. வித்தியாசமாக காணப்படுகின்ற ரூ. 26,621,701 இற்கான காரணங்கள் முன்வைக்கப்படவில்லை.

(ஒ) முகாமைத்துவ மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் நிர்மாணப் பணியொன்றிற்காக வேண்டி 2019ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூ. 9,953,442 தொகையினை முடிவுறுத்தப்படாத வேலைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட வேண்டியிருந்தும் அதற்குப் பதிலாக கட்டிடக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்டுள்ளது. அதன் காரணமாக 2021 டிசம்பர் 31ஆம் திகதிக்கு கட்டிடக் கணக்கானது அதற்குச் சமமான பெறுமதியில் கூடுதலாக காட்டப்பட்டிருந்ததுடன் 2019, 2020 மற்றும் 2021 ஆகிய 03 வருடங்களுக்கான கட்டிடத் தேய்மானம் ரூ. 1,493,016 தொகையில் கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

(ஓ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட இலக்கம் 4ஃ2016 உடைய சுற்றறிக்கையின் 5.5 பந்தியின் படி, பல்கலைக்கழகத்தில் சுய வருமான

நிதிச் செயற்பாடுகளுக்காக தயாரிக்கட்டிருந்த கருத்திட்டக் கணக்குகள், நிதிச் செயலாற்றுகைக் கூற்றின் பதிவொன்றாக வெளிக் கொணரப்பட்டிருக்கவில்லை. மேலும், குறித்த சுற்றறிக்கையின் 5.5.2 ஆம் பந்தியின் பிரகாரம் வருட இறுதியில் நிதியத்திற்கான பங்களிப்பு, தோற்றம் மாற்றமடையும் அறிவிப்புக்கூடாக நிதிச் செயலாற்றுகைக் கூற்றிலிருந்து நிதி நிலைமைக் கூற்றிற்கு மாற்றப்பட வேண்டியிருந்தும் அவ்வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவி;லை.

(ஒள) 2016ஆம் ஆண்டு முதல் முன்னகர்த்தப்பட்டு வரும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூ. 1,647,000 நிதித் தொகை செலுத்தப்பட வேண்டிய போதிலும், வழங்கல் பிரிவின் மூலம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய அவ்வாறான செலுத்துகை யொன்று உள்ளதென் உறுதிப்படுத்தப்படவில்லை.

(க) 2021 டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு தயார் செய்யப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் படி, விளையாட்டு மைதானம், புவியியல் விஞ்ஞான பீடம் மற்றும் ஆண்கள் விடுதி போன்றவற்றை நிர்மாணிப்பதற்காக அன்றைய தினமாகின்ற போது பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசணைப் பணியகத்திற்கு செலுத்த வேண்டிய மிகுதி, மூலதனம் மற்றும் திட்டமிடல் பிரிவினால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய மிகுதியில் ரூ. 6,452,677 என்கின்ற வித்தியாசமொன்று காணப்பட்ட போதிலும் அவ்வித்தியாசத்திற்கான காரணங்கள் முன்வைக்கப்படவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு உட்பட்ட வகையில் என்னால் இக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையின் நிதிக் கூற்று கணக்காய்வுகள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது தரநிலை மதிப்பீட்டிற்கான அடிப்படையினை வழங்கும் நோக்கில் என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வு ஆதாரங்கள் போதுமானதாகவும் உசிதமானதாகவும் உள்ளது என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3. பல்கலைக்கழகத்தின் 2021 வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இதர தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட பல்கலைக்கழகத்தின் 2021 வருடாந்த அறிக்கையில் உள்ளீர்க்கப்பட்டுள்ள எனினும், நிதிக் கூற்றுக்களிலும் மற்றும் அது தொடர்பான எனது அறிக்கையிலும் உள்ளடங்காத தகவல்கள் இதர (ஏனைய) தகவல்கள் என்பதாக பொருள்படும். இவ் ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொருப்புக் கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான எனது கருத்தினுள் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படுவதில்லை என்பதுடன், அது குறித்து நான் எவ்விதத்திலும் உத்தரவராதப் படுத்தலையோ அல்லது கருத்தொன்றை தெரிவிக்க மாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வுடன் தொடர்பாக மேலே அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடிந்ததென்றால் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்கின்ற போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு ஒரு வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட என் அறிவின் பிரகாரம் போதுமான அளவில் பொருந்துவதில்லையா என்பதை ஆராய்ந்து பார்ப்பதாகும்.

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையிலும் என்னால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையிலும் இவ் ஏனைய தகவல்களை போதுமான அளவில் பிழையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நான் ஊகிப்பேனாயின் அவ்விடயங்களை எனக்குத் தெரிவிப்பதற்கு அவசியப்படும். இது தொடர்பில் எனக்குத் தெரிவிப்பதற்கு ஒன்றுமில்லை.

1.4. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும் மற்றம் நிர்வகிக்கும் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றானது இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமங்களுக்கு உட்பட்ட வகையில் தயார் செய்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய போதியளவான பொய்யான கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களை தயார் செய்ய முடியுமான வகையில் தேவைப்படுகின்ற உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயார் செய்கின்ற போது பல்கலைக்கழகத்தை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அத்துடன், முகாமைத்துவம் பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு தீர்மானிப்பார்களாயின் அல்லது வேறு ஒரு மாற்றீடு இல்லாமல் போகின்ற போது செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமானாலேயே ஒழிய நீடித்த இருப்பின் அடிப்படையில் கணக்குகளை வைத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் நீடித்த இருப்புடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கைச் செயற்பாடுகளுடன் தொடர்பான பரீட்சிப்புப் பொறுப்புக்களை நிர்வகிப்பவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் சமகால நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதற்கு முடியுமான வகையில், சுய வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்களையும், தகவல்களையும் சரியான முறையில் பேணிச் செல்லுதல் வேண்டும்.

1.5. நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்தல் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற போதிய பொய்யான கூற்றுக்கள் அற்ற முறையில் நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதல் மற்றும் எனது கருத்துக்கள் உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுதல் போன்றவையே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர் மட்ட உறுதிப்படுத்தல் ஆகின்ற படியால், இலங்கை கணக்காய்வு நியமங்கள் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்கின்ற போது அது எப்பொழுதும் போதிய பொய்யான கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்ளும் என்கின்ற உறுதிப்படுத்தலாக அமையாமல் இருக்கும். மோசடி மற்றும் பிழைகள் தனியாக அல்லது கூட்டாக முன்வைக்கப்படும் அழுத்தங்கள் காரணமாக போதிய பொய்யான கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதோடு, அதன் போதுமான தன்மை இந் நிதிக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பயனர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பிலான தாக்கங்களின் மீது தங்கி நிற்கிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஓர் அங்கமாக என்னால் கணக்காய்வு செய்யப்படுகின்ற போது தொழில் முறை தீர்ப்பு மற்றும் தொழில்முறை சந்தேகம் என்பவற்றோடு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. என்னால் தொடர்ந்தும்

- தெரிவிக்கப்பட்ட கணக்காய்வுக் கருத்திற்கு அடிப்படையொன்றை தயாரித்துக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான போதிய அளவு பொய்யான கூற்றுக்கள் உருவாகும் ஆபத்துக்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கு சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான உரிய கணக்காய்வு செயல் ஒழுங்குகளை திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டுள்ளது. பிழையாக குறிப்பிடுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொதிய பொய்யான கூற்றுக்களால் ஏற்படுகின்ற தாக்கங்களை விட மோசடியினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் பலமாவதற்குக் காரணம், அவை மோசமான குழுவினால், போலியான ஆவணங்கள் தயாரிக்கப்படுவதன் மூலம் பண்பாட்டு நடத்தைகள் கைவிடப்படுவதினால், பிழையாக குறிப்பிடப்படுவதால் அல்லது உள்ளக நிர்வகிப்புகள் கைவிடப்படுவதால் என்கின்ற காரணங்களாகும்.

- உள்ளக நிர்வகிப்பின் செயல்திறன் பற்றிய கருத்தினை தெரிவிக்கும் நோக்கில் அல்லாவிட்டாலும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான வகையில் சரியான கணக்காய்வு ஒழுங்குகளை திட்டமிடுவதற்காக வேண்டி உள்ளக நிர்வாகம் குறித்த புரிதலொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்காய்வு மதிப்பீடுகளின் உண்மைத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால்

மேற்கொள்ளப்பட்டுள்ள தொடர்புற்ற வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டமையானது பாராட்டப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது தரநிலைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் நீடித்த இருப்பு தொடர்பில் போதிய நிச்சயமற்ற தன்மை காணப்படுகிறதா என்பது குறித்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு ஆதாரங்களின் அடிப்படையில் கணக்கீட்டிற்கு பல்கலைக்கழகத்தின் நீடித்த இருப்பு குறித்த அடிப்படையினை பயன்படுத்தவதன் பொருத்தப்பாடும் தீர்மானிக்கப்பட்டது. போதிய நிச்சயமற்ற தன்மை உள்ளதென நான் ஊகிப்பேனாயின் அது குறித்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக இல்லாவிட்டால் எனது நிலைப்பாடு மாற்றியமைக்கப்பட வேண்டும். எவ்வாறிருப்பினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் பேரில் நீடித்த இருப்பு முடிவுறுவதற்கு முடியும்.

- நிதிக் கூற்றுக்களின் கடட்டமைப்பு மற்றும் உள்ளீடுகளுக்கு அடிப்படையாய் அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் சரியான முறையிலும் நியாயமானதாகவும் உள்ளடங்கப்பட்டுள்ளதா என்பது பற்றியும் மற்றும் வெளிப்படுத்துதல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பிப்புக்கள் பாராட்டப்பட்டது.

எனது கணக்காய்விற்குள் அடையாளம் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிர்வகிப்பின் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினர்கள் தெளிவுபடுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் குறித்தான அறிக்கை

2.1. 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விஷேட ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.1.1 எனது அறிக்கையில் தரநிலை மதிப்பீட்டின் அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படுகின்ற தாக்கங்களை தவிர, 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வுக்கு தேவைப்படுகின்ற அனைத்து தகவல்களையும் மற்றும் தெளிவுபடுத்தல்களையும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது பரீட்சிப்பின் படி சரியான நிதி அறிக்கைகள் பல்கலைக்கழகத்தினால் பேணிச் செல்லப்பட்டிருப்பது நிரூபணமாகியுள்ளது.

2.1.2. 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஆ)(iii) ஆம் பிரவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றானது கடந்த வருடத்தோடு ஒத்துப் போகின்றது.

2.1.3. 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஆ)(ஈ)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2. பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையிலும் போதுமான விடயங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதற்குள் பின்வரும் கூற்றுக்களை தெரிவிக்கும் அளவிற்கு எந்தவொன்றும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை.

2.2.1. 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பல்கலைக்கழக நிர்வாகக் குழுவின் ஏதெனுமொரு உறுப்பினருக்கு பல்கலைக்ககழகம் சம்பந்தப்பட்டு ஏதேனும் ஒரு உடன்படிக்கை தொடர்பிலான நேரடியான அல்லது வேறு வழியிலான பொதுவான வியாபார நிலைமைகளுக்கு அப்பாலான தொடர்பொன்று உள்ளதாகவும்,

2.2.2. 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர்ந்த ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டமொன்றிற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விஷேட ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் அல்லாமல் செயற்பட்டிருத்தல் என்பதாகவும்,

சட்ட திட்டங்கள் ஒழுங்கு முறைக்கான குறிப்பு.

(அ) 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11ஆம் பிரிவு மற்றும் 2003ஆம் ஆண்டின் 02ஆம் திகதிய இலக்கம் பிஈடீ/12 உடைய அரச வியாபார பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை 8.2.2 ஆம் பந்தி.

(ஆ) இலங்கை சனநாயக சோசலி குடியரசின் நிதிச் சுற்றறிக்கைக் கோவை

(i) நிதிச் சுற்றறிக்கை 371(5)

அவதானங்கள்

நிதியமைச்சரின் அனுமதிக்கு உட்பட்ட வகையில் நிறுவனத்தில் உள்ள மேலதிக நிதியை முதலீடு செய்ய முடியுமான போதிலும், அவ்வாறான அனுமதியொன்று இல்லாமல் மதிப்பாண்டில் ரூ. 116,660,274 தொகை 08 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

வெளியிடப்படுகின்ற இடைக்கால சிறு செலவு நிதியானது உரிய செயற்பாடுகள் முடிந்தவுடன் செலுத்தப்பட வேண்டியிருந்தும், 2016ஆம் ஆண்டு முதல் 2021 வரையில் 32 தடவைகளில் 23 உத்தியோகத்தர்கள் மற்றும் 06 நிறுவனங்களுக்கு பிறப்பிக்கப்பட்டிருந்த கருத்திட்டங்கள், மீள்நிரப்புகை, மூலதன மற்றும் ஆராய்ச்சி முற்பணம் ரூ. 6,743,084 தொகை 2021 டிசம்பர் 31ஆம் திகதியாகும் போதும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிச் சுற்றறிக்கை 571

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவை எ ஆம் அத்தியாத்தின் 7 ஆம் பந்தி

2016ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியுடன் தொடர்பான மொத்தத் தொகை ரூ. 16,686,382 என்பதாக தடுப்புத் தொகையானது சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் வினவப்பட்டு அரச வருமானத்தில் வைப்புச் செய்யப்படவில்லை.

2000 ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் கற்கை விடுமுறைகளை பெற்று வெளிநாடு சென்றுள்ள 11 அதிகாரிகளின் பிணைமுறிகள் மீறப்பட்டமையினால் அறிவிடப்பட வேண்டியிரந்த ரூ. 50,516,467 தொகை 2022 மார்ச் மாதம் 31ஆம் திகதியாகும் போதும் அறவிட்டுக் கொள்ள முடியாமல் போயுள்ளது.

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணிக்கைச் சட்டத்தின் பிரிவு 12 (g) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின்படி, பல்கலைக்கழக அதிகாரிகள் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு ஏற்ப செயல்படவில்லை.

2.2.4. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணிக்கைச் சட்டத்தின் பிரிவு 12 (h) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவையின்படி, பின்வரும் அவதானிப்புகளைத் தவிர, பல்கலைக்கழகம் தேவையான வளங்களை பொருளாதார ரீதியாகவும், திறமையாகவும், திறம்படவும் கால வரம்பிற்குள் வாங்கவில்லை மற்றும் பயன்படுத்தவில்லை. பொருந்தக்கூடிய சட்டங்களுடன் இணங்குதல்.

(1) வடிவமைப்பு மற்றும் கட்டப்பட்ட அடிப்படையில் பல்கலைக்கழக ஊழியர்களுக்கான வீட்டு வளாகத்தை கட்டும் திட்டம் 30 அக்டோபர் 2017 அன்று ஒரு கட்டுமான நிறுவனத்திற்கு மதிப்பு கூட்டு வரியில்லா ஒப்பந்த மதிப்பு ரூ. 355,715,000. ஏல ஆவணங்களில் உள்ளக சாலை அமைப்பு மற்றும் பாதுகாப்பு வேலி ஆகியவற்றின் தேவையை மிகைப்படுத்தி மதிப்பிடப்பட்டதால், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அந்த பொருட்களைப் புறக்கணித்து திட்டங்களைத் திருத்தியதால் பல்கலைக்கழகத்திற்கு சுமார் 20,116,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது. கொள்முதல் மற்றும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு செலவு.

(2) புதிய நூலகக் கட்டிடத்தின் கட்டம்-I கட்டுமானம், 24 மாதங்களுக்குள் பணியை முடித்ததன் அடிப்படையில், 3018 ஜனவரி 30 அன்று ஒரு ஒப்பந்ததாரருக்கு மதிப்பு கூட்டப்பட்ட வரியில்லா ஒப்பந்த மதிப்பு ரூ.315,051,433 வழங்கப்பட்டது. பணி தொடங்குவதற்கான முன்பணமாக ரூ. 63,010,286 செலுத்தப்பட்டது மற்றும் தொடர்புடைய பத்திரம் பிப்ரவரி 07, 2020 அன்று காலாவதியானது. ஆனால் அதன் காலத்தை நீட்டிக்க எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. இதற்கிடையில், ஒப்பந்ததாரர் கட்டுமானத்தை கைவிட்டதால், பொறியாளர் கடைசியாகச்

சான்றளிக்கப்பட்ட பணியின் மதிப்பு ரூ. 43,058,226. என ரூ. 83,010,286 ஒப்பந்ததாரருக்கு முன்பணமாக வழங்கப்பட்டு முடிக்கப்பட்ட கட்டுமானப் பணியின் மதிப்பு, ஒப்பந்ததாரரிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகை ரூ. 39,952,060. மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டில் ஒரு செயல்திறன் பத்திரம் ரூ. 15, 752,572 பணமாக்கப்பட்டது மற்றும் பல்கலைக்கழகத்தின் தொடர் செலவினங்களுக்காக செலவிடப்பட்டது. ஒப்பந்ததாரரின் வேண்டுகோளின்படி மற்றும் கொள்முதல் குழுவின் ஒப்புதல் இல்லாமல், ஒரு துணை ஒப்பந்தக்காரருடன் முத்தரப்பு ஒப்பந்தம் போடப்பட்டது, அந்த ஒப்பந்தத்தின்படி 24 பிப்ரவரி 2022 க்கு முன் வேலை முடிக்கப்பட வேண்டும். துணை ஒப்பந்ததாரர் புறக்கணித்த சூழ்நிலையில் முன்பணம் ரூ. 53,442,615, ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் ரூ.15,752,572 செயல்திறன் பத்திரத்தை சமர்பிப்பது மார்ச் 24, 2022 வரை தாமதமானது, ஆனால் ஒப்பந்தக் காலத்தை 23 ஜனவரி 2023 வரை நீட்டிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கலந்து கொள்கிறது.

(3) பிப்ரவரி 2018 இல், ரூ. செலவில் 130 டெஸ்க்டாப் கணினிகளை வாங்குவதற்கான பரிந்துரைக்கப்பட்ட விவரக்குறிப்புகளுடன் இணங்கவில்லை என்பதை ஆய்வு செய்ய ஒரு தீர்ப்பாய விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. ஜூன் 2016 இல் 15,964,000. 19 மே 2018 தேதியிட்ட விசாரணைக் குழு அறிக்கையின்படி, முழு கொள்முதல் செயல்முறையிலும் பொறுப்பற்ற முறையில் செயல்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது, ஆனால் 30 ஏப்ரல் 2022 வரை ஒழுங்கு நடவடிக்கைகள் தொடங்கப்படவில்லை. மற்றும் தக்கவைப்பு பணம் ரூ. 21 ஜூன் 2018 அன்று ஒப்பந்ததாரருக்கு 1,596,400 ரூபாய் விடுவிக்கப்பட்டது.

(4) துறைசார் கொள்முதல் குழுவின் அதிகார வரம்பை மீறியதால், கொள்முதல் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, துறைசார் கொள்முதல் குழுவின் பரிந்துரையின் பேரில், மருத்துவ பீடத்திற்கு ஆய்வக உபகரணங்கள் ரூ. 34,123,169. மேலும், 172 டெஸ்க்டாப் கம்ப்யூட்டர்கள் 5 செட்களாகவும், 76 லேப்டாப் கம்ப்யூட்டர்கள் 3 செட்களாகவும் பிரிக்கப்பட்டு, அந்த கணினிகள் ரூ. துறைசார் கொள்முதல் குழுவின் பரிந்துரையின் பேரில் ரூ.44,983,730.

2.3 மற்ற விவரங்கள்

(1) 2012 மற்றும் 2017 க்கு இடையில் முதுகலைப் பட்டதாரி தகுதிகளை பூர்த்தி செய்வதற்காக சம்பளத்துடன் கூடிய படிப்பு விடுப்பு எடுத்து வெளிநாட்டுக்குச் சென்ற 05 உத்தியோகத்தர்கள் தங்கள் படிப்பை முடிக்காமல் மீண்டும் பணிக்குத் திரும்பியுள்ளனர், மேலும் அவர்கள் பிப்ரவரி 2022 க்குள் கூட முதுகலை தகுதிகளை முடிக்கவில்லை. அந்த அதிகாரிகள் படிப்பு விடுப்பு எடுத்து வெளிநாடு செல்லும்போது பல்கலைக்கழகத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 19, படிப்பை கைவிட்டதாலோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்காததாலோ படிப்புக்கான அனைத்து செலவுகளும் வசூலிக்கப்பட வேண்டும், ஆனால் அவ்வாறு செய்யாததால், பத்திர மதிப்புகள் ரூ. 42,853,450 பேர் டிசம்பர் 31, 2021க்குள் கூட மீட்க முடியவில்லை.

(2) மலேசியாவின் மலாயா பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப்படிப்பைப் பெறுவதற்கு 2014 மார்ச் 15 முதல் 2017 மார்ச் 14 வரை 36 மாத வெளிநாட்டு படிப்பு விடுப்பு பெற்ற அதிகாரியின் கோரிக்கையின் பேரில், பணியாற்றுவதற்கு ஊதியம் இல்லாத விடுப்பு லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் தலைவர் 2015 நவம்பர் 19 முதல் 03 ஆண்டுகளுக்கு ஒப்புதல் அளித்தார். குறித்த காலக்கெடுவுக்குள் ஆய்வுகள் முடிக்கப்படாவிட்டாலும், பத்திர மதிப்பு ரூ.10,313,221 பல்கலைக்கழகத்தால் வசூலிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, பல்கலைக்கழகத்தின் முதுகலை பீடத்தில் முனைவர் பட்டம் பெற, அதிகாரிக்கு 2019 பிப்ரவரி 20 முதல் ஜூன் 13, 2020 வரை ஊதியத்துடன் கூடிய படிப்பு விடுப்பு வழங்கப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட டாக்டர் பட்டம் மே 30, 2022க்குள் கூட முடிக்கப்படவில்லை.

(3) ஜனவரி 2020 முதல் அக்டோபர் 2021 வரையிலான காலகட்டத்தில், பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்களைச் சேர்ந்த 13 அதிகாரிகளுக்கு ஆராய்ச்சிக் கொடுப்பனவுகளாக மொத்தம் ரூ.6,081,025 செலுத்தப்பட்டது, ஆனால் கொடுப்பனவுகளைப் பெற்ற அதிகாரிகள் எவரும் ஆய்வுகளைச் சமர்ப்பிக்கவில்லை. ஆராய்ச்சி காலத்தின் முடிவில் அறிக்கைகள். முந்தைய ஆராய்ச்சியின் முன்னேற்றத்தைப் பொருட்படுத்தாமல் புதிய ஆராய்ச்சி முன்மொழிவுக்கு அடுத்த ஆண்டுக்கான மானியங்களை அங்கீகரிக்க ஆராய்ச்சிக் குழு ஏற்பாடு செய்திருந்தது.

(4) 2020 ஆம் ஆண்டில், மழைநீரைச் சேகரித்து சுத்திகரிக்கும் அமைப்பு, கார்வாஷ் யார்டு மற்றும் குப்பைகளை சேமிக்க ஒரு சிறிய கட்டிடம் ஆகியவை வீட்டு வளாகத்தில் ரூ. 21,000,000, ஆனால் அவை பயன்படுத்தப்படாமல் சும்மா இருந்தன, மேலும் சிறிய வணிக வளாகம் ரூ. 15,000,000 02 ஆண்டுகளாக அதன் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் இருந்தது.

(5) ஸ்வீடனின் கோதன்பர்க் பல்கலைக்கழகத்துடன் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, ரூ. 2013 முதல் 2015 வரையான காலப்பகுதியில் 5,434,801 ரூபா பெறப்பட்டதுடன், அதில் ரூபா 1,676,970 03 வருடங்களாகப் பயன்படுத்தப்படாமல் இருந்தது.

(6) 04 முதல் 21 ஆண்டுகள் வரையிலான 07 ஊழியர்களுக்குச் சொந்தமான ரூ.439,429 பேரிடர் கடன்கள், கணினிக் கடன்கள், வாகனக் கடன்கள், பணியாளர் கடன்கள் மற்றும் பண்டிகை முன்பணக் கடன்கள் ரூ.439,429 நிலுவைத் தொகைகள் 2021 டிசம்பர் 31ஆம் தேதி வரையிலும் வசூலிக்கப்படவில்லை.

(7) ரூ. 2019 ஆம் ஆண்டு முதல் மஹாபொல அறக்கட்டளை நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய 2,201,150 ரூபா மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிலும் செலுத்தப்படவில்லை.

(8) பல்கலைக்கழகத்தின் விளையாட்டு மைதானம் மற்றும் அரங்கம் (2014 இல் ரூ.123,052,693 செலவில் கட்டப்பட்டது) குறைபாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்று பொது வணிகக் குழு 09 ஆகஸ்ட் 2017 அன்று உத்தரவிட்டிருந்தாலும், தக்கவைப்புப் பணம் ரூ. மே 30, 2022க்குள் கூட

விளையாட்டு மைதானத்தைச் சரி செய்ய 5,156,160 பயன்படுத்தப்படவில்லை.

(9) மொத்தம் ரூ.1,370,300 உட்பட ரூ. 400,000 நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கான மென்பொருளை அமைப்பதற்கு மற்றும் ரூ. மென்பொருளில் தரவை உள்ளிடுவதன் மூலம் சொத்துப் பதிவேட்டை அமைப்பதற்காக 968,300, 2016 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை 08 முறை செலுத்தப்பட்டது. ஆனால் சொத்து மற்றும் உபகரணங்கள் உட்பட நிலையான சொத்துப் பதிவேடு ரூ. 31 டிசம்பர் 2021 நிலவரப்படி 6,614,202,769 மே 30, 2022க்குள் தயாரிக்கப்படவில்லை.

(10) நூலகப் புத்தகங்களை ரூ. 1,000,000 மதிப்பாய்வில் உள்ள ஆண்டில் 2021 ஆம் ஆண்டிற்கான கொள்முதல் திட்டத்தின்படி, 2021 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் ரூ. அதே நோக்கத்திற்காக 7,000,000. 2021 ஆம் ஆண்டில் ரூ.8,305,296 செலவில் நூலகப் புத்தகங்களை வாங்குவதற்கு, கொள்முதல் திட்டம் மற்றும் ஆண்டு வரவு செலவுத் திட்டம் பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டாளராகப் பயன்படுத்தப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டது.

(11) 15 மே 2022 நிலவரப்படி, கல்விப் பணியாளர்களில் அங்கீகரிக்கப்பட்ட 461 பணியிடங்களில் 113 பணியிடங்களும், கல்வி சாரா ஊழியர்களில் அங்கீகரிக்கப்பட்ட 541 பணியிடங்களில் 149 பணியிடங்களும் காலியாக உள்ளன. கல்வி சாரா ஊழியர்களின் வெற்றிடங்களும் மதிப்பாய்வின் ஆண்டில் விடுமுறை ஊதியம் மற்றும் கூடுதல் நேர கொடுப்பனவுகளாக ரூ.17,947,941 செலுத்த வழிவகுத்தது.

(12) மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், ரூ. 02 செலவுப் பாடங்கள் தொடர்பான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை விட 14,226,561 செலவிடப்பட்டுள்ளது, இது ஒதுக்கீட்டில் 33 சதவீதம் முதல் 47 சதவீதம் வரை இருந்தது.

டபிள்யூ. பி.சி. விக்கிரமரத்ன
ஆடிட்டர் ஜெனரல்

(*ஆவணத்தின் கையொப்பமிடப்பட்ட அசல் நகல் வருடாந்த அறிக்கை – 2021 சிங்களப் பதிப்பில் இணைக்கப்பட்டுள்ளது.*)

16. கணக்காய்வு மறுமொழி – 2021

தேசிய கணக்காய்வு சட்டத்தின், 2018ம் ஆண்டின் 19ம் இலக்க இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் தற்போதை நிலையை வெளிப்படுத்தும், சட்டப் படியான, ஒழுங்குவிதிகளின் வேண்டுறுத்தல்களுக்கு ஏற்ப, 31 டிசம்பர் 2020ல் முடிவடைந்த வருடத்துக்கான, 2021 வருடாந்த அறிக்கையில் இடை நுழைக்கப்பட வேண்டிய, நிதி நிலை அறிக்கைகளது ஆய்வின்பின்னரான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

வரிசை எண்	கணக்காய்வு வினவல்	பதில்	தற்போதைய நிலைவரம்
1.2 (அ)	இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை 07 இன் பத்தி 65 இன் படி நடப்பு அல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மதிப்பாய்வு செய்யப் படாததால், ரூ. 1,253,598,110 க்கான நிலையான சொத்துக்கள் முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட போதிலும் தொடர்ந்தும் பயன்பாட்டில் இருந்தன. அந்தவகையில், இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை 03ன் அடிப்படையில் மேற்படி மதிப்பிடப்பட்ட பிழையை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.	நிலையான சொத்துப் பதிவேட்டைத் தயாரிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. காணி, கட்டிடங்களை உள்ளடக்கிய நிலையான சொத்துகள் தூலமாக மதிப்பிடப்பட்டு, சான்றளிக்கப்பட்டு, கணினிமயப்படுத்தப்படு கின்றன. நிலையான சொத்துப் பதிவேடு தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அவ்விதம் தயாரிக்கப்பட்டு அவ்வேலை நிறை வடைந்த பின்னர் கணக்காய்வு உசாவல் அ. மற்றும் ஆ. ஆகியவற்றில் இல் குறிப்பிட்டிருக்கும் எல்லாக் குறைபாடுகளும் ஒழிக்கப்படும். நிலையான வைப்பு பதிவேடு தயாரிப்பதில் இதுவரை எடுக்கப் பட்டிருக்கும்	நிலையான சொத்துக்களைக் கணக்கிடுவதற்குத் தேவையான பார் கோடுகளை அச்சிடுவதற்கும் பார் கோட் 'பார்கோட்' ரீடர் (பட்டைக் குறியீடு வாசிப்பான்)களை வாங்குவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

		நடவடிக்கைகள் பின்வருமாறு : * நிலையான சொத்துக்கள் சம்பந்தமான எல்லாக் குறியீடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. * அவ்வாறு உருவாக்கப்பட்ட குறியீடுகளைப் பாவித்து கணினி மத்திய நிலையம் மற்றும் முகாமைத்துவ பீடம் ஆகியவற்றில் நிலையான சொத்துகளை நிரல்படுத்துதல். * நிலையான சொத்துக்களது விடயத்தில் 'பார்கோட்' (பட்டைக் குறியீடு) பயன்படுத்துதல் தொடர்பில் மென்பொருள் நிறுவனங்களோடு பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு வருகின்றது.	
(ஆ)	மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில் பெறப்பட்ட ரூ. 426,000,000 மூலதன மானியங்கள்,இலங்கை பொதுத் துறை கணக்கியல் தரநிலை 11 இன் படி, நிதிநிலை அறிக்கை களில் அங்கீகரிக்கப்பட்டு அளவிடப் படவில்லை.	இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை 11 எதிர்காலத்தில் பின்பற்றப்படும்.	2022 ஆம் ஆண்டு முதல், நிதிநிலை அறிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை 11 இன் அடிப்படையில் பராமரிக்கப்படும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை 20ன் 103வது பத்தியின் அடிப்படையில் அசையா சொத்துகளின் பயனுள்ள ஆயுட்காலம் மதிப்பாய்வு செய்யப்படாததால், அருவ சொத்துக்கள் ரூ. 13,327,143	நிலையான சொத்துப் பதிவேட்டைத் தயாரிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. காணி, கட்டிடங்களை உள்ளடக்கிய நிலையான சொத்துகள் தூலமாக	நிலையான சொத்துக்களைக் கணக்கிடுவதற்குத் தேவையான பார் கோடுகளை அச்சிடுவதற்கும் பார் கோட் ரீடர்களை வாங்குவதற்கும்

	முழுமையாக மதிப்பிழந்த போதிலும் பயன்பாட்டில் இருந்தன. எவ்வாறாயினும், நிதிநிலை அறிக்கைகளில் கூறப்பட்ட மதிப்பிடப்பட்ட மேற்படி பிழையை இலங்கையின் பொதுவான ஷரத்துக்களின் அடிப்படையில் திருத்து வதற்கு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் படவில்லை	மதிப்பிடப்பட்டு, சான்றளிக்கப்பட்டு, கணினிமயப்படுத்தப்படுகின்றன. நிலையான சொத்துப் பதிவேடு தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அவ்விதம் தயாரிக்கப்பட்டு அவ்வேலை நிறைவடைந்த பின்னர் கணக்காய்வு உசாவல் அ. மற்றும் ஆ. ஆகியவற்றில் இல் குறிப்பிட்டிருக்கும் எல்லாக் குறைபாடுகளும் ஒழிக்கப்படும். நிலையான வைப்பு பதிவேடு தயாரிப்பதில் இதுவரை எடுக்கப் பட்டிருக்கும் நடவடிக்கைகள் பின்வருமாறு : * நிலையான சொத்துக்கள் சம்பந்தமான எல்லாக் குறியீடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. * அவ்வாறு உருவாக்கப்பட்ட குறியீடுகளைப் பாவித்து கணினி மத்திய நிலையம் மற்றும் முகாமைத்துவ பீடம் ஆகியவற்றில் நிலையான சொத்துகளை நிரல்படுத்துதல். * நிலையான சொத்துக்களது விடயத்தில் 'பார்கோட்' (பட்டைக் குறியீடு) பயன்படுத்துதல் தொடர்பில் மென்பொருள் நிறுவனங்களோடு	தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

		பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு வருகின்றது.	
(ஈ)	2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கெனத் தயாரித் திருந்த நிதிநிலைக் கூற்றின் படி, அன்றைய தினத்திற் கான பணிக் கொடை ஏற்பாடு ரூ.514,666,493 ஆன போதிலும், பணிக் கொடையினைக் கணக் கிடும் ஒற்றை நிலுவை களின் பட்டியலின் படி, அது ரூ. 601,158,480 ஆனது. 2019 ஆம் ஆண்டின் கல்விசார் ஊழியர்களுக்கான கற்கைக் கொடுப்பனவு மற்றும் கல்விசாரா ஊழியர்களுக் கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட பணிக்கொடைகளைக் கணக்கிட்டுக் கணக்கீடு செய்வதில் ஏற்பட்டுள்ள ரூ. 86,491,987 குறைவான பண ஒதுக்கீடு, 2021 டிசம்பர் 31 ஆம் திகதிவரை சரி செய்யப்படவில்லை.	பணிக்கொடைகளைக் கணக்கிடு கையில் ஒற்றை நிலுவைப் பட்டியல்களின்படி மீதம் ரூ.601, 158,480 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக் கமைய அந்நிலுவை ரூ. 514,666,493 ஆனதால் இரண்டுக்குமிடையேயான வித்தியாசம் ரூ. 86,491,987 எனக் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டுக்கான பணிக்கொடை ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்யும்போது, கல்விசார் ஊழியர்களுக்குக் கற்கைக் கொடுப்பனவும், கல்விசாரா ஊழியர் களுக்கு 45% மாதாந்த இழப்பீட்டுக் கொடுப்பனவுடனான பணிக்கொடை ஏற்பாடுகள் ஒதுக்கப் பட வேண்டியிருந்தது. அதன்போது முன்னைய ஆண்டுகளுக்கான மேற் குறித்த கொடுப்பனவுகளைக் கண்க்கீடு செய்கையில் பொது இருப்புடன் பொருந்துமாறு சரிப் படுத்தப்பட வேண்டிய அளவினை உரிய முறையில் கணக்கு வைக்கப்படாமையினால் இம்மாற்றம் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதனைச் சரிப்படுத்துவதற்கான	சீரிய திருத்தங்கள் தற்போது செய்யப்பட்டுள்ளன.

		நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	
(உ)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்குள் சுய உருவாக்கும் நிதி நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட ரூ. 73,414,154 இனை மீளாய்வு ஆண்டுக்கான வருமானமாகக் கருதப்பட வேண்டிய போதிலும், அதற்குப் பிரதியாக அதில் ரூ. 36,425,658 இனை மாத்திரம் மீளாய்வு ஆண்டின் வருமானமாக அங்கீகரிக்கப் பட்டதுடன், மீதி ரூ. 36,988,496. பணம் நேரடியாக அபிவிருத்தி நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. இதன் விளைவாக, மீளாய்வு ஆண்டின் உபரி ரூ. 36,988,496 குறைவாகக் காட்டப் படுகிறது.	சுயமாக உருவாக்கப்பட்ட நிதி நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட அதிகப்படியான வருமானம் நேரடியாகவே பணப்பங்களிப்பு குறித்த நிதிக் கணக்கில் பதிவுசெய்யப்படுவதனால், இவ்வாறு வருமானம் குறைத்துக் காண்பிக்கப்படுவதுடன், எதிர்காலத்தில் அவ் அதிகப்படியான வருமான நிறை மாற்றக்கூற்று மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	2022 ஆம் ஆண்டு முதல் அவ் அதிகப்படியான வருமான நிறைமாற்றக் கூற்றின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
(ஊ)	மூலதனம் மற்றும் திட்டமிடல் பிரிவினால் கணக்காய்வுக்குச் சமர்ப் பிக்கப்பட்டு இருந்த தகவல் களின்படி, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீட விரிவுரை மண்டப வளாகத்தை நிர்மாணிப்பதற்கான பொறியியல் பணிகளுக் கான மத்திய ஆலோசனைப் பணியகத்திற்கு 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் ரூ. 20,860,844 செலுத்தப்பட வேண்டிய போதிலும், நிதிநிலைக் கூற்றுகளில் அதற்கான ஒதுக்கீடுகள்	சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீட விரிவுரை மண்டப வளாகத்தை நிர்மாணிப்பதற்கான பொறியியல் பணிகளுக்கு வழங்கப்படவுள்ள ரூ. 16,426,065.00 பண்த்தொகை மற்றும் பிடிமானத் தொகை ரூ. 4,434,779.00 இற்கான விலைப்பட்டியல் ஒன்று நிதிநிலைக் கூற்றுக்கள் தயாரிக்கையில் நிதித்துறை வசம் இல்லாததால், பல்வேறு கடன் வழங்குநர்கள் மற்றும் வைப்புகளில் அப்பெறுமதிகள்	அரச கணக்காய்வுப் பிரிவின் கோரிக்கையின்படி, பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனைப் பணியகத்திடம் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையினைக் கேட்ட போதிலும்மிதுவரை அதற்கான பதில் வரவில்லை. எவ்வாறாயினும், மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவுடன் சேர்ந்து பொறியியல் பணிகள் தொடர்பாக மத்திய

	ஏற்பாடு செய்யப்பட வில்லை.	உள்ளடக்கப்படவில்லை. அவ்விலைப் பட்டியல் இன்றுவரை மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவுக்கு அல்லது நிதித்துறைப் பிரிவுக்குக் கிடைக்கப் பெறவில்லை. எதிர்காலத்தில் மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவிலிருந்து குறித்த விபரங்களைப் பெற்றுக் கொண்டு தேவையான திருத்தங் களைச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	ஆலோசனைப் பணியகத்துடன் கலந்துரையாடி, இதற்குரிய சரியான இருப்புக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
(எ)	2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்குத் தயாரிக்கப்பட்டிருந்த நிதிநிலை அறிக்கையின் பிரகாரம், மூன்று பீடக் கட்டிடங்களை நிர்மாணிப் பதற்காக இன்று வரை பொறியியல் பணிகளுக் கான மத்திய ஆலோசனைப் பணியகத்திற்குச் செலுத்தப் பட வேண்டிய தொகை ரூ. 40,289,882 ஆனபோதிலும், மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவினால் கணக்காய்வுக் காகச் சமர்ப்பித்திருந்த தகவல்களின்படி, அத்திட்டத் திற்காக அப்பணியகத்திற்கு எந்தவிதப் பணத்தொகை யும் செலுத்தப்பட வேண்டிய தில்லை. மாற்றத்திற்கான காரணங்கள் முன்வைக்கப் படவில்லை.	முகாமைத்துவப் பீடக் கட்டிடம், பிரயோக விஞ்ஞான பீடக் கட்டிடம் மற்றும் விவசாய விஞ்ஞான பீடக் கட்டிடம் என்பவற்றை நிர்மாணிப் பதற்கு, பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனைப் பணியகத் திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையை நிதிக்கூற்றில், நிதிப் பிரிவில் அன்று இருந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அறிக்கை யிடப்பட்டு உள்ளதுடன், மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவுக்கு பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனைப் பணியகத்திற்னால் 2021. 07. 27 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற ஒரு கடிதத்தின்படி, அத்திட்டத் திற்காகச் செலுத்தப்பட	அரச கணக்காய்வுப் பிரிவின் வேண்டுகோளுக்கமைய பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனைப் பணியகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை தொடர்பாக வினவிய போதிலும், இதுவரை அதற்கான பதில் கிடைக்கப்பெறவில்லை. எவ்வாறாயினும், மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவுடன் இணைந்து பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனைப் பணியகத்துடன் கலந்துரையாடி, இது தொடர்பான சரியான நிலுவையை உறுதிப்படுத்துமுகமான

		வேண்டிய நிலுவைகள் உள்ளதாகக் காட்டப்பட வில்லை. மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவும் பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனைப் பணியகத்தை வினவி, அத்தொகை செலுத்தப்பட வேண்டியதில்லை எனில், எதிர் காலத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.
ஏ)	மீளாய்வு ஆண்டுக்குள் ரூ. 47,851,166 தொகையைக் கட்டிடக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட போதிலும், அதற்குரிய பேரேட்டில் பதிவிடப்படாத காரணத் தால், அக்கொடுக்கல் வாங்கல்களை இனங் காணவும் சரிபார்க்கவும் முடியவில்லை.	கணக்காய்வாளரின் கணக்காய்வு விசாரணை தொடர்பான அவதானிப்பு பின்வருமாறு அமைகிறது. இக்கட்டிடப் பெறுமதியினை அகற்றுவதற்கான பேரேட்டுப் பற்றுச்சீட்டுகள் தயாரிக் கப்படவில்லை என்றாலும், கணக்கீட்டு முறைமைக்குள் அங்கீகரிக்கப்பட்டு, கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.	கணக்கீட்டு முறைமைக்குள் உள்ள பேரேட்டுப் பதிவின் அச்சுப் பிரதியைப் பெற்று உரிய பேரேட்டுப் பற்றுச்சீட்டு இப்போது தயாரிக்கப்பட்டுள்ளது.
(ஐ)	2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியின் நிதி நிலை அறிக்கையின்படி, நிகழ்நிலைப் பணியாக உள்ள, பிரதான நூலகக் கட்டிடக் கட்டுமானப் பணியின் மதிப்பு ரூ. 48,882,099 ஆகும்.	மூலதனம் மற்றும் திட்டமிடல் பிரிவு, ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்ட தொகைகளை மட்டுமே பணி-நிலைப் பெறுமானமாக	ஏலவே வழங்கப்பட்டுள்ள மறுமொழி இதற்கும் ஏற்புடையதாகும்.

	எவ்வாறாயினும், மூலதனம் மற்றும் திட்டமிடல் பிரிவினால் கணக்காய்வுக் காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அன்றைய தேதியில் நிகழ்நிலையில் உள்ள பணியின் மதிப்பு ரூ. 75,503,800 ஆகும். இந்த வேறுபாடு விளக்கப்பட வில்லை.	அங்கீகரித் துள்ளதுடன், செயற்திட்டத்திற்கான அனைத்துச் செலவுகளும் நிதிநிலை அறிக்கையில் நிகழ்நிலைப் பணி என்றவகையில் அங்கீகரிக்கப் பட்டுள்ளன.	
(ஓ)	முகாமைத்துவ மற்றும் சமூகவியல் பீடத்தின் நிர்மாணத்திற்காக 2019 ஆம் ஆண்டு வழங்கியுள்ள ரூ. 9,953,442 பணத்தொகை, முடிக்கப்படாத பணிக் கணக்கில் பற்று வைத்திருக்க வேண்டிய போதும், அது கட்டிடக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான கட்டிடக் கணக்கு அதற்குச் சமனான அளவில் மிகையாகக் காட்டப் பட்டுள்ளதுடன், 2019, 2010, 2021 ஆகிய மூன்று வருடங்களுக்கான கட்டிடத் தேய்மானம் ரூ. 1,493,016. மிகைக் கணக்கீடாகக் குறிக்கப்பட்டு இருந்தது.	நிதிப் பிரிவினால் ரூ. 9,953,442.00 பெறுமதியான கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. அக்கால கட்டத்தில் அப்பீடக் கட்டிடங்கள் குறித்த பீடங்களினால் பயன்படுத்தப் பட்டதால், அவை முடிவுறாக் கணக்கிலிருந்து கட்டிடக் கணக்கிற்கு மாற்றப் பட்டுள்ளன.	ஏலவே வழங்கப்பட்டுள்ள மறுமொழி இதற்கும் ஏற்புடையதாகும்.
(ஓ)	பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக் குழுவினால் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி வெளியிட்ட 4/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 5.5 ஆம் பத்தியின் ஷரத்து களுக்கு அமைவாக, பல் கலைக்கழகத்தின் சுய உருவாக்க நிதி நடவடிக்கை களுக்காகத்	(i) சுய உருவாக்க நிதி நடவடிக்கை களுக்காகத் தயாரிக்கப்பட்ட திட்டக் கணக்குகள் எதிர்வரும் காலத்தில் பல்கலைக்கழகத்தின் கணக்கு களுடன் இணைப்பாக முன்வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	2022 ஆம் ஆண்டு முதல், நிதி அறிக்கைகள் 4/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைவாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

	தயாரித்துவைக் கப்பட்டிருந்த செயற்திட்டக் கணக்குகள், நிதிச் செயல்திறன் அறிக்கையில் ஒரு குறிப்பாக வெளிப் படுத்தப்படவில்லை. மேலும், குறித்த சுற்றறிக்கையின் 5.5.2 ஆம் பந்தியின் ஷரத்துகளின்படி வருட முடிவில் நிதிக்கான பங்களிப்பினை நிறைமாற்ற அறிக்கை ஊடாகச் செயல்திறன் அறிக்கையில் இருந்து நிதிநிலை அறிக்கைக்கு இடமாற்றம் செய்திருக்க வேண்டிய போதிலும், அது அவ்வாறு செயல்பட்டிருக்கவில்லை.	(ii) கணக்காய்வாளரினால் சுட்டிக் காட்டப்பட்ட பிரகாரம் எதிர்காலத்தில், நிறை வெளிப்பாட்டின் ஊடாக நிதிநிலை அறிக்கைக்கு மாற்று வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும்.	
(ஔ)	தனியார் கம்பனி யொன்றுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. 1,647,000 ஆனது 2016 ஆம் ஆண்டு முதல் முன்னோக் கிக் கொண்டு வரப்பட்ட போதிலும், வழங்கல் பிரிவினால் கணக்காய் வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு இருந்த தகவல்களின்படி, அத்தகைய கொடுப்பனவு ஒன்று இருப்பதாக உறுதிப் படுத்தப் படவில்லை.	2016 ஆம் ஆண்டு திரட்டப்பட்ட மூலதனச் செலவில் உள்ளடங்கிய தனியார் லம்பனியொன்றுக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூ. 1,647,000.00 மூலதனச் செலவினத்தைச் செலுத்து வதற்கான பற்றுச்சீட்டினை நிதிப் பிரிவு இனும் பெறவில்லை. மேலும், திரட்டிய செலவிலிருந்து அகற்று மாறும் நிதிப்பிரிவுக்கு அறிவிக் கப்படவில்லை. இனிவரும் காலத்தில் இது தொடர்பான ஆய்வு செய்யப்பட்டு, சரிசெய்யப்பட நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.	இது தொடர்பான மேலதிகத் தகவல்கள் ஆராயப்பட்டு, அதன் பின்னர் எதிர்காலத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.
(ஃ)	மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவினால் கணக்காய்வுக்கு	விளையாட்டு மைதானம், ஆண்கள் விடுதி, புவியியல் பீடம்	அரச கணக்காய்வுப் பிரிவின் வேண்டுகோளுக்கு அமைவாக, பொறியியல்

	சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் 31 டிசம்பர் 2021ல் உள்ளபடி, விளையாட்டு மைதானம், ஆண்கள் விடுதி, புவியியல் பீடம் ஆகியவற்றின் நிர்மாணம் தொடர்பில் மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத் துக்கு செலுத்த வேண்டிய நிதியில் ரூ. 6,452,677.00 வுக்கான வேறுபாடு காணப் பட்டது. இவ்வேறுபாட்டுக் கான காரணம் விளக்கப்பட வில்லை.	ஆகியவற்றின் நிர்மாணம் தொடர்பில் மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத் துக்கு செலுத்த வேண்டிய தொகை நிதி அறிக்கையில், அந்நாளில் நிதிப் பிரிவில் இருந்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு காட்டப் பட்டுள்ளதோடு, மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவுக்கு பொறியியல் பணிகளுக்கான மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தினால் 2021.07.27 ஆம் திகதி கிடைத்த ஒரு கடிதத்தின்படி அத்திட்டத்திற்காக வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவையும், மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தினையும் கலந்தாலோசித்து மாற்றம் தொடர்பான திருத்தங்களை மேற் கொள்வதற்கு எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.	பணிகளுக்கான மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தினால் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை குறித்து விசாரித்த போதிலும், இதுவரை அதற்கான பதில் எதுவும் கிடைக்கப்பெற வில்லை. எவ்வாறாயினும், மூலதன மற்றும் திட்டமிடல் பிரிவுடன் சேர்ந்து பொறியியல் பணிகளுக்கான மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்துடன் கலந்துரையாடி இதற்கான சரியான நிலுவை உறுதிப்படுத்தலைப் பெற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
2.2.2. (அ)	02 ஜூன் 2003ல் வந்த பொது நிறுவனங்களுக்கான பணிப்பாளர் நாயகத்தின் PED/12ம் இலக்க சுற்றறிக்கை யின் 8.2.2.ம் பந்தி	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உள்ளக கணக்காய்வு 02/2019 சுற்றறிக்கைக்கு இணங்க கணக்காய்விற் குறிப்பிடப் பட்ட அத்தொகை	நிதி ஒழுங்குகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<table>
<tr>
<td></td>
<td>நிறுவனங்களின் உபரி நிதி நிதியமைச்சரின் அனுமதியின் பேரில் முதலீடு செய்யப்பட முடியுமாயினும், அவ்வகை ஒப்புதலின்றி ரூ. 116,660,274.00 8 நிலையான வைப்புகளில் இடப்பட்டுள்ளது ஆய்வில் தெரிய வந்தது.</td>
<td>நிறுவனத்தின் உபரித் தொகை அல்ல. பல்கலைக் கழக ஆளும் குழுமம் மற்றும் நிதிக் குழு ஆகியவற்றின் ஒப்புதலோடு இவை தற்காலிகமாக நிலையான வைப்பில் இடப்பட்டவை.</td>
<td></td>
</tr>
<tr>
<td>(ஆ) (i)</td>
<td>நிதியியல் ஒழுங்குவிதி 371 (5)

இடைக்கால முற்பணக் கணக்குகள் குறிப்பிட்ட அவ்வேலையின் முடிவில் உடனே சீர் செய்யப்படல் வேண்டும். 2016 தொடக்கம் 2021 வரை, திட்டங்கள், ஆய்வுகளுக்கான முற்பணமாகவும், மீண்டெழும் மூலதனமாகவும் 23 அதிகாரிகளு க்கும், 6 நிறுவனங்களுக்கும் 32 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருக்கும் தொகை ரூ. 6,743,084.00 ஆகும். அவை 31 டிசம்பர் 2021 வரை செலுத்தப்படவில்லை.</td>
<td>முற்பணம் மீள செலுத்தப்படாவிடினும் அவற்றைப் பெற்றிருப்போர் வாய்மூலம், எழுத்துமூலம் அறிவித்துள்ளனர். இவ்வருடம் தொடக்கம் அவ்வாறு பெற்று மீளச் செலுத்தாதோரின் சம்பளத்திலிருந்து அதனை மீளப் பெறும் மீட்பு சான்றிதழ் திட்டம் ஒன்றை நடைமுறைக்கு வரவுள்ளது. முற்பண விண்ணப்பத்துடனேயே அது ஆரம்பிக்கும். எதிர்காலத்தின் சம்பளத்தில் இருந்து மீளப் பெறுதல் காத்திரமாய் நடைமுறைப் படுத்தப்படும்.</td>
<td>
<table>
<tr><th>விபரம்</th><th>செலுத்தப்படா முற்பணங்களின் அளவு</th><th>செலுத்தப்படா முற்பணங்களின்பெறுமதி</th></tr>
<tr><td>மூலதன முற்பணம்</td><td>01</td><td>675,000</td></tr>
<tr><td>மீண்டெழும் முற்பணம்</td><td>03</td><td>9,608</td></tr>
<tr><td>திட்டம் முற்பணம்</td><td>06</td><td>2,816,282</td></tr>
<tr><td>ஆய்வு முற்பணம்</td><td>06</td><td>2,540,496</td></tr>
</table>
</td>
</tr>
</table>

			31 டிசம்பர் 2021 வரை மீள செலுத்தப்படாத தரப்புகளுக்கு அவற்றை செலுத்துமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள நிலையில், முற்பணங்களின் விபரம் பின்வருமாறு.
(ii)	நிதி ஒழுங்குவிதி 571 2016 தொடக்கம் 2019 வரை உள்ள காலப் பகுதிக்கு உரித்தான தக்கவைக்கப்பட்ட நிதியாகிய ரூ. 16,686,382.00 சம்பந்தப்பட்டோரிடம் விசாரித்த பின்னர் அரச வருமானக் கணக்கில் இடப்படாமல் உள்ளது.	சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு தக்கவைக்கப்பட்ட நிதியை பல்கலைக்கழகம் மீள வழங்க வேண்டிய கடப்பாடு உள்ளதால் அதனை வருமானமாகக் கொள்ள முடியாது. கணக்காய்வினது அவதானங்கள் பின்வருமாறு : F.R. 570 (C) ன் படி இரண்டு வருத்துக்கு மேற்பட்ட ஏனைய எல்லா வைப்புகளும் வருமானமாகக் கொள்ளப்படுதல் வேண்டும். இன்னும், தக்கவைக்கப்பட்ட நிதியை அவ்வாறு ஒரு வைப்பாகக் கொள்ள முடியாது; பல்கலைக்கழகம் நிலையான சொத்து ஒன்றைக் கொள்வனவு செய்யும்போது அவற்றின் பெறுமதியை வழங்குவதற்குத் தக்க வைப்பதற்காகும். எனவே பல்கலைக்கழகம் அ ந் நிதியை உரியவர்களுக்கு	தக்கவைக்கப்பட்டிருக்கும் நிதிக்கு உரித்தான தரப்புகளோடு ஆலோசனை செய்தபின் அவர்களது மறுமொழியின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

		மீள வழங்குவதற்கான கடப்பாடு உடையது.	
(இ)	உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றுக்கான ஸ்தாபனக் கோவையில் 5ம் அதிகாரம் 7ம் பந்தி. 2000 தொடக்கம் 2007 வரைக்கும் கற்கை விடுமுறையில் சென்ற பின்னர் தமது உடன்படிக் கையை முறிவடையச் செய்து உள்ள 11 அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 50,516,467.00 31 மார்ச் 2022 ஆனபோதும் அறவிடப்பட வில்லை.	மேற்படி தொகை 31.12.2021ல் ரூ. 50,516,466.79 ஆகக் குறைந்துள்ளது. (திருமதி A.A. ரொட்ரிகோ ரூ. 200,000.00 செலுத்தி இருக்கிறார்) இந்த நிலுவையை தவணை முறையிலேனும் செலுத்துவதற்கு அவர்கள் உடன்படவில்லை என்ற காரணத்தால், 3 அதிகாரிகளான கலாநிதி G.W.L. ஜயவர்தன, Y.M.P.M.P. இலுக்பிடிய, K.B.D.P. சமரஜீவ ஆகியோரிடமிருந்து ரூ. 28,638,301.91 வை மீள அறவிடும் நோக்கில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்து க்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிரு க்கின்றன.	ஒப்பந்த மீறல்களின் விளைவாக 11 அதிகாரிகளிடம் இருந்து வர வேண்டிய நிலுவையான ரூ. 50,716,466.79, இன்றைய நிலைவரத்தில் ரூ. 48,281,040.23ஆகக் குறைந்துள்ளது. திருமதி ஏ.ஏ. ரொட்ரிகோ 27.01.2022ல் ரூ. 200,000.00, 30.07.2022ல் ரூ. 103,104.65 வைச் செலுத்தியுள்ளார். ரூ. 10,170.00, 02.1.2015ல் செலுத்தப்பட்டதாக பின்னர் அறிவிக்கப்பட்டது. அத்துடன் திருமதி வீ.கே.ஜீ.விதான அவர்களது சேமலாப நிதியிலிருந்து ரூ. 2,122,151.91 22.04.2022அன்று மீள அறவிடப்பட்டது.) இந்த விபரங்கள் இணைப்பு 1ல் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி, ரூ. 66,124,113.27 ஆகிய மொத்தத் தொகையில் இருந்து ரூ. 17,843,073.04 இன்று வரை மீள அறவிடப்பட்டுள்ளது. கலாநிதி G.W.L. ஜயவர்தன, Y.M.P.M.P. இலுக்பிடிய, K.B.D.P. சமரஜீவ ஆகியோர் செலுத்த வேண்டிய நிலுவை ரூ. 28,638,301.91 ஆகும். அதனை மீள அறவிடும் நோக்கில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற ன. தவணை முறையில் தருவதாக உடன்பட்ட திருமதி. ஏ.ஏ. ரொட்ரிகோ அவர்களிடமிருந்து வர

			வேண்டிய ரூ. 4140/= அறவிடப்படும். மீதி ரூ. 630,954.59 அவரது செமலாபக் கணக்கிலிருந்து மீளப் பெறப்படும். தமது ஒப்பந்தங்களை மீறி நிலுவைகளை செலுத்தாத 11 பேரில் ரூ. 19,007,643.73ஐ மீளப் பெறும் நோக்கில் திருமதி. M.D.M.L.D.K யடவர, திருமதி. K.A. குமுதினி, திருமதி. W.M.D. ப்ரியதர்ஷினி ஆகியோர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
2.2.4. (அ)	வடிவமைப்பும் கட்டு மானமும் என்ற அடிப்படையில் வரி விலக்கு அளிக்கப்பட்டு, ரூ. 355,715,000.00 பெறுமதியான, பல்கலைக்கழக பணியாளருக்கான வீடமைப்புத் தொகுதித் திட்டம் 30 அக்டோபர் 2017ல் ஒரு நிர்மாண நிறுவனத் துக்கு வழங்கப் பட்டது. ஏலங்கேள் மனுவில் உள்ளக பாதைகள் மற்றும் வெளி சுற்றுமதில் ஆகியவற்றில் செய்யப்பட்ட மிகை மதிப்பீட்டின் காரணமாக வும், தொழினுட்ப மதிப்பீட்டுக் குழு தனது மதிப்பீட்டை முறையாக மேற்கொள்ளாததன் காரண மாகவும் ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்ட பின்னர் அதுவும் குறிப்பாக கொள்வனவுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நிர்மாணத் திட்டம்	விலைகேள் மனுவின் 3.6ல் குறிப்பிடப்பட்டிரு க்கும் விலையின் பிரகாரம், 30 மீட்டர் நீளமான காப்புச் சுவர், வாசல் ஆகியவற்றின் பெறுமதி ரூ. 11,525,000.00 ஆகும். சுற்று மதிலின் நீளத்தை வைத்துக் கணக்கிடப்பட்டு மிகையாக வழங்க ப்பட்டிருக்கும் தொகை ஒப்பந்தக்காரரிடமிரு ந்து அறவிடப்படும். உள்ளக வீதி அமைப்பு மற்றும் அதனைச் சார்ந்தவைகளுக்கான விலையாக ரூ. 23,500,000.00 விலைகேள் மனுவில் உள்ளடக்கப்பட் டிருந்தது. வீதியின் குறிப்பான நீளம் விலை அட்டவணையில் குறிப்பிடப் படவில்லை. விலைகேள் ஆவணங் களோடு 2.1 எனும் வகைப் பாட்டில் இதுபற்றிய ஒரு	இவ்விடயம் மீள்பரிசீலனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. நிர்மாணத்தை மீள் அளவைக்குட் படுத்தி குறிப்பிட்ட நீளத்தை கணிப்பீடு செய்து, ஒப்பந்தக்காரருக்கு வழங்க வேண்டிய தொகையான ரூ. 10,000,000.00இல் இருந்து நடைமுறைப் பணிக்கான பெறுமதியை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

	மாற்றி அமைக்கப்பட்டது. இப்படியான முறைகேடுகள், மற்றும் போதிய கவன மின்மை ஆகிய காரணங் களினால் பல்கலைக்கழகம் சுமார் ரூ. 20,116,000.00 தொகையைச் செலவிட வேண்டிய நிலைமை உருவானது.	முதன்மைத் திட்டம் இணைக்கப்படுதல் வேண்டும் என மனுதாரருக்கு அறிவுறுத்தப் பட்டிருக்கின்றது. அதற்கிணங்க, முன்னர் மத்திய பொறியியல் ஆலோச னைப் பணியகத்தினால் வடிவமைக் கப்பட்ட வீதி அமைப்பு புதிய தேவைக்கு ஏற்ப திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி ரூ. 23,500,000.00 வுக்கு முழுவதுமான வீதித் தொகுதியை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தக்காரர் உத்தேசித்துள்ளார். எனவே, அந்த தொகை வழங்கப் பட்டால் வீதியின் நீளத்தை அளப்பதற்கான தேவை எழாது. அதனால், மேற்படி தொகை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டது. 2850 மீட்டர் நீளமான கொன்க்ரீட் வடிகான் வீதி நெடுகிலும் அமைப்பது பற்றிய குறிப்பு இருக்கவில்லை. அதாவது முழுத் திட்டத்திலுமே இருந்ததில்லை. வீட்டுத் திட்டக் காணியிலும் வீதியோரங்களிலும் மணல் வடிகான்கள் பற்றிய குறிப்புகளேதும் விலைகேள் ஆவணங்களில் இருக்கவில்லை. அவ்வாறு இல்லாதிருந்தபோதிலும் கொன்க்ரீட் வடிகான்கள் குறிப்பிட்ட நீளத்துக்கு நிர்மாணிக்கப்படுதல்	

		வேண்டும். இருந்த போதிலும், விலைகேள் ஆவணங்களின் அடிப்படையில் வீதியின் ஒரு மருங்கில் கொன்க்ரீட் வடிகான் அமைக்கப் படுதல் வேண்டும்.	
(ஆ)	புதிய வாசிகசாலைக் கட்டிடத்தின் முதலாம் கட்டம் 30 ஜனவரி 2018ல் ஒப்பந்தப் பெறுமதியான ரூ. 315,051,433.00வுக்கு ஒரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப் பட்டது. அப்போதிருந்த நிலையில் பெறுமதி சேர் வரி தவிர்க்கப்பட்டு 24 மாதங்க ளுக்குள் பணி நிறைவடைந்தது. ரூ. 63,010,286.00 ஒருங்குசேர் முற்பணமா க வழங்கப்பட்டதுடன், 07 பெப்ரவரி 2020ல் முற்பணக் கொடுப்பனவுக்கா ன பிணை உறுதி காலவதியானது. ஆனால், அதை நீடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை. அதேவேளை, ஒப்பந்தக் காரர் நிர்மாணத்தை இடை நடுவில் கைவிட்டார். பணிப் பொறியியிலாள ரது மதிப்பீட்டில் சான்றளிக் கப்பட்ட இறுதிப் பணியின் பெறுமதி ரூ. 43,058,226.00 ஆகும். முடிந்த வேலை களுக்காக ஒப்பந்தக் காரருக்கு ஒருங்குசேர் முற்பணமாக ரூ. 83,010,286.00 வழங்கப் பட்டிருந்த போதிலும், அவரிடமிருந்து	31.07.2021ல் நிர்மாணத்துக்கான உப ஒப்பந்தக் காரரால் ரூ. 23,750,499.63 பெறுமதியான பட்டியல் சமர்ப்பிக்கப் பட்டிருந்த போதிலும் அதற்கான ஆற்றுகை உத்தரவாதம் தரப்படாத காரணத்தால் சபை அந்தத் தொகையை செலுத்துவதில்லை என தீர்மானித்தது. மேலும், அது 01.12.2021 அன்றோ அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சமர்ப்பிக்கப் பட்டாலும் சபை அந்தப் பட்டியல் தொகையில் 50% மாத்திரமே செலுத்துவது எனவும், மீதியை ஒருங்குசேர் முற்பண முறிக் கணக்கில் மீளப் பெறல் வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. எதிர்காலத்தில் குறிப்பிட்ட திகதியில் மேற்படி முறி வழங்கப்படாதவிடத்து மொத்த பட்டியல் தொகையின் 50%ஐ ஒருங்குசேர் முற்பணம் முழுவதையும் மீளப் பெறுவதென உப ஒப்பந்தக் காரருக்கு அறிவிக்கப்பட்டதுடன்,	உப ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்திருந்த எழுத்து மூல முறையீட்டில் பிரதான ஒப்பந்தக் காரருக்கு ஏற்பட்ட நிதிப் பிரச்சினைகள் காரணமாக உப ஒப்பந்தக் காரருக்கு உத்தரவாத வசதிகளைப் பெற முடியாமற் போனதென்றும், பின்னர் இரு சந்தர்ப்பங்களில் ரூ. 15,000,000.00 வுக்கான உத்தரவாதங்கள் சமர்ப்பிக்கப்பட்டது எனவும் தெரிவித்திருந்தார். ஒப்பந்தக்காரர் நிர்மாணத்தின் கால எல்லையை நீடித்து தரும்படி விடுத்த வேண்டுகோளை ஏற்று பல்கலைக்கழக மன்றம் மற்றும் உயர்கல்வி அமைச்சு ஆகியவை தேவையான அனுமதியை வழங்கியது.

	அறவிடப்பட வேண்டிய தொகை ரூ. 39,952,060.00 ஆகும். ரூ. 15,752,572.00 பெறுமதி வாய்ந்த ஆற்றுகைப் பிணை அவ்வருடமே பணமாக மாற்றப்பட்டி ருந்தது ஆய்வில் உள்ளது. இது பல்கலைக்கழகத்தின் மீண்டெழும் செலவினங் களின் மகுடத்தில் செலவழிக்கப்பட்டிருக்கிற து. ஒப்பந்தக்காரரின் வேண்டு கோளின் பேரில் கொள்வனவுக் குழுவின் ஒப்புதல் இன்றி 01பெப்ரவரி 20201ல் ஒரு முத்தரப்பு ஒப்பந்தம் நடைபெற் றுள்ளது. அதன் பிரகாரம் 24 பெப்ரவரி 2022ல் பணிகள் நிறைவு பெறுதல் வேண்டும். புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்ட 7 நாட்களுக்குள் சமர்ப்பிக் கப்பட வேண்டிய ரூ. 53,442,615.00 க்கான முற்பண பிணை முறியை சமர்ப்பிக்கத் தவறிய நிலையில் ரூ. 15,752,572.00வுக்கான ஆற்றுகைப் பிணை 24 மார்ச் 2022 வரை தாமதிக்கப் பட்டது. இது விடயமாக நடவடிக்கை ஏதும் எடுக்காது, 23 ஜனவரி 2023 வரை ஒப்பந்தத்தை நீடிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.	இதில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் சபை தீர்மானித்தது.	

(c)	130 மேசைக் கணினிகள் ரூ. 15,964,000.00 செலவில் ஜூன் 2016ல் கொள்வனவு செய்யப் பட்ட விடயத் தில் ஒழுங்குகள் பின்பற்றப் படவில்லை என்பதால், அதைப் பற்றி விசாரிப்பதற்காக மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழு ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. 19 மே 2018ல் வெளிவந்த விசாரணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் கொள்வன வுச் செயற்பாட்டில் முழுவதுமாக பொறுப்பற்ற வகையில் செயற்பட்ட அதிகாரிகளுக் கெதிராக ஒழுக்காற் று நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் என பரிந்துரைக் கப்பட்டிருந்தது. 30 ஏப்ரல் 2022 ஆனபோதிலும், இந்த ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை . மேலும், இது விடயமாகத் தடுத்து வைக்கப் பட்டிருந்த நிதி ரூ. 1,596,400.00 வும் 21 ஜூன் 2018ல் ஒப்பந்தகாரருக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.	தடுப்பு நிதி விடுவிக்கப்பட்டது குழுவின் தீர்மானத்தின்படியாகும். 24.01.2022ல் நடைபெற்ற 280 மன்றத் தீர்மானப்படி இது தொடர்பான ஏனைய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கிணங்க, 21/12/2021ல் நிதியியல் நிர்வாக ஒழுங்குகள் சம்பந்தமாக நிர்வாக அதிகாரிகளது அறிவில் விளக்கேற்றி வைப்பதற்கான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. கொள்வனவு நிகழ் முறை பற்றிய விழிப்புணர்வை கல்விசார் மற்றும் கல்விசாராத பணியாளருக்கு ஊட்டும் நோக்கிலான நிகழ்வும் அத்தினம் இடம்பெற்றது. மேலும், எதிர்காலத்தில் இத்தகைய பயிற்சித் தேவைகள் தொடர்பாகக் கண்டறியவும் தேவை யான பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத் தவும் போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ள ப்பட்டு வருகின்றன.	அதே மறுமொழி இங்கும் இடப்படுகிறது
(d)	திணைக்களக் கொள்வனவு குழுவுக்கு வழங்கப் பட்டிருந்த செலவீட்டு அதிகார வரம்பை மீறி, நான்கு தவணைகளில் ரூ. 34,123,169.00 பெறுமதியான மருத்துவ பீடத்தின்	ஒவ்வொரு பீடத்தினதும் வேண்டுகோளின் பிரகாரம் 2021ம் ஆண்டுக்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதில் 22.9 மிலியன் ரூபாய்கள் ஆய்வுகூட உபகரணங்	அதே மறுமொழி இங்கும் இடப்படுகிறது

	ஆய்வுகூடத்துக்கான உபகரண ங்கள் கொள்வனவு செய்யப்பட்டி ருந்தன. மேலும், 172 மேசைக் கணினிகள் 5 தவணை களிலும், 76 மடிக்கணினிகள் 3 தவணை களிலும் மேற்படி திணைக்கள கொள்வனவு குழுவின் பரிந்துரையின் பேரில் கொள்வனவு செய்யப் பட்டிருக்கின்றன. இவற்றின் பெறுமதி ரூ. 44,983,730.00 ஆகும்.	களுக்காக ஒதுக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக கல்வி அமைச்சின் அனுமதியின்படி மருத்துவ பீடத்துக்கு 75 மிலியன் ரூபாய்கள் ஒடுக்கீடு செய்யப்பட்டது. கல்வி அமைச்சினால் ஒதுக்கப் பட்ட தொகை பல்கலைக்கழக கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப் படாததன் காரணம், அது உயர் கல்வி அமைச்சின் மூலதன வழங்கல் ஏற்பாடு என்பதால் ஆகும். கொள்வனவு செயன்முறையின் நிறைவுப் பகுதி மாத்திரம் வழங்கல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. **மேசைக் கணினிகள்** 2019 தொடக்கம் வழங்கப்பட்ட மூலதனத்தின் போதாமை, பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்றவர்களின் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆகிய பல்வேறு காரணங்களால், மூல உபகரணங்களது பயன்படுத்துவதில் பற்றாக்கு றை நிலவியது. நாட்டில் நிலவிய நோய்த் தொற்று சூழ்நிலை காரணமாக அவற்றை முறையாகக் கொள்வனவு செய்யவியலாது போனது. 2021ம் ஆண்டுக்கான கொள்வனவுத் திட்ட அமுலாக்கலின்போது பிரயோக விஞ்ஞான பீடத்தின் விசேட	

		வேண்டுகோளின் பேரில் மேலதிக தொகைக் கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டன. குறிப்பாக, பல்கலைக் கழகத்துக்கு மாணவர்களை உள்வாங்கும் வழமையான செயல்முறையினைத் தாண்டி பெருந் தொகையானோரை உள்வாங்கு வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன. அவர்களுக்கான வசதிக ளை வழங்கும் நோக்கிலேயே மேலதிக கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு பீடத்திலும் தற்போது பாவனையில் உள்ள கணினிகள் நீண்ட காலமாக அங்கிருப்பவை. நவீன தேவைகள் கருதிய பயன்பாட்டுக்கு ஒத்துழைக்காது தொழினுட்பக் கோளாறுகளை வெளிப்படுத்துபவை. எனவே இவற்றைக் கருத்திற் கொண்டே மேற்படி கொள்வனவுகள் இடம்பெற்றன. **மடிக் கணினிகள்** 2019 தொடக்கம் வழங்கப்பட்ட மூலதனத்தின் போதாமை, பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்றவர்களின் தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆகிய	

		பல்வேறு காரணங்களால், மூல உபகரணங்களது பயன்படுத்துவதில் பற்றாக்குறை நிலவியது. நாட்டில் நிலவிய நோய்த் தொற்று சூழ்நிலை காரணமாக அவற்றை முறையாகக் கொள்வனவு செய்யவியலாது போனது. குறிப்பாக, பல்கலைக்கழகத் துக்கு மாணவர்களை உள்வாங்கும் வழமையான செயல்முறையினைத் தாண்டி பெருந்தொகை யானோரை உள்வாங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுக் கான வசதிக ளை வழங்கும் நோக்கிலேயே மேலதிக மடிக் கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. ஒவ்வொரு பீடத்திலும் தற்போது பாவனையில் உள்ள மடிக் கணினிகள் நீண்ட காலமாக அங்கிருப்பவை. நவீன தேவைகள் கருதிய பயன்பாட்டுக்கு ஒத்துழைக்காது தொழினுட்பக் கோளாறுகளை வெளிப்படுத்துபவை. எனவே, இவற்றைக் கருத்திற் கொண்டே மேற்படி கொள்வனவுகள் இடம்பெற்றன. 2021ம் ஆண்டுக் கான கொள்வனவுத் திட்ட செயற்பாட்டின் போது	

		சமூக விஞ்ஞான பீடத்தின் வேண்டுகோளின் பேரில் 10 மடிக் கணினிகளும், முகாமைத்துவ பீடத்தின் வேண்டுகோளின் பேரில் 3ம் மாத்திரம் மேலதிகமாகக் கொள்வனவு செய்யப்பட்டன. 01.01.2022ல் அவ்வாண்டுக்குரிய மடிக் கணினி களுக்கான கொள்முதற் கட்டளைகள் வழங்கப்ப ட்டுள்ளன. அவை 2021ம் ஆண்டுக்கான கட்டளைகளுக்கு உள்ளடங்காததும் 2022ன் கொடுப்பனவு களுக்குள் அடங்குவது மாகும். இப்படியான விசேட தேவைகளுக்கு நாட்டின் தற்போதைய நிலைமகளை கருத்திற் கொண்டு நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டன.	
2.3 (அ)	2012க்கும் 2017க்கும் இடையில் பட்டப் பின் கற்கைத் தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்காக சம்பளத்துட னான விடுமுறையில் சென்ற 5 அதிகாரிகள் பெப்ரவரி 2022 ஆன பின்னரும் தமது கற்கையைப் பூர்த்தி செய்யாது தமது பணிகளில் இணைந்திருப்பது அவதானத்துக்கு உட்பட்டிருக்கிறது.	(a) K.R.H.L.குணசேகர தொடர்பான பதில்கள் கீழே (b) யில் வழங்கப்பட்டுள்ள ன. • திரு. S.K. ஹதரகம 01.05.2016ல் பணிக்கு சமுகமளித்துள்ளா ர். 18.08.2016, 02.04.2017, 05.12.2017, 25.03.2018, 26.07.2018, 20.08.2018, 15.02.2019, 05.10.2019, 23.10.2019	அதே மறுமொழி இங்கும் இடப்படுகிறது

	பல்கலைக் கழகத்துடன் அவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கையின் 19ம் பிரிவின் பிரகாரம் இதற்காக ஏற்க நேர்ந்த செலவினங்களின் மொத்தமான ரூ. 42,853,450.00 மற்றும் அவற்றின் மிகை யேற்றம் ஆகியன நோக்கம் நிறைவு செய்யப்படாததன் காரணமாக அறவிடப் பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் 31 டிசம்பர் 2021 வரை அவை மீள அறவிடப் படவில்லை.	மற்றும் 13.12.2021 ஆகிய திகதிகளில் முன்னேற்ற அறிக்கைகளையும் சமர்ப்பித்துள்ளார். அதற்கிணங்க, தனது கற்கையை அவர் தொடர் வதான மறைபொருள் துலக்கம் உள்ளது. தனது கலா நிதி சான்றிதழை அவர் சமர்ப்பிக்காதவிட த்து கற்கை விடுமுறை ஒப்பந்தத்தின்படி அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும். . • திரு. H.M.C.G. பண்டார கொழும்புப் பல்கலைக்கழக பட்டப் பின் கற்கைப் பீடத்தில் தனது கலா நிதிக் கற்கையைத் தொடர்வதற்கு 23.05.2017 மற்றும் 14.06.2017 ஆகிய திகதிகளில் கடிதங்களை சமர்ப்பித் திருந்தார். 20.06.2017ல் நடை பெற்ற விடுமுறை மற்றும் மானிய ங்கள் தொடர்பான குழுக் கூட்டத்தின் பரிந்துரை, 23.06.2017ல் நடைபெற்ற 228வது	

		மன்றம் ஆகியவற்றின் ஒப்புதல் படி 05.07.2017 தொடக்கம் 18.02.2020 வரை அவருக்கு முழு சம்பளத்துடனான கற்கை விடுமுறை அளிக்கப்பட்டது. 05.12.2018 திகதியிட்டு 245வது மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அடுத்துவரும் முழு வருடத்துக்கான கற்கை முன்னேற்ற அறிக்கையைத் தொடர்ந்து 28.12.2018ல் முழு சம்பளத்துடனான கற்கை விடுமுறை 05.07.2018 தொடக்கம் 04.09.2019 வரை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டது. 26.08.2019ல் சமர்ப்பிக்கப்பட்ட கற்கை முன்னேற்ற அறிக்கையின் படி 31.10.2019ல் 255வது மன்றம் 31.10.2019ல், 05.07.2019 தொடக்கம் 18.02.2020 வரை சம்பளத்துடனான கற்கை விடுமுறையை 7 மாதங்கள் 14 நாட்களுக்கு நீடித்தது. 18.02.2020ல் அவர் கடமைக்கு சமுகமளித்த போதிலும் ஒப்பந்தப்	

		பிரகாரம் அவர் சான்றிதழையோ விரிவான அறிக்கையையோ சமர்ப்பி க்கவில்லை. எனவே 24.09.2020, 29.10.2021 மற்றும் 12.01.2022 திகதியிட்ட கடிதங்கள் மூலம் அவரது கற்கை தொடர்பான முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் கலாநிதி சான்றிதழ் ஆகியவற்றை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டார். இருந்த போதி லும், இன்று வரை அவை சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கு மன்றம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. • திரு. A.R.M.M. ரத்னாயக்க I. சிரேஷ்ட உதவி நூலகர் தரம்1 பதவியில் இருக்கும் திரு A.R.M.M. ரத்னாயக்க மலேசியாவின் மலாயா பல்கலைக்கழகத் தகவல் தொழினுட்ப, கணினி அறிவியல் பீடத்தில் தனது கலா நிதிக் கற்கையை தொடர்வதற்கு	

		கற்கை விடுமுறை கேட்டு, பிரதான நூலகரின் பரிந்துரையுடன் 29.04.2013 திகதியிட்ட கடிதம் மூலம் விண்ணப்பித் திருந்தார். அதற்கிணங்க, 18.05.2013ல் இடம்பெற்ற 184வது மன்றம் 01.09.2013 தொடக்கம் 31.10.2015 வரையான 26 மாத சம்பளத்துடனான விடுமுறையையும், 01.11.2015 தொடக்கம் 31.08.2016 வரையிலான 10 மாத சம்பளமற்ற விடுமுறை யையும் வழங்கியது. இந் நோக்கத்துக்கா க ரூ. 2,250,000.00 மானியமாக NCAS நிறுவனம் மூலம் வழங்கப் பட்டது. பல்கலைக் கழகத்துடன் 09.07.2013ல் அவர் ஒப்பந்தம் ஒன்றையும் பிணை உறுதி ஆவணம் ஒன்றையும்	

		கைச்சாத் திட்டுள்ளார். அதன்படி, அவருக்கு 01.09.2013 தொடக்கம் 31.08.2014 வரை கற்கை விடுமுறை வழங்கப்பட்டது டன், சமர்ப்பிக்கப்பட்ட அரை வருட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் அவரது கற்கை விடுமுறை முறையே 30.08.2014ல் இடம்பெற்ற 199வது மன்றம், 26.02.2016ல் இடம்பெற்ற 212வது மன்றம் ஆகியவற்றின் தீர்மா னங்களின் படி 01.09.2014 தொடக்கம் 31.08.2016 வரை நீடிக்கப்பட்டது. சம்பளமின்றி வெளி நாடொன்றில் கற்பதில் செலவுகள் அதிகம் என்பதால் 31.12.2015ல் அனுப்பிய கடிதமொன்றின் மூலம் 01.01.2016	

		தொடக்கம் பணியில் இணைந்து இலங்கையிலிருந்து தனது கல்வியைத் தொடர்வதற்கான அனுமதியைக் கோரி இருந்தார். அதற்கிணங்க, 21.01.2016ல் நடைபெற்ற விடுமுறைகள் மற்றும் மானியங்கள் குழுவின் பரிந்துரை மற்றும் 28.01.2016ல் நடைபெற்ற 121வது மன்றத்தின் அனுமதியின் பிரகாரம், இந்த ஏற்பாட்டுக்கு அவரது மேற்பார்வையாளர் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கவில்லை என்ற உறுதியைப் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் அவருக்கான அனுமதி வழங்கப்பட்டது.	

			அதன்படி, 17.02.2016ல் அவர் சமர்ப் பித்த கடிதத்தில் 16.02.2016ல் அவரது மேற்பார்வையாளர் தந்திருந்த சம்மதக் கடிதம் இணைக்கப்பட்டி ருந்தது.	
		II.	தான் ஒரு தீவிர நோயினால் பாதிக்கப்பட்டி ருப்பதாகவும் அதன் விளைவாக பல சத்திர சிகிச்சைகள் செய்யப் பட்டிருப்ப தாகவும் தெரிவித்து அவை தொடர்பான வைத்திய அறிக்கை களையும் இணைத்து NCAS நிறுவனத்துக்கு 08.02.2022 திகதியிட்டு அனுப்பிய கடிதத்தில் அவர் தெரிவித் திருந்தார். எனவே, தனது பட்டப் பின் கற்கையை இலங்கையில் நிறைவு செய்வதற்கான அனுமதியை வழங்கு மாறு	

		அதில் கோரப்பட்டிருந்தது. III. அந்த நிறுவனத்தில் இருந்து இதுவரை அதற்கான பதில் ஏதும் கிடைக்கப் பெறாத படியால், அவ்வாறு கிடைத்ததும் மன்றத்தின் வழிகாட்டலின் படி அவரது கற்கை விடுமுறை, அதற்காக செலவிடப்பட்ட பல்கலைக்கழக நிதி, தனது கற்கையை அவர் நிறைவு செய்யாதிருந்தால் அதற்கான நடவடிக்கை போன்ற விடயங்களில் அவரது ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுக்கப்படும். • தனது கற்கை விடுமுறையை நிறைவு செய்து R.V.S. ஹேமலதா 25.02.2015ல் பணிக்குத் திரும்பினார்.	

		அதனைத் தொடர்ந்து 31.05.2016 மற்றும் 02.08.2019 ஆகிய தினங்களில் அவரது முன்னேற்ற அறிக்கைகளையும் சமர்ப்பித்தார். அவர் கற்கையைத் தொடர்ந்த கீல் பல்கலைக்கழகம், கலாநிதிப் பட்டத்துக்கான கற்கைக்கு அவர் பதிவு செய்திருந்தாலும் அவர் முதுதத்துவமானி வழங்கப்படுவதற்குத் மாத்திரமே தகுதியானவர் என தீர்மானித்தது. அதற்கிண ங்க NCAS நிறுவனம் அவரது கலாநிதிக் கற்கைக்கு மானியமாக வழங்கப்பட்ட ரூ. 2,200,000.00வை மீளச் செலுத்துமாறு அறிவி த்திருந்தது. அவர் தனது கற்கையை நிறைவு செய்யா விட்டால் பல்கலைக் கழகம், அவரது ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் மன்றத்தின் அறுவுறுத்தல்களி ன் பிரகாரம் அவர்மீது நடவடிக்கை எடுப்பத ற்கு எதிர்பார்த்துள்ளது.	

(b)	மேற்படிப்பை பூர்த்தி செய்வதற்காக ஒரு அதிகாரி 15 மார்ச் 2014 முதல் 14மார்ச் 2017 வரை 36 மாத வெளி நாட்டு கற்கை விடுமுறை எடுத்திருந்தார். மேலதிகமாக, அவரது வேண்டுகோளின் பேரில் ஊதியமற்ற விடுமுறையில் 19 நவம்பர் 2015 முதல் லங்கா எலெக்ட்ரிசிடி ப்ரைவேட் லிமிடட் நிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கென வரையறுத்த கால வரம்புக்குள் கற்கை பூர்த்திசெய்யப் படாமல் இருந்தபோதிலும், ரூ. 10,313,221.00 பெறுமதியான கடன் பிணை பல்கலைக் கழகத்தால் அவரிடமிருந்து வசூலிக்கப்படவில்லை. மாறாக, மேற்படி நபருக்கு 20 பெப்ரவரி 2019 முதல் 13 ஜூன் 2020 வரை பட்டப் பின்படிப்பு பிரிவில் கலாநிதிக் கற்கை ஒன்றுக்காக சம்பளத்துடன் கூடிய கற்கை விடுமுறை வழங்கப்பட்டு, முன்னைய பிணைத் தொகை உள்ளடங்கலாக புதிய கடனீட்டுப் பிணை முறி ஒன்றை வழங்குவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது. ஆனால், அவரது பட்டப் பின் கற்கை 30 மே 2022 வரை பூர்த்தி செய்யப் படவில்லை.	**திரு. K.R.H.L குணசேகர** முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் சுற்றுலாத்துறை திணைக்கள 1ம் தர சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. K.R.H.L குணசேகரவுக்கு 15.03.2014 தொடக்கம் 14.03.2017 வரையான 36 மாதங்கள் மலேசியாவின் மலாயா பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத் துக்கான கற்கைகளுக்கு வெளி நாட்டு கற்கை விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. அதே வேளை ரூ.8,844,060.07க்கான உத்தரவாதப் பிணை மற்றும் கற்கை விடுமுறைப் பத்திரம் ஆகிய ஆவணங்கள் சபரகமுவப் பல்கலைக்கழகத்தால் ஒப்பமிட்டு பெற்றுக் கொள்ளப்பட்டன. I. NCAS நிறுவனத்தில் பட்டப் பின்படிப்புக்கு மானியமாகப் பெற்றுக்கொண்ட ரூ. 750,000.00 மற்றும் கற்கை விடுமுறைக் காலப் பகுதியில் அவரது சம்பளத்துடன் கூடிய கற்கைக் கொடுப்பனவுகளின் அடிப்படையில், பல்கலைக் கழகத்துடனான அவரது	அதே மறுமொழி இங்கும் இடப்படுகிறது

		கடனீட்டுப் பத்திரம் புதிய தொகையான ரூ. 10,313,221.89 வோடு 14.08.2015 ல் மீள வரையப்பட்டுள்ளது. II. 18.11.2015 திகதியிட்டு அவரது திணைக்களத் தலைமை, துறைத் தலைமை ஊடாக உபவேந்தருக்கு அனுப்பி இருந்த கடிதத்தில், அன்று தொடக்கம் தனது கற்கை விடுமுறையை ரத்து செய்து கடமைக்கு திரும்புவதாக அறிவித்திருந்தார். தனது கற்கை நிறைவடைந்திருப்பதாகவும் ஆய்வு நடவடிக்கைகளை இலங்கையில் தொடர இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். அதே நாளில் அவரால் சமர்ப்பிக்கப்பட்	

		டிருந்த வேறொரு கடிதத்தில் தான் இலங்கை மின்சார (தனியார்) கம்பனியின் தலைவராக நியமனம் பெற்றிருப்பதாகவும், அப்பதவியை பொறுப்பேற்பதற்கு தனக்கு விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தர். 17.11.2015 முதல் இலங்கை மின்சார சபையின் தலைவர் தன்னை அந்த நிறுவனத்தின் தலைவராக 18.11.2015 திகதியிட்ட CEB/CH/LECO/2015 கோவைக் குறிப்பு கொண்ட கடிதம் மூலம் நியமித்திருப்பதாகவும் தெரிவித்திருந்த அவர் அதன் பிரதியையும் இணைத்திருந்தார். அதன்பிரகாரம், மேற்படி நியமனக்	

		கடிதம் இலங்கை மின்சார சபையின் தலைவரினால் 18.11.2015ல் திரு. லால் குணசேகரவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 16.11.2015 அன்று இலங்கை மின்சார சபையில் நடைபெற்ற கூட்டத்தில் அவரது நியமனம் முடிவு செய்யப்பட்டதாகவும் அதன் பிரகாரம் அவரது கடமைகளை லங்கா எலக்ட்ரிசிடி ப்ரைவேட் லிமிடட் நிறுவனத்தில் 17.11.2015 தொடக்கம் கையேற்பதற்கு அவருக்கு அறிவிக்கப் பட்டதாகவும், மேற்படி கடிதத்தின் பிரதிகள் மின்வலு மீள்புதிப்பிக்கத்தக்க வலு அமைச்சுக்கும் அதன் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தது. III. மற்றும் IV 19.11.2015ல் நடைபெற்ற 210வது பல்கலைக்கழக ஆளுகைக் குழும அரங்கில் iiல் குறிப்பிட்ட பிரகாரம் திரு. லால் குணசேகரவை சம்பளமற்ற	

		விடுமுறையில் ஒரு வருட காலத்துக்கு, உயர்கல்வி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவை சம்பந்தமான அரச ஸ்தாபனக் கோவையின் 39ம் பிரிவின் X ஏட்டுப் பிரிவின் பிரகாரம் 19.11.2015 தொடக்கம் விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. "இலங்கை அரசாங்கம் விரிவுரையாளர் ஒருவரை விடுவித்து வேறொரு பதவியில் அமர்த்துவதற்கான எழுத்துமூல வேண்டுகோள் விடுக்குமாயின் பல்கலைக்கழக ஆளும் குழுமம் அதனை ஏற்று அவருக்கு இரண்டு வருடங்களுக்கு மேற்படாத விடுமுறை வழங்க முடியும். அவருக்கு உரித்தான சம்பள உயர்வு, ஓய்வு விடுமுறைகள் போன்றவற்றை முடிவு செய்யும் நோக்கில் இந்த விடுமுறை அவரது சேவைக்காலத்தில் கணக்கில் கொள்ளப்படல் வேண்டும்" 14.12.2015 திகதியிட்ட SU/ES/09/PF/AC/549 குறியிட்ட கொண்ட கடிதத்தின் பிரகாரம் ஒரு வருடம் சம்பளமற்ற விடுமுறையில் லங்கா இலெக்ட்ரிசிடி கம்பனி ப்ரைவேட் லிமிடட் நிறுவனத்தின் தலைவராகப்	

		பணியாற்றுவதற்கு விடுவிக்கப் பட்டார். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும் கடிதத்தின் மற்றொரு பிரதி மூலம் தெரியப்படுத்தப்பட்டார். V. மின்வலு மற்றும் மீள்புதிப்பிக்கத்தக்க வலு அமைச்சின் மேலதிக செயலாளர் லங்கா இலெக்ட்ரிசிடி கம்பனி ப்ரைவேட் லிமிடட் நிறுவனத்தின் முதன்மை முகாமையாளருக்கு 25.01.2016ல் அனுப்பி வைத்த கடிதத்தில் திரு. லால் குணசேகரவினது மாதாந்த சம்பளத் தொகையான ரூ. 165,440.93ஐ அவரது சேவைக் காலத்தில் பல்கலைக்கழகத்துக்கு செலவின் ஈடு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொ ள்ளுமாறு கேட்டிருந்தார். அவ்வாறே, லங்கா இலெக்ட்ரிசிடி கம்பனி ப்ரைவேட் லிமிடட் நிறுவனத்தின் முதன்மை முகாமையாளர் 27.01.2016ல் பல்கலைக் கழக பதிவாளருக்கு அனுப்பி வைத்திருந்த வேண்டுகோள் கடிதத்தில் சபரகமுவ பல்கலைக் கழகம் அவருக்கான சம்பளத்தை வழங்க வேண்டும் என தான் மேற்படி கம்பனிக்கு அறிவித்திருப்பதாக தெரிவிக்கப் பட்டிருந்தது.	

		அதன் பிரகாரம் 26.02.2016ல் நடைபெற்ற 213வது ஆளும் குழுமத்தின் கூட்டத்தில் அதற்கான அனுமதி பெறப்பட்டு பல்கலைக்கழகத்துக்கு அவரது சம்பளம் மேற்படி நிறுவனத்திலிருந்து செலவினீடு செய்வதற்கு இணக்கம் காணப்பட்டது. விடுமுறையில் இருக்கும்போது திரு. லால் குணசேகர தனக்கு முதலாம் தர சிரேஷ்ட விரிவுரை யாளராகத் பதவியுயர்வு வழங்கப்படல் வேண்டும் என வேண்டி இருந்தார். சுற்றுலா மௌகாமைத்துவத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் அதன் பீடாதிபதி ஆகியோர் அந்த வேண்டுகோளுக்கான பரிந்துரைகளை வழங்கி இருந்தனர். மேற்படி தரத்திலான பதவி உயர்வுக்குரிய எல்லா தகைமைகளும் அவருக்கு இருந்தபடியால், 24.08.2016ல் கூடிய தெரிவுக் குழுவின் சிபாரிசுகளின் படி, 02.12.2016ல் கூடிய 222வது பல்கலைக்கழக ஆளும் குழுமம் அந்த பதவி உயர்வை அங்கீகரித்தது. VI. 03.07.2017ல் சலுகை அடிப்படையில் கார் அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பித்திருந்தார். அவருக்கு மேற்படி அனுமதிப் பத்திரத்தை வழங்க முடியுமா என	

		விளக்களிக்குமாறு கோரி 16.10.2017ல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப் பட்டது. அதன்படி, 29.08.2018ல் ப.மா.ஆணைக்குழு வுக்கு வாணிப, முதலீட்டுக் கொள்கைக்கான பணிப்பாளர் நாயகம் அனுப்பி வைத்திருந்த அறிவுறுத்தலின் பிரகாரம் வேதனமின்றி சேவைக்கால விடுவிப்பில் இருக்கும் ஒருவருக்கு அவ்வாறான சலுகை அடிப்படை யிலான கார் அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான தகுதி இல்லை. இலங்கை மின்சார சபையின் தலைவர் பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு 27.10.2016 திகதியிட்டு CEB/CH/LECO/2016 குறியீட்டு இலக்கமிட்டு அனுப்பி வைத்திருந்த கடிதத்தின் படி திரு. லால் குணசேகரவினது சேவைக் காலத்தை 19.11.2016 தொடக்கம் மற்றுமொரு வருடத்துக்கு நீடித்துத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தார். அதனை அடுத்து கூடிய 221வது ஆளுகைக் குழுமம் அதற்கான அங்கீகாரத்தை வழங்கியது. இலங்கை மின்சார சபையின் தலைவர் பல்கலை க்கழகத்தின்	

		உபவேந்தருக்கு 07.09.2017 திகதியிட்டு CEB/CH/LECO/2017 குறியீட்டு இலக்கமிட்டு அனுப்பி வைத்திருந்த கடிதத்தின் படி திரு. லால் குணசேகரவினது சேவைக் காலத்தை 19.11.2017 தொடக்கம் மற்றுமொரு வருடத்துக்கு நீடித்துத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தார். திரு. குணசேகரவினது விலக்களிப்புக் காலம் ஏற்கனவே 2 வருடங்களை கடந்திருப்பதன் காரணமாக, 231வது ஆளுகைக் குழும அரங்கில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஸ்தாபனக் கோவையின் 2.2.1ம் பிரிவின் பிரகாரம் 19.11.2017 தொடக்கம் 18.11.2018 வரை தனது பணியைத் தொடருமாறு வேண்டுகோள் விடுத்தது. "உயர்கல்வி நிறுவனமொன்றில் பணியாற்றும் விரிவுரையாளர் ஒருவர் 2.2ன் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இரு வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதியில் விடுவிக்கப்படலாம். ஒரு தேசியப் பணிக்கு இன்றியமையாததாக இருப்பின் அவர் குறிப்பிட்ட காலப் பகுதிக்கு மேலதிக சேவை	

		நீடிப்புடன் விடுவிப்பு செய்யப்படலாம்" அதற்கிணங்க, 19.11.2017 இலிருந்து 18.11.2018 வரை பணிபுரிந்ததைப் போல 19.11.2018 தொடக்கம் மேலும் ஒரு வருடத்துக்கு பணி செய்வதற்காக 243வது ஆளும் குழுமத் தீர்மான த்தின் படி அவருக்கு பல்கலைக்கழக சேவையி லிருந்து விடுவிப்பு வழங்கப்பட்டது. லங்கா இலெக்ட்ரிசிடி கம்பனி ப்ரைவேட் லிமிடட் நிறுவனத்தில் இருந்து 20.12.2018ல் விலகிய திரு. லால் குணசேகர 21.12.2018 தொடக்கம் மூளவும் பல்கலைக்கழகப் பதவியில் சேர்ந்தார். VII. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் பட்டப் பின் கற்கைப் பீடத்தில் தனது முனைவர் கற்கையைத் தொடர்வதற்காக மீதமுள்ள தனது கற்கை விடுமுறையை வழங்குமாறு 20.12.2018ல் சமர்ப்பித்த ஒரு கடிதத்தில் அவர் கோரிக்கை விடுத்திருந்தார். அதன் பிரகாரம், 21வது விடுமுறை மற்றும் பிரதான குழுவில் இது விடயமாக பின்வரும் தகவல்களை மீண்டும்	

		சமர்ப்பிக்குமாறு அவரிடம் வேண்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டது: தாங்கள் மலேசியாவில் இருக்கும் மலாயாப் பல்கலைக்கழத்தில் உங்களின் கலாநிதி கற்கையைத் தொடர்வதற்கு இருக்கிறீர்களா? இனிமேலும் அந்தக் கற்கையைத் தொடராதி ருந்தால், ஏற்கத்தக்க ஒரு அறிக்கை அது தொடர்பாக வழங்கப்படுதல் வேண்டும். அதற்கிணங்க, லங்கா இலெக்ட்ரிசிட்டி கம்பனி ப்ரைவேட் லிமிடட் நிறுவனத்தில் தலைவராகப் பணியாற்றிய காலப் பகுதியில் தனது கற்கையை முறையாகப் பூர்த்தி செய்வதற்கு முடியாமற் போனதாகவும் எனவே, இலங்கைப் சபரகமுவ பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்பின் கற்கை நெறியைத் தொடர்வதற்காகப் புதிதாக பதிவு செய்திருப்பதாகவும் 08.01.2018 திகதியிட்டு அவர் சமர்ப்பித்த கடிதத்தில் தெரிவித்திருந்தார். (a) இதனைக் கருத்திற் கொண்டு 12.02.2019ல்	

		நடைபெற்ற விடுமுறை மற்றும் பிரதான குழுக் கூட்டத்தில் அவருக்கு கற்கை விடுமுறை வழங்குவதற்கான பரிந்துரை செய்யப்பட்டது. 22.02.2019ல் நடைபெற்ற 247வது ஆளுகைக் குழும அரங்கில் அவரது கலா நிதி கற்கையைத் தொடர்வதற்கு கற்கை விடுமுறை மற்றும் புதிய பிணை பத்திரத்தை கைச்சாத்திடுவதற்கு முன்னர் ஒப்புதல் அளிக்கப்பட்ட ரூ. 2,000,000.00 NCAS மானியத்தையும் வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது. 22.03.2019ல் கைச்சாத்திடப் பட்ட புதிய ஒப்பந்தப் பிரகாரம், ரூ. 11,798,603.90 பிணைத் தொகையாகவும், ரூ. 1,533,680.00 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வின் மானியமாகவும் வழங்கப்பட்டதுடன், முன்னைய ஒப்பந்தத்தில் உள்ளதையும் சேர்த்து 21 மாதங்கள் 7 நாட்கள் சம்பளமற்ற கட்டாய சேவை விடுமுறையும் வழங்கப்பட்டன. இங்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றுக்கான ஸ்தாபனக் கோவையின் Xம் அதிகாரத்தின்,	

		இரண்டாம் பகுதியின் 33ம் பிரிவு (d)யின் பிரகாரம் உத்தரவாதப் பிணைப் பத்திரம் கைச்சாத்திடப்பட்டிருப்பதுடன், அவருக்கான விடுமுறையும் வழங்கப்பட்டிருக்கின்றது. மேலே இலக்கம். II மற்றும் இலக்கம் V ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்க ளின் பிரகாரம் லங்கா இலெக்ட்ரிசிடி கம்பனி ப்ரைவேட் லிமிடட் நிறுவனத்தின் தலைவர் பதவி கருதிய விடுவிப்பு, பதவியை ஏற்றுக் கொள்ளல் ஆகியவை அவரது வேண்டுகோளின் பேரிலும் அரச மற்றும் அரச துணைக் கம்பனி ஒன்றின் வழியாக இடம் பெற்றவை எனத் தெரிய வருகிறது. அதற் கிணங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி அமைச்சுக்கான ஸ்தாபனக் கோவையின் 39ம் பிரிவின் Xஆம் அதிகாரத்தின் படி அவர் அந்தப் பதவியைப் பொறுப்பேற்பதற்காக பல்கலைக் கழக ஆளுகைக் குழுமம் தேவையான ஒப்புதல்களை வழங்கி உள்ளது. உயர்கல்வி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கான ஸ்தாபனக் கோவையின் ஆறாம் அதிகாரம் 7.5	

		பிரிவின் பிரகாரம் "தனது கோரிக்கையின் பேரில் ஆணைக்குழுவின்/ உயர்கல்வி நிறுவனத்திலிருந்து வெளியிலுள்ள நிருவனம் ஒன்றுக்குக்கு விடுவிக்கப்பட்ட ஒருவர் தனது வழமையான பணிக்கு மீளமர்த்தப் படும்போது, அவர் விடுவிக்கப் படும் போது பெற்ற சம்பள அளவீட்டின் படியே அது வழங்கப்படல் வேண்டும். விடுவிப்புக் காலத்துக்கு உரித்தான சம்பள உயர்வு போன்ற நலனடைவுகளுக்கு அவர் அருகதைபெற மாட்டார்" திரு. லால் குணசேகர மேற்குறிப்பிட்ட அடிப்ப டையில் தனது விடுவிப்பை பெற்றுக் கொள்ளாத படியால் அந்த சட்ட வரைமுறைகள் அவருக்குப் பொருந்தாது. உயர்கல்வி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கான ஸ்தாபனக் கோவையின் ஐந்தாம் அதிகாரம் 2.3.3 பிரிவின் பிரகாரம் "தனது கோரிக்கையின் பேரில் ஆணைக்குழுவின்/ உயர்கல்வி நிறுவனத்திலிருந்து வெளியிலுள்ள நிருவனம் ஒன்றுக்குக்கு விடுவிக்கப் பட்ட ஒருவரது விடுவிப்புக் காலம் சம்பளமற்றதாகக் கருதப்படுவதுடன் அக்காலப் பகுதியில் உருவாகும்	

		வெற்றிடங்களுக்கான பதவி உயர்வு களுக்கும் அவர் தகுதியாக மாட்டார்" திரு. லால் குணசேகர அவரது பதவியிலிருந்து சிறப்பு நிலைக்கு பதவி உயர்வைப் பெற்றுக் கொண்டார். அதன்படி, புதிய வெற்றிடங்களின் இருப்பு அவருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வுக்கு பொருந்தக் கூடியதல்ல என்ற வகையில் மேற்படி வரைமுறைகளும் அவர் விடயத்தில் பொருந்தாது. அவருக்கான சம்பள உயர்வு வழங்கப்பட்டிருந்த போதிலும் அது பல்கலைக்கழகத்தின் கணக்கி லன்றி லங்கா இலெக்ட்ரிசிடி கம்பனி ப்ரைவேட் லிமிடட் நிறுவனத்தின் கணக்கின் பாற்பட்ட தாகும். உயர்கல்வி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கான ஸ்தாபனக் கோவையின் ஐந்தாம் அதிகாரம் 2.3.2 பிரிவின் படி "அரசாங்கத்தினது வேண்டுகோளின் பிரகாரம் நாட்டின் நலன்கருதி அவர் தற்காலிகமாக விடுவிப்பைப் பெற்றிருந்த போதிலும், ஆணைக்குழு/ உயர்கல்வி நிறுவனம் போன்ற அவரது பணி செய் நிறுவனத்தில் அவரது விடுவிப்புக் காலம்	

		சம்பளமற்றதாக கருதப்படல் வேண்டும்" இதன்படி, வாணிக முதலீட்டுத் திணைக்களம் சலுகை அடிப்படையில் அவருக்கான மகிழ்ந்து அனுமதிப் பத்திரத்தை வழங்க முடியாது என அறிவித்திருந்தது. (b) மேலும், மூன்று வருட கலாநிதிக் கற்கைக்காக செப்டெம்பர் 2018ல் உள்வாங்கப்படும் தொகுதி தெரிவுக்குரிய நேர்முகப் பரீட்சை 13.11.2018 நடைபெறும் எனவும் 27.110.2018க்கு முன்னர் அதற்கான கட்டணங்களை செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கோரி 14.11.2018ல் பட்டப் பின்கற்கைப் பீடத்தினால் வழங்கப்பட்ட இசைவுக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது. அதற்கிணங்க, 20.02.2019ல் எடுத்த பட்டப்பின் கற்கைக்கான சம்பளத்துடன் கூடிய விடுமுறையை நிறைவு செய்து விட்டு 13.06.2020ல் அவர் மீளவும்	

		பணிக்கு சமூக மளித்தார். (c) 17.10.2019 மற்றும் 18.06.2020 ஆகிய திகதிகளிட்ட முன்னேற்ற அறிக்கைகள் வழங்கப் பட்டதுடன் 16.11.2020ல் இககற்கையோடு சம்பந்தப் பட்ட பட்ட தாரிச் சான்றிதழ் அல்லது விபரமான முன்னேற்ற அறிக்கைகளை அனுப்புமாறு கோரி வந்திருந்த கடிதத்தின் பிரகாரம், 20.11.2020 மர்றும் 11.10.2021 ஆகிய திகதிகளில் கல்விசார் நிறுவனப் பிரிவுக்கு அவை அனுப்பி வைக்கப் பட்டன. அவருக்கு பட்டதாரி சான்றிதழ் வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டதுடன், அவர் தனது கற்கையை நிறைவு செய்யவில்லையானால் ஆளும் குழுமத்தின் ஆலோசனையின் படியும் அவரது ஒப்பந்தவியல் நிலைமைகளை கருத்திற் கொண்டும் மேலதிக நடவடிக்கைகளைத் தொடர முடியுமென எதிர்பார்த்திருக்கிறோம்.	

(c)	ஜனவரி 2020 முதல் ஒக்டோபர் 2021 வரை பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா பணியாளர் பிரிவைச் சார்ந்த 13 அதிகாரிகளுக்கு ரூ. 6,081,025.00 ஆய்வுக் கொடுப்பனவாக வழங்கப் பட்டிருக்கிறது. இருந்த போதிலும் கொடுப்பனவு களைப் பெற்றுக் கொண்ட அதிகாரிகள் யாருமே ஆய்வுக்கான கால எல்லையின் இறுதியில் தமது ஆய்வு அறிக்கை களை சமர்ப்பித்திருக்கவில்லை. இவ்வாறு இருக்கையில், மேற்படி விடயத்தை கவனத்தில் கொள்ளாது ஆய்வுக்கு பொறுப்பான குழு அடுத்த வருட ஆய்வு முன்மொழிவுகளுக் கான ஒப்புதல் அளித்து அவற்றுக் கான மானியங்களை வழங்க ஒழுங்கு செய்துள்ளது.	பல்கலைக்கழகத்தின் நிர்வாக அதிகாரிகள் 13 பேருக்கு 2020 மற்றும் 2021ல் ஆய்வுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்ட பின்னர் 6 இறுதி ஆய்வு அறிக்கைகள் இது வரை கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் 2 அறிக்கைகள் டிசம்பரில் ஆய்வு முடிவடைந்ததும் கிடைக்கப்பெறும். தற்போது நடைபெற்று வரும் மற்றும் 5 ஆய்வுக ளுக்கான முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. 2022 வருட முடிவில் அவ்வாய்வு அறிக்கைகள் கிடைக்கப்பெறும் என அறிவித் தல் கிடைத்துள்ளது.	2020, 20201 ஆகிய வருடங்களில் பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பிரிவில் உள்ள 13 அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட ஆய்வுக் கொடுப்பனவுடன் தொடர்பான 7 இறுதி ஆய்வறிக்கைகள் 18.07.2022ல் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றன. டிசம்பர் 2021ல் முடிவடைந்த மற்றொரு ஆய்வினது அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட இருக்கின்றது. 2022 வருட முடிவில் இறுதி ஆய்வறிக்கைகள் கிடைக்கப் பெறும்.
(d)	மழை நீர் சேகரிப்பு மற்றும் அதனைப் பதப்படுத்தும் தொகுதி, வாகனங்களை சுத்தமாக்கும் நிலையம், கழிவுப் பொருட்களை வைப்பதற்குரிய சிறிய கட்டிடம் ஆகியவை வீட்டுத்திட்ட வளாகத்தில் ரூ. 21,000,000.00 செலவில் 2020ல் நிர்மாணிக்கப்பட்டிருந்தன . இருந்த போதிலும் அவை பயன்படுத்தப் படாமல் இருக்கின்றன. மேலும், இரண்டு வருடங்களாக ரூ. 15,000,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட சிறு	கட்டிட வேலைகள் உரிய காலத்தில் முடிவடை ந்த போதிலும், நாட்டில் நிலவிய கொரோனா நோய்த்தொற்று நிலைமை மற்றும் கடும் பொருளாதார மந்தத்தினால் ஏற்பட்ட முடக்க த்தின் காரணமாக தண்ணீர் - மின்சாரம் ஆகிய வசதிகளை இந்தக் கட்டிடங்களுக்கு வழங்குவ தில் சிரமம் ஏற்பட்டதுடன், கட்டிடத்தை குத்தகை க்கு வழங்குவதும் முடியாமற் போனது.	அதே மறுமொழி இங்கும் இடப்படுகிறது **<u>மினி மார்ட் தொடர்பான நடப்பு தகவல்கள்</u>** சரசவிகம, நன்பெரியல் என்ற இடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மினி மார்ட்டுக்கான விலை மனுகோரி இரு தடவைகள் பத்திரிகை விளம்பரங்கள் செய்யப்பட்டன. இவ்விளம்பரங்களுக்காக செலவிடப்பட்ட பாரிய தொகையைக் கருத்திற் கொண்டு பொது

	வணிகத் தொகுதியும் உரிய நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படா மல் இருக்கின்றது.	விற்பனைத் தொகுதிக்கான ஏலம் இருமுறை கோரப்பட்டிருந்த போதிலும் மனுதாரர்கள் எவரும் அதனைப் பெறுவதற்கு முன்வரவில்லை. இம்புல்பே பல்சேவை கூட்டுறவு சங்கத்துக்கு இதனை வாடகைக்கு கொடுக்கப்பட இருக்கின்றது. வீட்டுத் திட்டத்தில் அமைந்துள்ள மழை நீர் சேகரிப்பு மற்றும் அதனை பதனாக்கும் தொகுதி, வாகனங்களை சுத்தமாக்கும் நிலையம் ஆகிய வற்றின் நிர்மாணத்துக்கு ரூ. 21,000,000.00 செலவிடப்படவில்லை. வீட்டுத் திட்டத்தில் அமைந்துள்ள மழை நீர் சேகரிப்பு மற்றும் அதனை பதனாக்கும் தொகுதி, வாகனங்களை சுத்தமாக்கும் நிலையம், கழிவுகளை சேகரித்து வைப்பதற்கான கட்டிடம் ஆகியவற்றின் நிர்மாணத்துக்கு ரூ. 21,000,000.00 செலவிடப்பட்டுள்ளது. நிர்மாணத் துறை தனது பணிகளை முறையாக நிறைவு செய்யாமையால் மின் இணைப்பை பெறுவதற்கு ஒரு வருடத்துக்கும் அதிகமான தாமதம் ஏற்பட்டது. அதுவே நிரந்தரமான	இடங்களிலும், பிரதேச செயலக ங்களில் இருக்கும் அறிவித்தற் பலகைகளிலும் இவ்விளம்பரத்தை செய்வதாக இம்புல்பே பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு அறிவிக்கப் பட்டது. இருந்தபோதிலும் மனுதாரர்கள் எவரும் வரவில்லை. 07.25.2022ல் இடம்பெற்ற வீட்டுவசதிகள் குழுவின் கூட்டத் தில் மினிமார்ட்டை குத்தகைக்கு கொடுப்பதற்கான கலந்துரையா டல் ஒன்று நிகழ்ந்தது. பத்திரிகை விளம்பரங்களுக்காக பெரிய தொகைப் பணம் செலவிடப்பட்டிருப்பதாலும் மனுதாரர்கள் யாரும் தமது கேள்வி மனுக்களை சமர்ப்பிக்காததாலும் அருகில் உள்ள பிரதேச செயலாளர் அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் இதற்கான விளம்பரத்தை செய்வது எனத் தீர்மானிக்கப் பட்டது.

		நீர்வழங்கலையும் தாமதப் படுத்தியது. இப்படியான பல்வேறு காரணங்களால் வீட்டு உரிமையாளர்களை வீட்டுத் தொகுதியில் திட்டமிட்டபடி குடியேற்றுவதற்கு இயலாமற் போனது. கொவ்ட் பெருந்தொற்று காலத்தில் தொடர்ச்சியாக 10 மாதங்கள் வீட்டு உரிமை யாளர்கள் வசிக்காததன் காரணமாக இந்த வசதிகள் முறையாகப் பயன்படுத்தப்பட வில்லை. வீட்டு உரிமையாளர்கள் அனைவரும் முழுவதுமாக குடியேறிய பின்னர் திட்டத்தின் எல்லா வசதிகளையும் பயன்படுத்துவதி பற்றி அறிவித்து, வழமை போல அவற்றைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மழை நீர் சேகரிப்பு - பதப்படுத்தல் தொகுதியை வீட்டுத் திட்டத்துக்குள் அமைப்பதில், இவை ஒற்றை வீட்டுத் திட்டத் தொகுதி மற்றும் குடும்ப விடுதிகள் ஆகியவற்றுக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டன. அதிகம் கட்டிடங்கள் இருக்கும் இடத்திலிருந்து அதிக மழை நீரை சேமிப்பதே இதன் நோக்கமாகும். வாகனங்களை சுத்தம்	

		செய்வதற்கு சேகரிக்கப்பட்ட மழை நீரைப் பயன்படுத்துவதே இத் திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். வீடமைப்புத் திட்டத்தில் இருந்து குறிப்பிடத்தக்க தூரத்தில் ஒதுக்கமாக அமைந்துள்ள மினி மார்ட் எனும் விற்பனை நிலையத்தில் மேற்படி மழை நீர் நிலையத்தை அமைப்பதால் பயன் இல்லை. வணிக வளாகத்துக்கும் வாகனங்களை கழுவும் நிலையத்துக்கும் நீரை வழங்குவதே திட்டத்தின் பிரதான நோக்கம். நீர் சேகரிப்புக்கு உத்தேசிக்கப்பட்ட கட்டிடங்களின் தூரம், அளவு போன்ற காரணங்களால் இது சாத்தியமற்றுப் போனது. ஏலங்கேள் ஆவணங்களில் இவை குறிப்பிடப்படவில்லை. மினி மார்ட் எனப்படும் கட்டிடத்துக்கும் இது பொருந்தும்.	
(e)	2013 - 2015ம் ஆண்டு காலப்பகுதியில் சுவீடன், கோத்தன்பேர்க் பல்கலைக் கழகத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ. 5,434,801.00 நன்கொடைத் தொகை யில் ரூ. 1,676,970.00 மூன்று வருடங்களாக	மேற்படி நிதி எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதை திட்டத்தின் இணைப்பாளர் நிதிக் கிளைக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார். நிதிக் குழுவின் பரிந்துரைகளுடனும் ஆளுகை மன்றத்தில் ஒப்புதலோடும் எதிர்காலத்தில் மேலதிக	நிதிக் குழுவின் பரிந்துரைகளைப் பெறுவதற்குத் தேவையான நடவடி க்கைகள் எடுக்கப்பட்டுக் கொண் டிருக்கின்றன

	குறைவாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது.	நடவடிக்கை கள் தொடரும்.	
(f)	7 பணியாளர்களுக்கு சொந்தமான, 4 முதல் 21 வருடங்களாக மீளப் பெறப் படாத, பேரிடர் கடன்கள், கணினிக் கடன்கள், வாகனக் கடன்கள், பணியாளர் கடன்கள், பண்டிகை முற்பணங்கள் கொண்ட 12 வகை மீதிகள் 31 டிசம்பர் 2021 ஆகும் போதும் மீளப் பெறப்படவில்லை.	பல்கலைக்கழகம் ஒப்பந்த விதிகளை மீறியது, நடப்பில் உள்ள சட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றின் காரணமாக கல்விசார் - கல்விசாரா ஊழியர்களிடமிருந்து நிலுவைகளை மீளப் பெறல் சாத்தியமற்ற தாகியுள்ளது. இவற்றின் விபரங்களை கல்விசார் - கல்விசாரா நிர்வாகப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.	இங்கு குறிப்பிடப்பட்ட பட்டியலில் வரும் திரு. ஏ.எம். ப்ரேமவர்தன என்பவரது பேரிடர் கடனை புதுப்பிப்பதற்காக ரூ. 157,751.68 கொடுப்பனவு 1596ம் இலக்க செலவுச்சீட்டு மூலம் 30.12.2021ல் மேற்கொள்ளப்பட்டது. ஜனவரி 2022 முதல் மாதாந்தம் கடன் தவணைப் பணம் அவரிடமிருந்து அறவிடப்படும். திரு. எம்.டீ. வசந்த லால் என்பவருக்கு எதிராக இரண்டு வழக்குகள் பதுளை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இரத்தினபுரி பொலிஸ் விசே.ட குற்றப் புலனாய்வுப் பிரிவில் திரு. W.D.G.M.I.P. திசாநாயக்க என்பவருக்கு எதிராக முறைப்பாடு ஒன்று செய்யப்பட் டுள்ளது (கோவையின் படி) பலாங்கொடை தொழில் நியாய மன்றத்தில் இருந்த திருமதி. M.L.M.K. திசாநாயக்கவால் தொடர ப்பட்ட வழக்கில் பல்கலைக்கழக த்துக்கு சார்பாக தீர்ப்பு வழங்க ப்பட்டு அந்தத் தீர்ப்புக்கு எதிராக இரத்தினபுரி உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டிரு க்கின்றது. இவற்றுக்கான சட்ட

			நடவடிக்கைகள் இன்னும் தொடர் கின்றன. திருமதி. W.M.D. ப்ரியதர்ஷினி (சேவை இல. 693) கற்கை விடுமுறை ஒப்பந்தம், உத்தரவாதப் பிணைமுறி என்பவற்றை மீறியதன் காரணமாக அவரது சேமலாப நிதியக் கணக்கின் மீதியில் இருந்து அவற்றை மீளப் பெறுவதன் நோக்கில் அதற்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பும்படி பல்கலைக்கழக நிர்வாகம் கேட்டிருந்தும், அவர் சரியாக அதற்கு பதிலளிக்கவில்லை. எனவே அவருக்கெதிராக பலாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தில் 4248/எம் எனும் இலக்க வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 31.10.2019ல் இடம் பெற்ற ஆளுகை மன்றத்தில் மேற்படி நபரிடமிருந்து அவரது சேமலாப நிதியைப் பெற்று கடனை அடைப்பது சம்பந்தமாக, தற்போது இந்த வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதன் காரணமாக இதன் சட்ட விளக்கத்தை சட்டமா அதிபரிடமிருந்து கோருவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான கடிதம் சட்டமா அதிபருக்கு 19.07.2021ல் அனுப்பி வைக்கப்பட்டது. பதில் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை.

			திருமதி A. A. ரொட்ரிகோ கற்கை விடுமுறை ஒப்பந்தம், உத்தரவாதப் பிணைமுறி ஆகியவற்றை மீறியதன் விளைவா க மேற்படி நபரிடமிருந்து வர வேண்டிய தொகையை மீளப் பெறுவதற்காகக் பலாங்கொட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட 3947/எம் இலக்க வழக்கினது தீர்ப்பின் பிரகாரம் மாதாந்தம் ரூ. 10,170.00 கொண்ட 48 தவணை களில் அவரால் இத்தொகை செலுத்தப்படுதல் வேண்டும் எனவும், மீதி அவரது சேமலாப நிதி மீதியில் இருந்து மீளப் பெறப்படும் எனவும் வழக்கு முடிவுக்கு வந்தது. அதன்படி, ஏலவே வழங்குவதற்கு உறுதிப்படுத்தப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ரூ. 4,140.00 வும் ஒவ்வொரு தவணையிலும் செலுத்தவும், மீதியாயுள்ள ரூ. 630,954.59ஐ அவரது சேமலாப நிதியில் இருந்து மீளப் பெறவும் முடியும். திரு. A. K. M. அன்பாஸ் சேமலாப நிதியிலிருந்து கடனை மீளப் பெறும் நோக்கில் அதற்கான விண்ணப்பத்தை அனுப்புவதற்கு இவர் தற்போது வசிக்கும் முகவரியைத் தேடுவதில் சிரமங் கள் உள்ளன. எனினும், இவர் பெற்ற பண்டிகை முற்பணம் மீளப்பெற முடியாத ஒன்றாகவே இருப்பதால்

			மேற்படி முயற்சி தொடர்கிறது.
(g)	மஹாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்துக்கு 2019 முதல் செலுத்தப்பட வேண்டி இருக்கும் ரூ. 2,201,150.00 இன்று வரை செலுத்தப் படாதது கணக்காய்வில் தெரிய வந்துள்ளது.	மஹாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்துக்கு 2019 முதல் செலுத்தப்பட வேண்டி இருக்கும் ரூ. 2,201,150.00 எதிர்காலத்தில் செலுத்தப்படும்.	செலுத்தப்பட வேண்டி இருக்கும் நிலுவைகளை செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்
(h)	ரூ. 123,052,693 செலவில் 2014ல் நிர்மாணிக்கப்பட்ட பல்கலைக்கழக விளையாட்டு மைதானம் மற்றும் அதனோடு இருக்கும் காட்சி விதானம் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப் பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்படு தல் வேண்டும் என பொது நிறுவனங்கள் செயற்குழு 09 ஆகஸ்ட் 2017ல் உத்தரவு பிறப்பித்திருந்தது. ஒப்பந்தக்காரருக்கு வழங்காது தேக்கி வைத்திருந்த நிதி ரூ. 5,156,160.00 இருப்பில் இருந்த போதி லும், 30 மே 2022 ஆகியும் கூட இவ்வுத்தரவை நிறைவேற்றுவதற் கான நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை.	(CECB) மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானம், அதனோடு இணைந்த காட்சி விதானம் ஆகியவற்றை முறையாகவும் திருப்தியுறும் விதத்திலும் நிர்மாணித்து 30 ஏப்ரல் 2012ல் கையளித்ததாக அறிவித்தல் வழங்கப்பட்டிருக்கின்றது. இது விடயமாக மேற்படி பணியகத்துடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பராமரிப்பதற்கான காலமும் 30 ஏப்ரல் 2013ல் நிறைவடைந்துள்ளது. இறுதியான பட்டியல் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் நிதி ஆகியவற்றை மீள வழங்குமாறும் அந் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளதுடன், அவ்வாறு வழங்கப்படாத பட்சத்தில் ஒப்பந்தத்தின் (ICTAD/SBD/04/உட்பிரிவு	உபவேந்தருக்கும் CECB பணிப்பா ளருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து விளையாட்டு மைதானத்தையும் காட்சி விதானத்தையும் சோதனை க்கு உட்படுத்தி தேவையான பரிந்துரைகளை செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க, CECB பணியகம் விளையாட்டு மைதானத்தின் பக்க சுவரை நிர்மாணிப்பது எனவும், மைதானத்தை பராமரிப்பதற் கான பயிற்சியை வழங்கவும் தேவையாயின் அதற்கான ஆளணியை வழங்கவும் இணக்கம் தெரிவித்தது. பரிந்துரை வழங்குவதற்காக உபவேந்தர் அமைத்த குழுவில் பேராசிரியர் கபில திசாநாயக்க, காப்பகப் பொறுப்பாளர் ருவன் ராஜபக்ஷ விளையாட்டு பணிப்பா ளர் லலித் ரோஹன ஆகியோர் இடம்பெற்றனர். இந்தக் குழு மைதான மேற்பரப்பின்

		14.5, 14.7, மற்றும் 19.2)ம் பிரிவின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளைத் தொடர்வதாகவும் அறிவித்துள்ளனர். மூன்றாம் நபர் ஒருவர் ஊடாக அவர்களுக்குரிய நிறுத்திவைக்கப்பட்ட நிதி மற்றும் இறுதி செலுத்துகைகளைப் பயன்படுத்தி மேற்படி வேலைகளைத் தொடர்வது நியாயமற்றது.	முதலாம் அடுக்கை முற்றாக அகற்றி மீள நிர்மாணிக்குமாறு பிரேரித்தது. 2022 மே மாதம் இடம்பெற்ற 284வது ஆளுகை மன்றத்தில் இதுபற்றிய பூரணமான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டது. அந்த மன்றம் மூவர் கொண்ட குழுவொன்றை நியமித்து நடப்புகளை கண்காணிக்குமாறும் பரிந்து ரைகளை வழங்குமாறும் அவர்களிடம் வேண்டியது. அதற்கிணங்க, அக்குழு தனது அறிக்கை யை 2022 ஜூலையில் ஆளுகை மன்றத்துக்கு சமர்ப்பித்தது. தடுத்து வைக்கப்பட்ட நிதியை CECB நிறுவனத்துக்கு மீள வழங்கு மாறும், வெடித்துப் பிளந்த விளையாட்டு மைதான பக்க மதிற் சுவரை மீள அமைப்பது அந் நிறுவனத்தின் பொறுப்பு எனவும் அது கூறியது. அந்த அறிக்கையை கருத்தில் கொண்ட மன்றம் உயர்கல்வி அமைச்சின் ஒப்புதல் இது விடயத்தில் பெறப்படல் வேண்டும் என தீர்மானித்தது. அதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் உயர்கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட விருக்கின்றன.
(i)	நிலையான சொத்துக்களை பதிவு செய்வதற்கான	இதுவரையில் நேரடியாக சரிபார்த்தல், மதிப்பீடு	நிலையான சொத்துக்களான

	பதிவகமொன்றை உருவாக்குவதில், அதற்கான மென் பொருளுக்கு ரூ. 400,000.00வும், 2016ல் இருந்து 2019 வரை தரவுகளைப் பதிவதற்காக ரூ. 968,300.00ம், எல்லாமாக 8 சந்தர்ப்பங்களில் ரூ. ரூ, 1,370,300.00 கொடுப்பனவு செய்யப் பட்டிருக்கிறது. ஆனால், 31.12.2021ல் முடிவடைந்த வருடத்தில் ரூ. 6,614,202,769.00 ஆக உபகரணங்களும் ஆதனங்களுமான கிரயத்தைக் கொள்ளை கொண்ட இந்த திட்டம் 30 மே 2022 ஆகியும் ஆயத்தமாக வில்லை.	செய்தல், காணி, கட்டிடங்கள் உள்ளிட்ட அனைத்து நிலையான சொத்துக்களையும் கணினி மயப்படுத்துதல் ஆகிய செயற்பாடு களின் வழியாக நிலையான சொத்துக்களுக்கான பதிவகம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அந்த வகையில் பின்வரும் முயற்சிகள் இடம்பெற்றுள்ளன: • நிலையான சொத்துக்களுக்கான குறியீடுகளை உருவாக்குதல் • அவ்வாறு உருவான குறியீடுகளைக் கொண்டு முகாமைத்துவ பீடத்தின் கணினி மையத்தில் நிலையான சொத்துக்களுக்கான பதிவகத்தை ஸ்தாபித்தல். இதுவிடயாக பார்கோட் முறையில் இவற்றை மேற்கொள்ளும் மென்பொருள் நிறுவனங்க ளோடு பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு வருகிறது	பதிவகத்தை உருவாக்குவதற்கு பார்கோடுகளை வாசித்தறிவத ற்குத் தேவையான உபகரணங் கள் மற்றும் அவற்றுக்கான காகிதாதி களைக் கொள்வனவு செய்வதற் கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.
(j)	ரூ. 1,000,000.00 பெறுமதியில் நூலகத்துக்கான புத்தகங் களைக் கொள்வனவு செய்வதற்கான திட்டம் இருந்த போதிலும், 2021 பாதீட்டில் ரூ. 7,000,000.00	2019ம் ஆண்டு தொடக்கம் போதுமான மூலதன ஒதுக்கீடுகள் வழங்கப் படாதது, 07/2019 இலக்க சுற்று நிருபத்தின் படி மூலதனப் பண்டங்கள்	அதே மறுமொழி இங்கும் இடப்படுகிறது

	இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. குறிப்பிட்ட வருடத்தில் வருடாந்தப் பாதீடு மற்றும் கொள்முதல் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி தேவைக்காகப் செலவிட ப்பட்ட ரூ. 8,305,296.00 செயற் திறனோடு பயன்படுத்தப்பட வில்லை என்பது கணக்காய்வின் அவதானத்துக்கு உட்பட்டிருக்கிறது.	கொள்முதல் நிறுத்தப்பட்டது, 2020ல் தோன்றிய கோவிட் பெருந்தொற்று ஆகிய காரணங்களால் நூலகத்துகான புத்தகங்கள் முறையாக கொள்வனவு செய்யப்படவில்லை. ஆகையால், 2020 பாதீட்டில் ரூ. 15 மில்லியன் கொள்முதல் திட்டத்தோடு இதற்கான ஒப்புதல் பெறப்பட்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, எல்லாப் புத்தகங்களையும் கொள்வனவு செய்வதற்கான விலைக் கட்டளைகளும் 2021ல் வழங்கப்பட்டன. அதற்கிணங்க கொள்வனவு செயன்முறை நிறைவடைந்த போதிலும் புத்தகங்களுக்கான கட்டளை வழங்கப்படவில்லை. 2021ம் ஆண்டுக்கான கொள்வனவுத் திட்டத்தின்படி, ரூ. 1 மில்லியன் பெறுமதியான புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த் துள்ளோம். ரூ. 7 மில்லியன் பாதீட்டிலிருந்தும், ரூ. 2.6 மில்லியன் உயர்கல்வி அமைச்சில் இருந்தும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றில் இருந்து ரூ. 8.9 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு இடம்பெற்றது.	
(k)	15 மே 2022ல் ஆய்வில் உள்ளபடி, கல்விசார் பணி	இலங்கைப் பல்கலைக்கழகங்களில்	வழங்கப்பட்ட அதே பதில்களைக் கருத்திற்

	நிலைப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட 461 பதவிகளில் 113 வெற்றிடங்களும், கல்விசாரா பணி நிலைப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட 541 பதவிகளில் 149 வெற்றிடங்களும் காணப்பட்டன. கல்விசாரா பணி நிலைப் பிரிவில் காணப்பட்ட மேற்படி வெற்றிடங்களின் விளைவாக இவ்வருடத்தில் ரூ. 17,947,941.00 விடுமுறை மற்றும் மிகை நேர கொடுப்பனவுகள் வழங்கப் பட வேண்டி வந்தது.	அனுமதிக்கப்பட்ட 2017 பணி நிலைப் பிரிவு அறிக்கையின் படி, 31.03.2022ல் 94 நிரந்தர வெற்றிடங்கள் இருந்தன. தற்காலிக விரிவுரையாளர் பதவிகள் 19ம் காணப்பட்டன. இவற்றுக்கான விளக்கம் பின்வருமாறு: i. 31.03.2022ல் உள்ளபடி கல்விசார் நிரந்தர பணி நிலைப் பிரிவுக்குள் இருந்த வெற்றிடங்களில், 27 அங்கீகரிக்கப்பட்ட தலைமைப் பேராசிரியர்களுக் கான 24 வெற்றிடங்களும் உள்ளன. ஏனைய பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர் களுக்கான பணி நிலைப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட தொகை 381 ஆகும். 31.03.2022ல் உள்ளபடி மேற்படி தொகையிலான வெற்றிடம் 70ஆகக் குறைக்கப்பட்டுள் ளது. தத்தமது விரிவுரையாளர்களது வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ளும் நோக்கில் ஒவ்வொரு கல்விப் பிரிவுகளும் புதிய ஆட்சேர்ப்பிற்காக 2021.12.31 மற்றும் 2022. 03.02	கொள்க. அத்துடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 4/2022ம் இலக்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 3/2022ம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை ஆகியவற்றின் படி 27.04.2022 தொடக்கம் கல்விசார், கல்விசாராத பணி நிலைப் பிரிவுகளுக்கான ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

		ஆகிய தினங்களில் விளம்பரங்களை வெளியிட்டுள்ளன. அதன்படி, ஜனவரி 2022 முதல் 19 மே 2022 வரை 6 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டு உள்ளதுடன் எதிர்காலத்தில் பெறப்பட்டிருக்கும் விண்ணப்பங்களுக்கான நேர்முகப் பரீட்சகளும் இடம்பெற உள்ளன. தலைமைப் பேராசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான கோரிக்கைகள் எதுவும் கல்விப் பிரிவுகள் எவற்றினாலும் முன்வைக்கப் படவில்லை. ii. அங்கீகரிக்கப்பட்ட 53 தற்காலிக உதவி விரிவுரையாளர்களில் வெற்றிடங்களது தொகை 31.12.2022ல் உள்ளபடி, 10ஆகத் திருத்தப்படுதல் வேண்டும். தற்காலிகமாய் பணிக்கு அமர்வோர் குறுகிய காலத்தில் தமது பணியைத் துறந்து செல்வதன் காரணமாக இவ்வெற்றிடங்களின் தொகை தொடர்ச்சியாக மாற்றத்துக்கு உட்படுகின்றது. (i)ல் குறிப்பிட்டபடி	26.07.2022ல் உள்ளபடி, கல்விசார் பணியாளர்களுக்கான வெற்றிட ங்கள் பின்வருமாறு உள்ளன: ● தொழில்நுட்ப பணியாளர் வெற்றிடங்கள் - 38. ● இலிகிதர்கள் மற்றும் பணி உதவியாளர் வெற்றிடங்கள் - 26. ● ஆரம்ப நிலைப் பணியாளர் வெற்றிடங்கள் - 73. 26.07.2022ல் உள்ளபடி நிரந்தர கல்விசாரா பணியாளர்கள் தொகை 393. 31.08.2021 திகதியிட்ட 21/1596/304/134ம் இலக்க பொது செலவினங்களுக்கான மீளாய்வு அமைச்சரவைத் தீர்மானத்தின் படி எல்லா ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன. இதன் காரணமாகவே பல்கலைக்

		வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப்பரீட்சைகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, (i) மற்றும் (ii)ல் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களின் மொத்தத் தொகை 113ஆக அதிகரித்துள்ளது. (ii)ல் குறிப்பிடப்பட்ட புதியவர்களை உள்வாங்குவதற்கான ஒப்புதல் மற்றும் தற்காலிக உதவி விரிவுரையாளர்கள் நியமனத்தில் உள்ள வேறுபாடு போன்ற காரணிகள் இதனை விளைவித்துள்ளன. 31.12.2020ல் உள்ளபடி, கல்விசாரா பணியாளர் - களுக்கான வெற்றிடங்கள் பின்வருமாறு உள்ளன: • தொழில்நுட்ப பணியாளர் வெற்றிடங்கள் - 47. • இலிகிதர்கள் மற்றும் பணி உதவியாளர் வெற்றிடங்கள் - 26. • ஆரம்ப நிலைப் பணியாளர் வெற்றிடங்கள் - 58. 2017 பணி நிலை அறிக்கையின்படி புதிதாக ஆரம்பிக்கப்பட்ட துறைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட கல்வி	கழகத்தின் அனைத்து கல்விசாரா பணியாளர்களது வெற்றிடங்களும் அதிகரிப்பைக் காட்டுகின்றன. மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 4/2022 இலக்க கடிதம் மற்றும் 3/2022 இலக்க தேசிய பாதீட்டு சுற்று நிருபம் ஆகியவற்றின் பிரகாரம் கல்விசார், கல்விசாரா பணியாளர்களது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தற்காலிகமாக 27.04.2022 முதல் இடை நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன.

		சாரா பணியாளர் களது விபரங்கள் பின்வருமாறு: அங்கீகரிக்கப்பட்ட நிரந்தரப் பணியாளர்கள் -530 தற்காலிக கள ஆய்வு உதவியாளர்கள் - 11 அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பணியாளர்கள் - 541 அதன்பிரகாரம், 31.12.2020ல் இருந்த நிலைவரத்தில், 530 பணி நிலைகளில் 399 வெற்றிடங்கள் நிரப்பப் பட்டிருக்கின்றன. 17.05.2022 ஆகையில் நிரந்தர கல்விசாரா பணியாளர்களின் தொகை 392 ஆகும். 31 ஆகஸ்ட் 2021ல் எடுக்கப்பட்ட 21/1596/304/134ம் இலக்க பொது செலவினங்கள் மீளாய்வு அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் எல்லா ஆட்சேர்ப்புகளும் தற்சமயம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டன. இதன் காரணமாக கல்விசாரா பணியாளர்களது தொகை அதிகரிக்கிறது.	

(l)	கணக்காய்வின் படி பாதீட்டு ஒதுக்கீடுகளுக்கு மிகையாக, இரண்டு விடயங்களுக்கு இவ்வருடத்தில் ரூ. 14,226,561.00 செலவு செய்யப்பட்டிருக்கின்றது. அவை ஒதுக்கீட்டின் 33 மற்றும் 47 வீதங்களுக்கு இடையிலான வையாகும்.	2021ம் ஆண்டுக்கான மீண்டெழும் செலவினங்களுக்கான ஒதுக்கீடாக ரூ. 340,000,000.00 இருந்தபோதிலும் அதே வருடத்தில் மேலதிகமாக ரூ. 80,000,000.00 வும் பல்கலைக்கழகத்துக்கு கிடைக்கப் பெற்றது. எனவே, அத்தொகையும் பல்கலைக்கழக தேவைகளுக்காகப் பயன்படுத்தப் பட்டது. இதன் விளைவாக உள்ளபடியான ஒதுக்கீட்டுத் தொகைக்கு மேலதிகமான செலவினங்களாக அவை அமைந்தன. பல்கலைக்கழக வளாகத்தில் நிகழ்ந்த பட்டமளிப்பு விழா நிகழ்வுக்கான செலவினங்களோடு வளாகப் பராமரிப்பு பணிகளுக்கான செலவுகளையும் ஏற்க நேர்ந்தது.	2021 மே 4ம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் மீண்டெழும் செலவினங்களுக்கான ஒதுக்கீட்டைக் கோரி மேலதிக நிதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அதே விண்ணப்பம் நிதிக் குழுவுக்கும் மே மாதத்தில் அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கிணங்க, டிசம்பரில் ரூ. 80 மில்லியன் ஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் வழங்கப் பட்டு, அதற்கேற்ப பல்கலைக் கழகத்தின் பாதீடு மீளமைத்து வழங்கப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு செலவின முன்மதிப்பீடு டிசம்பரில் அனுப்பி வைக்கப்படும்.

சிரேஷ்ட பேராசிரியர் R. M. U. S. K. ரத்னாயக்க

உபவேந்தர்